விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 17 ஞாயிற்றுக்கிழமை (02.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 226




## போர்க்குற்றங்கள் தொடர்பில்

# சர்வதேச விசாரணை

## 5 கட்சிகள் கூட்டாக வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படுவது அவசியமானது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன கூட்டாக நேற்று வலியுறுத்தியுள்ளன.

(விரிவான செய்திகள் 12ஆம் பக்கம்)



















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனை

மட்டுவில் தெற்கு பருத்தித்துறை வீதியில், துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 27 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். (1282)

தொடர்புகளுக்கு:- 0778730129

## விற்பனைக்கு

லெனோவா ரப் ( I.Pad )
விற்பனைக்குண்டு.
புதியவை - 8"x5" அளவு (1283)

தொடர்புகளுக்கு :0714182469

## தையல்

இந்தியாவில் 8 வருட கால அனுபவம் வாய்ந்த பெண் றெய்லரால், சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும். (1286)
இடம்:- குமாரசாமி வீதி,
(யாழ்பல்கலைக்கழகம் அருகில்)

தொடர்பு :- 0766399277

## 6 மாதங்களில் வெளிநாட்டு விசா & தொழில் ஏற்பாட்டுடன்

SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams

Business &
Hotel Management

புதிய பிரிவு ஆரம்பம் - செவ்வாய், வியாழன் 10.00 am
Call:077 36 16 798
Sikaram (Pvt) Ltd.
இல. 275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 11

## பெண் லிகிதர் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் ஸ்தாபனத்திற்கு பெண் உதவியாளர் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(கல்வித்தகைமை க.பொ.தசாதாரணதரம்)
(C- 1717)

தொடர்புகளுக்கு :
021 222 7893
077 967 0184

## விற்பனைக்குண்டு

Fridge - bottle cooler,
display fridge
A/C compreser
Ice Cream Corn Machine (1281)
கண்ணாடி அலுமாரிகள்
என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 0775967083

## உழவு இயந்திர கலப்பை தேவை

உழவு இயந்திர இங்கிலன்ட் கலப்பை,இங்கிலன்ட் டிஸ் என்பன தேவை.

விற்பனைக்குள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் (இ)

தொலைபேசி இல. - 0776341216

## தேவை

அசைவ உணவகமொன்றுக்கு கொத்து றொட்டி, றொட்டி தயாரிக்க தெரிந்த ஒருவரும் - உதவியாளர் ஒருவரும் உடனடியாக தேவை. (1278)

தொடர்பு :- 0771258072

## SPEED

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.




ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-1714)

## அஞ்சலி



பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதியும் தலைசிறந்த
விண்வெளி விஞ்ஞானியுமான
மனித நேயச் சிந்தனையாளர்
**கலாநிதி ஏ.பி.ஜே. அப்துல்கலாம்**
அவர்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
(1280)

No. 20, Adiyapatham Road,
Thirunelvely.
021-205 2262

Alagappa University Campus
Jaffna Centre
MS Ed Spring
Education Research Library

## 31ம் நாள் நினைவஞ்சலி



அமரர் பிரேம் ஆனந் பிரேம்சங்கர்

மண்ணில் 01 - 12 -2001
விண்ணில் 03 - 07 -2015

நெஞ்சம் மறக்கவில்லை நினைவுகள் -
அழிவதில்லை
என்றென்றும் எம்முடனே நீரிருப்பீர் என்று
பாசமுடன் உன்னை வளர்த்தோம் - எம்மை
ஆறாத்துயரில் அலையவிட்டு எங்கு சென்றாய்
- எம்முயிரே

மண்டான்
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(C-1715)

ஆறாத்துயரில்
அவலமுறும்
குடும்பத்தினர்

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

### ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

### கிராம மட்டத்தில் விவசாய விரிவாக்கல் சேவை ஆரம்பிப்போம்...

- பயிர் செய்கைக்கு தேவைப்படும் அனைத்து விதைகளையும், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் வழங்கக்கூடிய வகையில் நவீன மயமாக்குவேன்
- உலர் வலயத்தில் நீர் பற்றாக்குறைக்கு மாற்று வழியினை குறுகிய காலத்தில் வடமாகாண விவசாய சம்மேளண தலைவர்களை ஒன்றிணைத்து ஜனாதிபதி செயலகமூடாக தீர்விணைப் பெற்றுக் கொடுப்பேன்
- வடமாகாண விவசாயப் பயிர்ச்செய்கைக்கு கடந்த காலங்களில் கடன் பெற்று சரியான அனுகுமுறையின்மையினாலும் சீரற்ற காலநிலைகளினாலும் நஷ்டமடைந்தவர்கள் சரியாக உறுதிப்படுத்துவதன் மூலம் ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் வர்த்தமானி மூலம் இரத்துச் செய்ய வழி செய்வேன்.
- காணியற்ற விவசாயிகளுக்கு ஒவ்வொரு விவசாயிகளுக்கும் காணித்துண்டொன்று வழங்க ஜனாதிபதி ஊடாக பரிந்துரை செய்வேன்

(சி-312)



X
1

**அங்கஜன் இராமநாதன்**
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

இது ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச் சின்னம்

புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# ஐ.நா முன்னெடுக்கும் திட்டங்களில் அரசு, வட மாகாணசபையின் ஆலோசனைகள் கவனிக்கப்படும்

## ஐ.நா செயலக பேச்சாளர் தெரிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் குறிப்பாக வடக்கில் ஐ.நாவின் சார்பில் எந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக இருந்தாலும் அது அரசாங்கம், வட மாகாணசபை மற்றும் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினருடைய ஆலோசனையுடனேயே நடைமுறைப்படுத்தப்படும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....



## மினிபஸ் விபத்து; 10 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற மினி பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் முன்னால் சென்றவர்களை மோதியதுடன் பஸ்ஸும் வயலில் தடம்புரண்டதால் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகினர்.

இதில் ஆறு பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்று சனிக்கிழமை மாலை

15 ஆம் பக்கம் பார்க்க....

## துப்பாக்கிச் சூடு விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு புளுமெண்டல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின் பேரில் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பலரிடம்

15 ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சுப் பதவிகள் எதுவும் எனக்கு அவசியமில்லை - சரத்

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்கு செல்லவோ, அமைச்சு பதவிகளை பெறவோ? தமக்கு அவசியமில்லை என ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பதவிகள் தேவையாக இருந்தால், பெரிய கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டிருக்கலாம் எனவும் மக்களை சரியான வழிக்கு இட்டுச் செல்ல வேண்டிய தேவை காரணமாகவே தனியான சக்தியை

15 ஆம் பக்கம் பார்க்க....



## ரூ.114 மில்லியனை செலுத்த கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பயணங்களுக்காக தர வேண்டிய பாக்கியை செலுத்துமாறு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஜனாதிபதி செயலகத்திடம் கோரியுள்ளது

2011ஆம் ஆண்டு முதல் மகிந்த ராஜபக்ஷ, தமது பயணங்களுக்காக செலுத்த வேண்டிய 114 மில்லியன் ரூபாய்களை செலுத்துமாறு எயார்லைன்ஸ் கேட்டுள்ளது.

15 ஆம் பக்கம் பார்க்க....

## அங்கும் இங்கும் கட்சி தாவல்

## ஐ.தே.க → ← ஐ.ம.சு.மு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஐக்கிய மக்கள் சுதந்திர முனணிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைப்பாளர் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தாவியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பலப்பிட்டிய தொகுதி அமைப்பாளர் கமல் ஜயந்த டி சில்வா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டார்.


எல்பிட்டியவில் நேற்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வெற்றிலையை கொடுத்து அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டார்.

இதனிடையே பலப்பிட்டிய தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் ஏ.தயாரத்ன டி சில்வா, சுமார் ஆயிரம் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுடன் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்

15 ஆம் பக்கம் பார்க்க....

## உள்நாட்டு விசாரணையில் சர்வதேச தலையீடு

### ஐ.நா அறிக்கையில் அது தெரிகிறது - பீரிஸ்



(கொழும்பு)

போர் தொடர்பான உத்தேச உள்நாட்டு விசாரணையில் சர்வதேச சமூகம் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளமை தொடர்பில் கசிந்துள்ள ஐக்கிய நாடுகளின் அறிக்கை மூலம் தெளிவாகியுள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு தொழில்நுட்ப உதவி

15 ஆம் பக்கம் பார்க்க....

## சிவபூமி மாணவர்கள் ஒலிம்பிக்கில் சாதனை



(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவர்கள் ... பெற்ற விசேட ஒலிம்பிக் போட்டியில் ... வெள்ளிப் பதக்கம், ஒரு வெண்

15 ஆம் பக்கம் பார்க்க....

## தங்கம் கடத்திய இலங்கையர் கைது

(கொழும்பு)

ஒரு கோடி இருபது லட்சம் ரூபாய் பெறுமதியான தங்கத்தை கடத்திய இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து இந்த தங்கம் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாட்டுக்குள் எடுத்துவரப்படவிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் இருபத்து நான்கு தங்க பிஸ்கட்களை கடத்தி வந்துள்ள நிலையில் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினர் குறித்த நபரை கைது செய்துள்ள

15 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை காவற்றுறை நாடாக மாறியுள்ளதாம்

## கோத்தபாய கூறுகிறார்

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பிரதிபலன் காரணமாக இலங்கை தற்போது காவற்றுறை நாடாக மாறி யுள்ளதாக முன்னாள் பாது காப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ தெரிவித்து ள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவான கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தற்போதைய அரசா ங்கத்தின் பல்வேறு தொந்தரவு களை எதிர் நோக்கி வருகின்றனர். காவற்றுறையின் நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் இலஞ்ச ஊழல்ஆணைக்குழு ஆகியவற்றின் நடவ டிக்கைகள் காவற்றுறை நாடு என்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

அத்துடன் நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்கள், தான் உட்பட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வாட்டி வதைத்து வருகின்றனர்.

முன்னாள் அரசாங்கத்துடன் தொடர்பு வைத்திருந்தமை குறித்து காவற்றுறையினர் பல தொழிலதிபர்களிடமும் விசரணைகளை நடத்தியுள்ளதாக கோத்தபாய ராஜ ஷ்க்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)




## விளையாட்டு விழா

அறிவொளி மழலைகள் கல்விப்பூங்கா மாணவர்களின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு அ.மரியநாதன் தலைமையில்அறிவொளி சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின்வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக உடுவில் வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. செல்வநாயகம், குப்பிளான் தெற்கு ஜே/210 கிராம சேவையாளர் பி.மயூரன்,யா/இராமநாதன் பெண்கள் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் திருமதி.ஆனந்தி சிவஞானசுந்தரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. பத்மினி சிதம்பரநாதன், குப்பிளான் தெற்கு ஜே/210 அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஏ.அமிர்தா,யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் உபதலைவர் மா.மகேந்திரம்,ஏழாலை லெனின் சனசமூக நிலையத்தின் தலைவர் எஸ்.சோதிலிங்கம்,குப்பிளான் தெற்கு ஞானகலா சனசமூக நிலையத்தின் தலைவர் ரி.சதீஸ்குமார்,யாழ்.மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் நா.இன்பநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# போரால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், மாணவர்களின் உளநல நன்னிலையைப் பேணுவதற்காக 90 உளவளத்துறை ஆசிரியர்கள் நியமனம்

## வடக்கு கல்வி அமைச்சு நடவடிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உள சமூக நன்னிலையை பேணுவதற்காக 90 பயிற்றப்பட்ட உளவளத்துறை ஆசிரியர்கள் நிரந்தர சேவையில் உள்வாங்கப்படவுள்ளார்கள் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியில் போருக்கு பின்னரான காலப் பகுதியில் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு கற்றல், கற்பித்தல், கல்வி முறையில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நீண்டகால தாக்கமானது தற்போதைய கல்வி அமைப்பு முறையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே கல்வித் துறையில் உளசமூகநன்னிலையை பேணுவதற்கு பாடசாலையில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் அர்ப்பணிப் போடு பணியாற்ற வேண்டும்.

வடமாகாணத்தில்தற்போது 24 நிரந்தர உளவளத்துறை ஆசிரியர்கள் உள்ளார்கள். இவர்கள் ஒவ்வொரு வலயத்துக்கும் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு கீழ் பாடசாலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்த ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் உளவளத் துறை ஆசிரியராக சேவை புரிகின்றார்கள். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உளசமூகநன்னிலையை பேணுவது உடனடி தேவையாக இருப்பதால் தற்காலிகமாகவுள்ள உளவளத்துறை ஆசிரியர்கள் தேர்தல் முடிவுற்ற பின்னர் நிரந்தர நியமனத்துக்குள் உள்வாங் கப்படவுள்ளார்கள்.

ஒவ்வொரு 1 AB,1C, 2 ஆம் வகை, 3 ஆம் வகை பாடசாலைகளில் உளவள துறைக்கு என தனியான அறை ஒதுக்கப்பட்டு அங்கு ஆசிரியர், மாணவர் களுக்கான உளவள ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும் என ஒவ்வொரு பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளோம்.

இதன்மூலம் வடமாகாண கல்வி செயற்பாட்டில் ஒரு நல்ல நிலையை உருவாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## ஐ.தே.க. கண்டனம்

அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குழுவினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

சிறந்த அரசியல் கலாசாரத்தைக் காண விருப்பமில்லாத குழுவினர் வன்முறையைக் கட்டவிழ்த்து தேர்தலில் வெல்ல முயலும் சம்பவமாகவே புளுமெண்டால் பிளேஸ் வன்முறை வெளிக் காட்டப்படுவதாக ஐ.தே.க. பொதுச் செயலர் அமைச்சர் கபீர் ஹாசிம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நாகரிகமான அரசியலை முன்னெடுக்கும் முயற்சிகள் இத்தகைய அநாகரிகமான செயல்களால் மீண்டும் பின்னோக்கிச் செல்ல ஒருபோதும் இடமளியோம்.

ஜனவரி 8 ஆம் திகதி நாட்டில் உருவான நல்லாட்சி மூலம் தேர்தல் அமைதியாக இதுவரை முன் னெடுக்கப் படுகிறது. இந்தத் தாக்குதல் தொடர்பாக துரிதமான விசாரணையை முன் னெடுக்குமாறும் பாதுகாப்புத் தரப் பினரை அமைச்சர் கேட்டுள்ளார். கொலையுண்ட ஐ.தே.கவின் செயற்பாட்டு உறுப்பினரின் மறைவு குறித்து கட்சி ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கின்றது. படுகாயமுற்று வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் கட்சிக்காரர்களின் துரிதமான சுகத்துக்கும் பிரார்த்திக்கின்றோம்.

இதுபோன்ற சம்பவங்களால் கலக்கம் கொள்ளாமல் நல்லாட்சியை இலக்கு வைத்து அமைதியான தேர்தலை நடத்துவதற்காக சகல அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் உறுதிபூணுவது அவசியமென்றும் ஐ.தே.க.மீண்டும் வலியுறுத்துவதாகவும் கபீர ஹாசிம் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் இயற்கையை நேசிக்கும் ஒருவராகுங்கள்

இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் நிறுவனத்தின் ஊடாக நீங்களும் இயற்கையை நேசிக்கும் ஒருவராகுங்கள் என்ற தொனிப் பொருளில் 3 மாதகால கற்கைநெறிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறியில் இயற்கையை நேசிக்கின்ற பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகள் க.பொ.உயர்தரம் வரை கல்வியினை மேற்கொண்டு பூர்த்தி செய்தவர்கள் என ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

3 மாதகால இக்கற்கை நெறியில் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான விரிவுரைகள், கள விஜயங்கள் மற்றும் கள ஆய்வுகள், பாடசாலை மட்டச் செயற்பாடுகள், பறவை ஆய்வுகள், ஆய்வு முகாம்கள், கிராம மட்டச் செயற்பாடுகள் என்பன கற்கை நெறிகளாக அமையவுள்ளன.

இக்கற்கை நெறியின் பயிற்சிக் கட்டணமாக மூவாயிரம் ரூபா செலுத்தப்பட வேண்டும். பயிற்சி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ்களும் வழங்கப்படும். இது தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ள இல.15, கச்சேரி, நல்லூர் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்துடன் தொடர்புகொள்ள முடியும்.(இ-5)

# மாசேரி பழுதனை வீதி புனரமைக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதிக்கு கிழக்குப் பக்கமாக உள்ள மாசேரி பழுதனை வீதி நீண்டகாலமாக புனரமைப்பின்றி பற்றைகளால் மூடப்பட்டு காணப்படுவதாக மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியானது பற்றைகளால் மூடி காணப்படுவதால் வரணிப் பிரதேசத்திலுள்ள மாசேரி, மாவில், காட்டுப்புலம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வரணி பிரதான வீதிக்கு விரைவாக வருவதில் தாமதம் ஏற்படுகின்றது.

அத்துடன் நீண்டகாலமாக இவ் வீதியானது கவனிப்பாரின்றிய நிலையில் இருப்பதால் எந்தவொரு பொதுமக்களும் இவ்வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபடுவதில்லை.

இது தொடர்பான புனரமைப்பிற்கும் இதுவரை எந்தவொரு அதிகாரியும் முன்வரவில்லை. ஆனால் இவ்வீதியினை புனரமைத்துத் தருமாறு அங்குள்ள மக்களால் உரிய தரப்பினருக்கு வேண்டுகோள் விடுத்தும் எந்தவொரு பயனும் கிடைக்கப்பெறவில்லை என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட வீதியினை புனரமைத்து போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் திருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

# பரிசளிப்பு விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்திய சைவசமயப் போட்டிப் பரீட்சையின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு உரும்பிராய் ஸ்ரீ வைத்தீஸ்வரா பொன் விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தெய்வலக்ஷ்மி தேவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆனைப்பந்தி குருகுலம் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அனந்தலெட்சுமி மாணிக்கராஜ சர்மா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக உரும்பிராய் ஜே/263 கிராம சேவையாளர் செ.செல்வச்சந்திரன், ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய தலைவர் து.சிவகுமார், ஸ்ரீவைத்தீஸ்வராசனசமூகநிலையத் தலைவர் எஸ்.சதீஸ்வரன், நாகபூஷணி அம்பாள் மகளிர் சங்கத்தலைவர் திருமதி சி.உதாயினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது ஆசியுரையினை ஆலய மஹோற்சவ குரு சிவஸ்ரீ நவரத்தின பிரபுதேவக் குருக்கள் வழங்கவுள்ளதோடு வரவேற்புரையினை இந்து இளைஞர் மன்றத் தலைவர் பூ.ஜெனரூபன் வழங்கவுள்ளார். (இ-5)


பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்.மாவட்டம்



5

(C-310)

ந.மதிஅழகராசா (மதி)
வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்

X 5

தமிழர் விடுதலைக் கூட்டணி

வெறும் பேச்சுக்களை நம்புபவன் தமிழன் அல்ல...



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 45 செவ் 4 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BSC/ வங்கி உதவி முகாமையாளர்<br>தொ.இ: B/1113 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 20 செவ் 8 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:வங்கியாளர்<br>தொ.இ: G/1775 |
| பிறப்பு: 1976 RC<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 42 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில<br>தொ.இ: B/1115 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 37 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1782 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 27 செவ் 2 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில் A/L/ தனியார் தொழில<br>தொ.இ: B/1121 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 32 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: G/1783 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 21 செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில் O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/1122 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 34 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: தாதி நேர்வே PR<br>தொ.இ: G/1784 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

தமிழர் தேசியம், தாயகம், சுயாட்சிக் கொள்கையின்
விசுவாசியாக, ஒடுக்கப்படும், ஏமாற்றப்படும் மக்களின்
உரிமைக்குரலாக, வளர்முக சமூகங்களின் புதிய அரசியல்
தலைமையின் ஆரம்பமாகச் செயற்படும் அண்ணன்
இராசேந்திரனை வெற்றிபெற வைப்போம்.



(C-308)

ஆறுமுகம் நடேசு
இராசேந்திரன்

HNDA,APFA,ACA,FMAAT,FIPFM(UK)
சிரேஷ்ட கணக்காளர்,
முன்னாள் தலைவர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை.

சுயேட்சைக் குழு
இலக்கம் - 2

X 1


# ராசி பலன்

02.08.2015
(ஆடி 17, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துதியை பிற்பகல் 1.10 மணிவரை
அவிட்டம் முற்பகல் 8.46 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சுபநேரம் 9.03-10.33மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சந் | கிரகநிலை | | சூரி செவ் |
| | | | குரு சுக் புதன் |
| | | சனி | ராகு |

**மீனம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும், தூரதேசத்திலிருந்து வரும் தகவல்கள் ஆச்சரியப்பட வைக்கும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்:** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**இடபம்:** சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு உதவியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும்.

**மிதுனம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், ஆரோக்கியம் சீரகி ஆனந்தப்படுத்தும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்:** விருப்பங்கள் நிறைவேற விரதவழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள், உறவினர்கள் தொடர்பான சில செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், கல்யாணக்கனவுகள் நனவாகலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நிலை உயரும்.

**தனுசு:** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், காரிய அனுகூலமுண்டு, மனதில் புதிய கற்பனைகள் தோன்றும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் நாள், பயணங்களால் பலனுண்டு, பொதுவாழ்வில் கௌரவம் கூடும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும்.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், உடல் நலம் சீரகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யா/அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கமைய 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5)

# நல்லூரில் புதிய யோகா பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோக அரங்கம் நல்லூர்த் தேரடிக்கு அண்மையாக அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் புதிய யோகா பயிற்சி நெறியை ஆரம்பிக்கின்றது. இப்பயிற்சி நெறிக்கான ஆரம்ப நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30மணிக்கு யோக அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யோகா வகுப்புக்கள காலை 6மணி தொடக்கம் 7மணி வரை 45 நாட்கள் தினமும் நடைபெறும். யோகாசனம், பிரணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள் அனுபவம் உள்ள ஆசானால் நுட்பமாக பயிற்றுவிக்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக யோகாப் பயிற்சிகள் பெண் ஆசிரியரால் வழங்கப்படவுள்ளது. நல்லூர்த்திருவிழா ஆரம்பிக்கப் பட்டதும் யோகா வகுப்புக்கள் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்படும் என யாழ்.யோகஅரங்க இய க்குநர் எஸ்.உமா சுதன் அறிவித்துள்ளார். (இ-5)

## வீட்டுக்கிருத்தியநிகழ்வு ஒத்திவைப்பு

02/08/2015 ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருந்த எமது குடும்ப தலைவர் திரு.சு.பொ. நடராஜா (அண்ணா தொழிலக உரிமையாளர்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் மதிய போசன வைபவமும் தவிர்க்க முடியாத கார ணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வைபவம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் என்பதனை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**அண்ணா தொழிலகம், இணுவில்.**

## நிர்வாக சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபை நிர்வாக சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணிக்கு நாகன் கிருஷ்ண பிள்ளை தலைமையில் சண்ணாகம்நா.நவரத்தினத்தின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

# விருது வழங்கல்

கலைப்பேரரசு கே.ரி.பொன்னுத்துரை நினைவு விருது வழங்கல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4மணிக்கு சிரேஷ்ட பேராசிரியர் நா.சண்முகலிங்கம் தலைமையில் 521/9 பருத்தித்துறை வீதி, நல்லூர் பகுதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது கலைஞர் கி.கிறிஸ்தோபர் விருதினை பெற்றுக் கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் கலைஞர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அமைப்பாளர் கே.கிருபானந்தா அறிவித்துள்ளார். (இ-5.136)

## வயல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சிப் பிரிவினரால் நடத்தும் வயல் விழா நாளை 3ஆம் திகதி திங்கட்கிழமையும் நாளை மறுதினம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 8மணி முதல் மாலை 4மணி வரை பலாலி வீதியில் அமைந்துள்ள விவசாயக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது. (இ-7)

# 76 ஆவது ஆண்டு விழா

இலங்கை வங்கியின் 76ஆவது ஆண்டு விழா திருநெல்வேலி கிளையில் நாளை திங்கட்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வர்த்தக பீடத்தின் தலைவர் பேராசிரியர் கே.தேவராஜா கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)


## சேவை

எமது வைத்திய நிலையத்தில் என்பு முறிவு கிளினிக் (ORTHOPEADIC) வழமை போல் நடைபெறுகின்றது.

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
வைத்திய நிபுணர்கள் ஆலோசகர் நிலையம்
08, இராமையா செட்டியார் வீதி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 8730129
(1266)

## தேவை

வேப்பம் விதை விலைக்கு வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு: தில்லையம்பலம் கந்தையா, ஸ்றோர்ஸ், ஆனைக் கோட்டை. 021 225 5718

## Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்

சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.
கரவீணா இசை மன்றம்,
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (1262)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளியில் 4 பரப்பிலமைந்த அழகிய முற்றிலும் Tiles பதிக்கப்பட்ட நவீன வசதிகளோடு கூடிய (Attached Bathroom) வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு:- 077 364 0941, 078 459 4848
(1271)

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஒரு மைலுக்குள் உருத்திரபுரம் பக்கமாக குடியிருப்பதற்கும் வயல் செய்வதற்கும் உகந்ததான ஒரு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:077 773 0521, 076 520 4632
(1272)

## வீடுவளவு விற்பனைக்கு!

மீசாலை வடக்கு, வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன், உடன் குடியேரக்கூடிய, நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு காணி வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : நவா : 0766 686740
0061 3425808199
தவம் : 0775 977210

## தேவை.

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு! செயல்நூல்கள், மாதிரி வினாத்தாள்கள் பாடத்திட்டத்துக்கு அமைவாக தயாரிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் நாடளாவிய ரீதியில் வெளியீடு செய்யும் பதிப்பகத்துக்கு தேவை.

தொடர்பு கொள்ளவும் : 071 5794468

## VISA விசா விண்ணப்பித்தல்

2003ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்க Green Card விசா விண்ணப்பிப்பதில் அனுபவமிக்க எமது நிறுவனத்தில் UK, Canada, USA உட்பட ஐரோப்பிய நாடுகளின் விசா விண்ணப் பப்படிவங்களை எமது நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசனை யைப் பெற்று மிகச்சரியாக பூர்த்தி செய்து கொள்ளலாம்.

எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதி களோ இலங்கையின் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

Worldwide Travel Insurance at Competitive Rates

**Bristol Cyber Cafe**
**No. 8/3/4, Bristol Street, Colombo 01**
**Tel:0112393919, 0774276579.**
**www.bristolcc.biz Reg;W/A 44843**

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (PVT) LTD

**P.ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில் வாய்ப்புகள், வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ்பெற்ற சோதிடர்களால், தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ்க்கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகிறது.

**தொடர்புகளுக்கு:-384, A, நாவலர் வீதி,**
**(கைலாச பிள்ளையார் கோயில் அருகில் நல்லூர்)**
**தொலைபேசி:-021 221 7944**

கொழும்பு முகவரி:
19, 1/1, கொத்தலாவல மாவத்தை, [illegible]
தொலைபேசி:-011 258 6180/011 258 6203
(657)



# சேவைநலன் பாராட்டு



திருமதி.
இராஜேந்திரகுமார்
ஞானகுமாரி
(ஆசிரியர்
யா/ கொக்குவில்
ஸ்ரீ ஞானபண்டித
வித்தியாசாலை)

மாணவர் வளர்ச்சியே தனது உயர்ச்சி என்றும்
புதியதோர் பாண்ட் அணியை உருவாக்கி நேரம் தவறாது கருமமாற்றும்
பலகலை அறிவும் பெற்ற சிறந்த கணித, ஆங்கில ஆசிரியராம்
"பிரதீபா பட்டேல்" பெற்ற
இராஜேந்திரகுமார் ஞானகுமாரி என்றும் வாழியவே!

01.08.2015 இல் ஓய்வு பெற்றுச் செல்லும் இவரின் 31 வருட சேவையைப் பாராட்டி நன்றி தெரிவிப்பதுடன் இவர் தனது ஓய்வுக்காலத்தில் நோய் நொடியின்றி சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ எல்லாம்வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

### சேவை விபரம்


| காலம் | | பாடசாலை |
|---|---|---|
| 18.05.1984- 28.02.1990 | - | கம்பளை சாஹிராக் கல்லூரி |
| 28.02.1990-31.01.1991 | - | இணுவில் சைவ மகாஜனாக் கல்லூரி |
| 01.02.1991-14.03.1991 | - | இராமநாதன் கல்லூரி |
| 15.03.1991-17.06.2010 | - | ஆனைக்கோட்டை றோ.க.த.க.பா. |
| 19.08.1991-07.06.2010 | - | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| 07.06.2010-31.07.2015 | - | கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை |

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் - 2015

யாழ் தேர்தல் மாவட்டம்



த. சித்தார்த்தன்

### அன்புக்கும் மதிப்பிற்குமுரிய தமிழ் மக்களே!

தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகிய நான், நடைபெறவிருக்கும் இலங்கை நாடாளுமன்றுக்கான தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் பங்கேற்கிறேன்.

ஒரு தேர்தலை எதிர்கொண்டு, உங்களுக்குப் பணியாற்றுவதற்கான வாய்ப்பினையும் ஆதரவினையும் கேட்டுவந்து இரண்டே வருடங்களுக்குள் மீண்டும் இன்னொரு பணிக்காக ஆதரவுகேட்டு உங்களுக்கு இதனை எழுதுகின்றேன்.

2013ஆம் ஆண்டில் நடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது, எனக்கு அமோக ஆதரவு அளித்த யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட மக்கள் ஒவ்வொருவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். உங்கள் ஒவ்வொருவரையுமே நேரில் சந்தித்து உரையாட வேண்டும் என்ற உண்மையான விருப்பம் எனக்கு இருக்கின்றபோதும் - தேர்தல்கள் சட்டமும் நேரமும் அதற்கு இடம்தரவில்லை என்பதனாலேயே இந்த மடலை எழுதுகின்றேன்.

எனது தந்தையார் அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் நீண்ட கால தமிழர் அரசியல் வாழ்வால் எனக்கும் இளம்வயதுகளிலேயே அரசியலில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் வாய்த்தன. அந்த வகையில் தமிழ் அரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் (1961 ஆம் ஆண்டு) தொடக்கம் இற்றைவரை எமது உரிமைப் போராட்டத்தில் அனைத்து நிலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றேன்.

1985ஆம் ஆண்டு திம்பு மாநாட்டுப் பேச்சுவார்த்தையில் பங்கேற்று, வரலாற்றுச் சிறப்புமிக்க திம்பு தீர்மானங்களின் தயாரிப்பில் பங்களித்தவர்களில் இருவர் மட்டுமே தமிழர் அரசியலில் தொடர்ந்தும் பணியாற்றிக்கொண்டு இருக்கின்றோம். அந்த இருவரில் ஒருவர் எமது தலைவர் சம்பந்தன் அண்ணன் அவர்கள், மற்றயது நான். அண்ணர் அமிர்தலிங்கம், அண்ணர் மு.சிவசிதம்பரம், அண்ணர் சம்பந்தன் ஆகியோருடன் இணைந்து நானும் அந்த மாநாட்டில் பங்குபற்றியமை எனக்குப் பெருமையே.

அன்றிலிருந்து இன்றுவரை - தமிழ் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு என்பது திம்பு கோட்பாட்டின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட வேண்டும் என்பதே எனதும் தனிப்பட்ட நிலைப்பாடு. தேவையான- பொருத்தமான - உரிய தரப்புக்களிடமெல்லாம் இதனை நான் எப்போதுமே வலியுறுத்தி வந்திருக்கின்றேன். இப்போதும் அதனையே வலியுறுத்துகின்றேன்.

தமிழ் தேசிய இனப்பிரச்சனைக்கான அரசியற் தீர்வுகாணும் முக்கிய விவகாரம் ஒரு தடத்தில் நகர்த்தப்படும் அதே வேளையில் - அதற்குச் சமாந்தரமாக - அதே அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு யுத்தத்தினால் பாரிய அழிவுகளுக்குள்ளான எமது சமூகம் இந்த மண்ணில் ஒரு தன்னிறைவான பொருளாதாரத்ததுடன் நிலைத்து வாழ வழி செய்யப்பட வேண்டும் என்பதுவும் எனது எண்ணமாகும். இவ்வாறாக - ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக எமது மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்வின் சுபீட்சத்தை நோக்கி எனது செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதே எனது எண்ணம். எனது அனுபவங்கள் அதற்கான பலமாக அமையும்.

கொழும்பில் ஆட்சி அமைக்கும் சிங்களக் கட்சிகளின் பிரதிநிதிகளாக எமது மாவட்டத்தில் களமிறங்கியிருப்பவர்கள், எமது இளைஞர்களில் ஒரு சிலருக்கு தனித்தனியான வேலைவாய்ப்புக்களை வழங்கலாம். ஆனால், பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக பல ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய, முயற்சிகள் செய்யப்படவேண்டும் என்பதுவே எனது விருப்பம். அதனால், எனது கவனத்தை நான் குவிக்க விரும்புவது ஒட்டுமொத்தமான எமது சமூகத்தினது பொருளாதார நல்வாழ்வில் ஆகும். அதற்கு அடிப்படையானது கல்வி.

எது நடந்தாலும் அழிக்கப்பட முடியாத சொத்தாக, எவ்வளவு காலம் கடந்து போனாலும் நிலைத்திருக்கும் சொத்தாக எமது சமூகத்தின் உச்சமகுடமாக - கல்வியும் அறிவும் இருப்பதால், எனது தனிப்பட்ட ஈடுபாடு எப்போதும் அறிவு வளர்ச்சியை நாடியதாகவே இருக்கின்றது. யாழ்ப்பாண கல்வியற் கல்லூரி அமைப்பதற்கு நிலம் இல்லாத ஒரு சூழலில், அந்த திட்டம் கைவிடப்படும் நிலை வந்தபோது கல்வியின் மீது இருந்த எனது தனிப்பட்ட ஈடுபாட்டின் காரணமாகவே எமது குடும்பத்துக்குச் சொந்தமானதாக இருந்த நிலத்தை (232 பரப்பு) வழங்கி அந்த நிலப் பிரச்சனைக்கு நிவர்த்தியையும் செய்தேன்.

இதற்கு முன்னர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய பொழுதில் மாவட்டத்தில் பெரியதான வவுனியா நூலகத்தையும் வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியையும் எனது முயற்சியில் உருவாக்கியதை எமது சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பாக நான் கருதுகின்றேன். இதேகால கட்டத்தில், கடும் பிரயத்தனம் செய்து வவுனியா - மன்னார் பகுதி பாடசாலைகளின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் பல பணிகளை செய்திருந்தமையானது எனக்கு நிறைவைத் தந்த விடயங்களாகும். இவையெல்லாமே, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அங்கீகாரம் இருந்தமையினால் அடைய முடிந்த இலக்குகளாகும். இவ்வாறாக தொடர்ந்தும் எமது கல்வி வளர்ச்சிக்கு என்னால் முடிந்த பணிகளைச் செய்ய வேண்டும் என்ற மனவிருப்பு என்னிடம் உள்ளது.

அரசியல் உரிமைகளையும், கல்வியையும், பொருளாதாரச் செழிப்பையும் பெற்று எமது சமூகம் நிறைவாக வாழ்வதற்கு அடிப்படையானது நிலம். யாழ் மாவட்டத்தின் ஓரத்தில், பலாலியைச் சூழவும் சிறீலங்கா அரச படைகள் பிடித்து வைத்திருக்கும் எமது மக்களின் காணிகள் உட்பட ஏனைய எமது தமிழ் பிரதேசங்களில் அரச படைகள் ஆக்கிரமித்து இருக்கும் காணிகள் அனைத்தும் மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித விட்டுக் கொடுப்பிற்கும் இடமில்லை. கொழும்பு அரசாங்கத்தின் உறுப்பினர்கள், தெற்கிலிருக்கும் செல்வாக்குமிக்க புத்திஜீவிகள், வெளிநாட்டுத் தூதரகங்களின் ராஜதந்திரிகள் என எல்லோரிடமுமே இந்த விடயத்தை நான் எப்போதுமே வலியுறுத்தி வருகின்றேன். மாகாண சபை அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்புக்கள் வகிக்காத காலங்களில் கூட இந்த விவகாரத்தை நான் வற்புறுத்தியே வந்துள்ளேன்.

நிலம் சார்ந்த விவகாரத்திற்குச் சமமாக நான் வலியுறுத்தி வரும் இன்னொரு முக்கிய விடயம் - போரின் போது காணாமல் போகச் செய்யப்பட்டோர் மற்றும் சிறையிடப்பட்டிருக்கும் அரசியற் கைதிகள் தொடர்பானது. காணாமற் போனோர் எல்லோரும் எங்கிருக்கின்றார்கள் என்பது கண்டறியப்பட வேண்டும். அவர்தம் உறவினர்களுக்கு அவர்கள் பற்றிய தகவல்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும். காணாமற் போய்விட்ட தமது அன்புயிர்கள் அனைவர் பற்றியும் அறிவதற்கு எமது மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமை மதிக்கப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை எனது வல்லமைக்கு உட்பட்டு நான் தொடர்ந்தும் செய்தபடியே உள்ளேன்.

அதே போலவே போர் நிகழ்ந்த காலத்தில், போராட்டச் செயற்பாடுகளில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். விடுதலைப் புலிகளின் சிரேஸ்ட போராளிகளே சமூகத்தோடு மீள் இணைக்கப்பட்டுவிட்ட நிலையில் - அவர்களுக்குத் துணையாக இருந்தமைக்காக கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தொடர்ந்தும் சிறைகளில் வாடுவது அர்த்தமோ நியாயமோ அற்றது. அனைத்து அரசியற் கைதிகளும் ஒரு பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்படல் வேண்டும் என்பதை தெற்கின் அரசியற் தலைவர்களிடமும் வெளிநாட்டின் ராஜதந்திரிகளிடமும் நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றேன்.

தனிப்பட்ட ரீதியில் எனக்கிருக்கும் அரசியற் தொடர்புகளினூடாக இந்த விடயங்களை நான் தொடர்ச்சியாக கொழும்புத் தலைவர்களுக்கு வலியுறுத்தி வரும் போதும், நாடாளுமன்ற உறுப்புரிமை என்ற ஒரு அங்கீகாரம் எனது பணிகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும் என்று நம்புகின்றேன்.

நிறையப் பேசுவதைவிட என்னால் செய்யக் கூடியவற்றை செயலில் நிரூபிக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். அதற்கான முயற்சிகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்வேன்.

எனவே - நாடாளுமன்ற உறுப்புரிமையினூடாக, எனது மக்களிற்காக ஆற்ற விரும்பும் பணிகளை ஆற்றுவதற்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் இலக்கம் 7ல் போட்டியிடும் எனக்கு வாய்ப்பளிக்குமாறு, யாழ்ப்பாண - கிளிநொச்சி மாவட்ட மக்களாகிய உங்களை அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மிக்க நன்றி.

**இவ்வண்ணம்,**
**என்றும் அன்புடன்,**

(த. சித்தார்த்தன்)
தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர், இல: 7

X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

(C-304)
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வைப் படுகொலைகள் - 1989; 26ம் ஆண்டு நினைவஞ்சலிகளுடன்

உலக சரித்திரத்தில் எத்தனையோ வரலாற்றுப் படுகொலைகள் இடம் பெற்றுள்ளன. இன்றும் இடம்பெற்று வருகின்றன.

ஈழத்தமிழர்களாகிய எங்களுக்கும் இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் சம்பந்தமானவற்றை இங்கு நோக்குவோம்.

அந்த வகையில் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி 1989 ஆம் ஆண்டு சம்பவங்கள் எம்மால் நினைவு கூரப்படவேண்டியவையாகும். இது அக் கொடூரச் சம்பவங்களின் 26 ஆவது ஆண்டு நினைவாகும்.

வல்வை படுகொலைகளை பத்திராசியர்களும் சரித்திர நூலாசிரியர்களும் ''அமெரிக்காவுக்கு மைலாய்'' "இந்தியாவுக்கு வல்வை" என்ற அடைமொழிகளினூடாக வரைந்திருந்தனர்.

அதாவது அமெரிக்க இராணுவத்தால் வியட்நாமில் நடத்தப்பட்ட மைலாய் படுகொலைகளையும் இந்தியாவில் ஆங்கிலேயரால் அமிர் தரசில் நடத்தப்பட்ட ஜாலியன் வாலா படுகொலைகளையும் விடக்கொடூரமானவை என வர்ணித்திருந்தன.

கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஓகஸ்ட் மாதம் 2, 3, 4 ஆம் திகதிகளாகிய 3 நாட்கள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கொடூரச் சம்பவங்கள் வருமாறு, இச்சம்பவங்களுக்கான மக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியது இந்திய அரசேயாகும்.

இதில், படுகொலைகள்-63, வீடு எரிப்புக்கள்-123, கடை எரிப்புக்கள்-45, கடற்றொழில் படகுகளும் மீன்பிடி வலைகளும் எரித்து நாசமாக்கப்பட்டவை-176 என்பனவாகும்.

1948 இல் ஆங்கிலேயர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிச் சென்றபோதே ஈழத்தமிழர் சிறுபான்மையினர்என்பது அவர்களுக்குத்தெரியும்.

ஆனால் எம்மை நாமே சுயமரியாதையுடன் ஆளுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள், பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கம் தனது சாம்ராச்சியத்தில் முதன்முதலில் இலங்கைப் பெண்களுக்கு வாக்குரிமையைப் பயன்படுத்தும் பெருமையை வழங்கி இலங்கைக்கும் பெருமை தேடித்தந்துள்ளது.

இதற்காக நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

ஆனால் இந்த நிகழ்வு தமது ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் செய்யப்பட்ட சுயநலத்திற்கான பரீட்சை வாக்களிப்பே என்பது பின்பு தர்ன் பலருக்கு தெரிய வந்தது.

சிறுபான்மையினருக்குரிய பாதுகாப்புக்கான அரசியலமைப்பு சரத்துக்கள் யாவும் பெரும்பான்மை (எப்பொழுதும்) பலம் பொருந்திய சிங்கள இனத்தவர்களினால் புறக்கணிக்கப்பட்டன.



சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே 1915 இல் ஏற்பட்ட கலவரத்தை அடக்க வழி செய்ய சேர்.பொன். இராமநாதன் கப்பல் மூலம் பிரிட்டிஷ் மகாராணியிடம் நேரில் சென்று உத்தரவு பெற்று வந்து இலங்கை வாழ் மக்களுக்கு சமாதான தூதுவராக திகழ்ந்தார்.

அன்று அவரை பல்லக்கில் வைத்து சுமந்து வரவேற்ற கதைவேறு. அப்படிப்பட்ட தமிழர்கள் தம்மைத்தாமே சுய கௌரவத்துடன் வாழும் முறைமையை மேற்கொள்ள முடியாது. பேரின வாதிகளால் வதைபட்டு வருகின்றனர்.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் பங்கு கொண்டு பேரினவாத அரசுகளுடன் எமது தலைவர்களால் செய்து கொள்ளப்பட்ட 'பட்லி- செல்வா ஒப்பந்தம்' தொடக்கம் திம்பு பேச்சு வார்த்தை வரையான எந்த ஒப்பந்தமும் பேரினவாதிகளால் செல்லாக்காசாக்கப்பட்டன.

1958 ஆம் ஆண்டு இனக்கலவரம் மூலம் தனது கோர முகத்தைக் காட்டப் புறப்பட்ட பேரினவாதம் பல கொடூரச் சம்பவங்களை காலத்திற்குக் காலம் கட்டவிழ்ந்து விட்டது.

இவை பற்றிய விடயங்களை இங்கு குறிப்பிடுவது இக்கட்டுரைக்கு பொருத்தமற்றது.

அதாவது தமிழ் அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகம் போன்ற அகிம்சை மார்க்கங்கள் யாவும் பயனற்றுப் போன நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவ ரீதியில் அடக்கு முறைகளும் இராஜதந்திர ரீதியில் கல்வித் துறையிலும் வேலைவாய்ப்பிலும் சட்ட ரீதியான தரக்கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு தமிழ்ச் சமூதாயமும் இளைஞர், யுவதிகளும் நசுக்கப்பட்டமையே ஆயுதப் போராட்டத்திற்கு வழிகோலியது என்பது பலரும் அறிந்த விடயம்.

இதில் இந்தியாவின் வகிபங்கு என்ன? இந்திராகாந்தி அம்மையார் காலத்தில் தனது சுய நன்மைக் காக தமிழ் இளைஞர்களுக்கு இரா ணுவப் பயிற்சி கொடுத்து அவர்களை வளர்த்து விட்டது இந்திய அரசு.

ஈழத்தமிழர்களை பலிக் கடாக்கள் ஆக்கியது. 1987 மே மாதம் வடமராட்சி வான் பரப்பில் இரட்சகராக வந்து எமக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டு பாசாங்கு செய்தது. இறுதியில் ஐ.பி.கே.எப். எனும் இந்திய அமைதி காக்கும் படை என்னும் பெயரில் இலங்கைக்குள் புகுந்து போராளி களை இலங்கை இராணுவத்திற்கு காட்டிக்கொடுத்தும் வல்வைப் படுகொலைகள் போன்ற கொடூர செயல்களில் ஈடுபட்டதும் தான் அவர்களது கைங்கரியங்களாகின.

ஜே.ஆர்.மற்றும் ராஜீவ் என்போரால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தமும் 13 ஆவது சரத்தும் படுகின்ற பாடுகள் எல்லோரும் அறிந்ததே!

எத்தனையோ இராஜதந்திரிகள் ஆண்டாண்டு காலமாக இலங்கைக்கு வருகை தந்தும் 13 ஆம் சரத்தைநடைமுறைப்படுத்துவதில் எந்த முன்னேற்றமும் இல்லை.

இத்தனை இன்னல்களுக்கும் காரணமானது இந்திய அரசே! இந்தியா எமக்கு உருப்படியாக எதாவது செய்ய முடியாதா? முள்ளிவாய்க்கால் முடிவுகளும் பிரதமர் மோடியின் வருகையும் கூட வீணானவைதானா?

தந்தை செல்வா கூறியது போல "தமிழர்களின் தலைவிதியை ஆண்டவன்தான் தீர்மானிக்க வேண்டும்'' என்ற நிலையில் உள்ள எமக்கு இந்தியா என்ன இழப்பீடு செய்யப்போகிறது? படுகொலைகளில் இறந்தவர்களின் ஆத்மாக்களின் சாந்திக்கு எவ்வாறு பரிகாரம் தேடப்போகிறது? தமிழ் நாட்டில் இருந்து எமக்காக ஒலிக்கும் குரல்களும் சுயநலவாதம் கொண்டவைகளா? என இத்தருணத்தில் எம்மை சிந்திக்க தூண்டுகிறது.

ஈழத்திற்காக இன்னுயிர் நீத்த அனைவரதும்ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து நிற்போமாக.

**வல்வை ஜெயம்**
**(ந.சிவரட்ணம்)**

## 08.2015 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1610 - ஹென்றி ஹட்சன் தனது கடற் பயணத்தின் போது இன்றைய ஹட்சன் குடாவை அடைந்தார்.
- 1790 - ஐக்கிய அமெரிக்காவில் முதற் தடவையாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.
- 1798 - பிரெஞ்சுப் புரட்சிப் போர்கள்: நைல் நதிப் போரில் பிரித்தானியா வெற்றி பெற்றது.
- 1870 - உலகின் முதலாவது சுரங்க தொடருந்து சேவை லண்டனில் தொடங்கப்பட்டது.
- 1903 - ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக மசிடோனியர்களின் கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது.
- 1914 - ஜேர்மனியப் படையினர் லக்சம்பேர்கை முற்றுகையிட்டன.
- 1916 - முதலாம் உலகப் போர்: லியனார்டோ டாவ் வின்சி என்ற இத்தாலியப் போர்க்கப்பல் ஆஸ்திரியாவினால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1918 - முதலாம் உலகப் போரை அடுத்து சைபீரியாவுக்கு தனது படைகளை அனுப்பப்போவதாக ஜப்பான் அறிவித்தது.
- 1931 - இராணுவ வேலைகளை நிராகரிக்குமாறு அறிவியலாளர்களுக்கு ஐன்ஸ்டைன் அழைப்பு விடுத்தார்.
- 1932 - பொசித்திரன் (இலத்திரனின் எதிர்த்துணிக்கை) கார்ல் ஆண்டர்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1934 - அடொல்ஃப் ஹிட்லர் ஜெர்மனியின் அதிபரானார்.
- 1939 - அணு ஆயுதத்தை தயாரிக்க அறிவுறுத்துமாறு ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் அமெரிக்க அதிபர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டிற்குக் கடிதம் எழுதினார்கள்.
- 1943 - போலந்தில் திரெபிலிங்கா வதை முகாமில் நாசிகளுக்கு எதிராகக் கிளர்ச்சி இடம்பெற்றது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: தோல்வியடைந்த ஜேர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதித்த நட்பு அணி நாடுகளின் பொட்ஸ்டாம் மாநாடு நிறைவடைந்தது.
- 1968 - பிலிப்பீன்சில் கசிகுரான் என்ற இடத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் சிக்கி 270 பேர் உயிரிழந்தனர்.
- 1973 - மான் தீவில் கேளிக்கை நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 51 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - இத்தாலியில் தொடருந்து நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 85 பேர் கொல்லப்பட்டனர்.
- 1989 - யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
- 1990 - ஈராக் குவைத்தின் மீது படையெடுத்தது.

### பிறப்புகள்

- 1913 - தனிநாயகம் அடிகளார், உலகத் தமிழாராய்ச்சி மன்றம் அமைக்க அடிகோலியவர் (இ. 1980)
- 1926 - ஜோர்ஜ் ஹப்பாஷ், பாலஸ்தீனத் தலைவர் (இ. 2008)
- 1930 - ஏ. பி. வெங்கடேசுவரன், இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலர் (இ. 2014)

### இறப்புகள்

- 1860 - சேர் ஹென்றி வோர்ட், இலங்கையின் முன்னாள் பிரித்தானிய ஆளுநர் (பி. 1796)
- 1892 - Dr Bonjean, கொழும்பின் முதலாவது ஆயர்.
- 1922 - அலெக்சாண்டர் கிரஹாம் பெல், தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் (பி. 1847)
- 1923 - வோரன் ஹார்டிங், ஐக்கிய அமெரிக்காவின் 29 ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1865)
- 2000 - [illegible] (பி. 1929)


## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 70 | 80 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 220 | 200 | 250 | 200 |
| தக்காளி | 150 | 140 | 120 | 120 | 120 | 120' |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 100 | 50 | 100 | 70 | 80 |
| கரட் | 120 | 160 | 150 | 200 | 100-200 | 120 |
| பூசணி | 60 | 40 | 50 | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 110 | 120 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 120 | 100 |
| பாகற்காய் | 100 | 140 | 150 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 40 | 60 | 120 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | — | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 60 | 90 | 60 | 60 | 50 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 160 | 160 | 90 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 100 | 70 | 100 |
| கறிமிளகாய் | 120 | 150 | 170 | 160 | 150 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 180 | 120 | 200 | 200 |
| போஞ்சி | — | 160 | 160 | 200 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 40 | 60 | — | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 50 | 60 | 80 | 70 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 50 | 35 | 30-40 | 50 | 40 |
| இராசவள்ளி | 200 | 140 | — | — | — | 120 |
| வெங்காயப்பூ | 100 | 200 | 130 | 200 | 120 | 160 |
| முள்ளங்கி | 40 | 30 | 40 | 80 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 15 | 20 | 10 | 20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு நாட்டு மக்களுக்கும் சுதந்திரம்

## அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**அரச குடும்பத்திற்கு மட்டும் காணப்பட்ட சுதந்திரம் இன்று முழு நாட்டு மக்களுக்கும் கிடைத்துள்ளது என அமைச்சர் ராஜித சேனாரட்ன தொடங்கொட பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல். பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.**

இன்று தேர்தல் ஆணையாளர் பலம் பொருந்தியவராக மாறியுள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்டத்தின் [illegible]லம் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இன்று நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுள்ளது. இவ்வாறான ஓர் நிலைமை கடந்த காலங்களில் இருக்கவில்லை.

அரச குடும்பத்திற்கு மட்டுமே சுதந்திரத்தை அனுபவிக்க அவகாசம் இருந்தது.

அமைச்சரவை அமைச்சர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்க, அமைச்சரவை அமைச்சர்களுக்கு இடையிலான சந்திப்புக்களை உளவு பார்க்க பல உளவுப் பிரிவுகள் காணப்பட்டன.

இவ்வாறான ஓர் நிலையில் அரசாங்கத்தை கொண்டு நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது.

வடக்கு காணிகளை அபகரித்து முகாம்கள் அமைக்கப்பட்டன.

காணி கொள்ளையிடப்பட்டது. மறு புறத்தில் பணம் கொள்ளையிடப்பட்டது.

தேர்தல்களுக்காக அரச பணம் கொள்ளையிடப்பட்டது.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தோல்வியைத் தழுவுவோம் என புரிந்து கொண்ட மஹாராஜா, வழக்குகளிலிருந்து தப்பவே கட்சியையும் நாட்டையும் ஒப்படைத்துச் சென்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றோம். எனினும், எமது கொள்கைகளை விட்டுக்கொடுக்கவில்லை.

மகிந்த அதிகாரத்தை பெருக்கிக் கொள்ளவே அரசியல் அமைப்பில் திருத்தங்களைச் செய்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பெருமளவில் ஆளும கட்சியில் இணைந்து கொள்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த ஆதரவாளர்கள் மட்டுமே நாடாளுமன்றம் செல்வார்கள்

## சந்திரசேன கூறுகிறார்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவானவர்கள் மட்டுமே நாடாளுமன்றம் செல்வார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

நாம் அநுராதபுரம் கூட்டத்தில் மக்கள் எமக்கு காட்டும் ஆதரவினை வெளிப்படுத்தினோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில வேட்பாளர்கள் மகிந்த ஐயாவிற்கு எதிராக செயற்படுகின்றனர். அவ்வாறான நபர்களினால் அவர்களது சொந்த கிராமங்களுக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்கள் கூக்குரல் எழுப்புகின்றார்கள். அதுவே தற்போதைய நிலைமையாகும்.

மகிந்தவை நேசிப்போர் மட்டுமே இம்முறை நாடாளுமன்றம் செல்வார்கள். ரணில் என்ன கேம் ஆடினாலும் நாம் பெரும்பான்மை பலதைப் பெற்று ஆட்சி அமைப்போம்.

ரணில், அதிர்ஷ்டத்தில் பிரதமராக மாறினார். மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உதவியுடன் பிரதமராக பதவி வகிக்க ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார்.

அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என எஸ்.எம். சந்திரசேன தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.(இ-7)

# துமிந்த திஸாநாயக்காவின் பிரசார கூட்டத்தில் ஜனாதிபதி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அநுராதபுர மாவட்ட வேட்பாளர் குழுத் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப செயலாளருமான கைத்தொழில் அமைச்சர் துமிந்த் திஸாநாயக்கவின் வீட்டில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டுள்ளார்.


ஜனாதிபதி போயா தினமான நேற்று முன்தினம் அநுராதபுரத்தில்லுள்ள விகாரைகளில் சமயக் கிரியைகள் பலவற்றில் கலந்து கொள்வதற்காக வேண்டி அங்கு சென்றிருந்தார்.

இதன்போதே திடீரென இக்கூடத்தில் கலந்து கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அமைச்சர் துமிந்தவின் வீட்டில் கூடியிருந்த மக்களுடன் சிறிது நேரம் கலந்துரையாடிவிட்டு ஜனாதிபதி அங்கிருந்து சென்றுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதால் அரசியல்வாதிகளின் ஆட்டம் அதிகரித்தது

## அமைச்சர் அர்ஜுன சுட்டிக்காட்டு



போர் முடிவுக்குக் கொண்டு வரப்படாமல் இருந்திருந்தால் அரசியல்வாதிகள் இவ்வளவு ஆடியிருக்க மாட்டார்கள் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மஹர பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் இதைச் சொன்னால் ஊடகங்களின் தாக்குதலுக்கு இலக்காக நேரிடும்.

எனினும், இதைச் சொல்லாமல் இருக்க முடியாது, அதனால் சொல்கின்றேன்.

சில வேளைகளில் போர் முடிவுக்கு கொண்டு வரப்படாமல் இருந்திருந்தால் அரசியல்வாதிகள் இவ்வளவு ஆடியிருக்க மாட்டார்கள்.

அது வேறு ஒன்றுக்காகவும் அல்ல.

போர் வெற்றியை நாட்டு மக்களைப் போன்றே அரசியல் வாதிகளும் அனுபவிக்கின்றார்கள்.

சுதந்திரமாக எந்தவொரு இடத்திற்கும் செல்ல அனுமதியிருந்தது. திருட அஞ்சவில்லை.

எந்தவொரு குற்றச் செயலில் ஈடுபட்டாலும் கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை பாதுகாக்க தலைவர் ஒருவர் இருந்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐ.ம.சு.மு.வாக்குறுதி செயற்படுத்தப்பட்டால்

# அரச ஊழியர்கள் இலட்சாதிபதிகள்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் செயற்படுத்தப்பட்டால், அரச ஊழியர்கள் இலட்சாதிபதிகளாக மாறுவார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைய அரச ஊழியர்களின் சம்பளம் 112 வீதமாக அதிகரிக்கப்படும்.

தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் 3 ஆயிரம் ரூபாவினால் உயரும் எனவும் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா, திட்டமிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஐக்கியத்தை குழப்ப முயற்சிக்கும் தரப்பினர், முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் வேட்பாளர்களுக்கு எதிராக ஊ சத்தமிடுவதாக தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு தகவல்

## விஷப் பரீட்சை

"சேர்....உங்களுக்கு என்ன ஆச்சு?"

"என்ன சொல்றீங்க?"

"கல்யாண மண்டபத்துக்கு வந்தீங்க.... சரி; முதல் பந்தியில் உட்கார்ந்து சாப்பீட்டீங்க... சரி; சாப்பிட்டு வெற்றிலை பாக்கு போட் டீங்க... சரி; திடீரென்று பைத்தியம் பிடித்தது மாதிரி சொல்லாமல் கொள்ளா மல் இப்படி ஓடி வாறீங்களே என்ன விடயம்?"

"ஹி அதுவா? எனக்குத் தேனீயைக் கண்டால் பயம்! கொட்டினால் வலி தாங்க முடியாது. அங்கே பந்தல் முகப்பில் நின்று கொண் டிருந்தபோது ஒரு தேனீ வந்து என் முகத்துக்கு நேராகப் பறந்ததைப் பார்த்துவிட்டேன். அதுதான் பறந்து வந்துவிட்டேன்.".

தேனீ கொட்டினால் வாதநோய்க்கு நல்லது சேர்"

"அப்படித்தான் சொல்வது வழக்கம். அது உண்மையா?"

"லண்டன் விஞ்ஞானிகள் தேனீ விஷத்திலிருந்து Peptide 401 என்ற மருந்தைத் தயாரித்திருக்கிறார்களே"

"அப்படியா?"

"ஆமாம். மூட்டுவலிக்கு கார்டிசோன் மாதிரி சில மருந்துகளைக் கொடுப்பது வழக்கம். அதை யெல்லாம் விட இது நூறு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கிறதாம்."

"நீங்கள் சொல்வதெல்லாம் சரி. அதற்காக தேனீயைக் கூப்பிட்டு கொட்டு என்று சொல்லும் அளவுக்கு நமக்குத் துணிச் சல் கிடையாது சேர்"

"இருந்தாலும் நீங்கள் இப்படிப் பயப்படக்கூடாது சேர். அங்கே கல்யாண வீட்டில் என்னமோ ஏதோ என்று எல்லோரும் பயந்து விட்டார்கள். என்ன வேகமாக ஓடி வந்துவிட்டீர்கள்.

"சரி... நான் தான் அப்படி ஓடி வந்தேன். நீங்கள் ஏன் பின்னால் இப்படி ஓடிவரவேண்டும்?"

நீங்கள் போட்டிருக்கும் செருப்பு என்னுடையது. அதற்காகத்தான் நான் ஓடிவந்தேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க...







2

ந.அனந்தராஜ்
B.A.(Hons),Dip-Edu.,Dip-in-Journalism, SLPS,SLEAS
முன்னாள் அதிபர்,கல்விப்பணிப்பாளர்

4

சுரேஷ் க.பிரேமச்சந்திரன்
M.A (Pol Sc)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர்


# வானினும் கடலினும் பெரியர்



கானினும் பெரியர் ஓசை
கடலினும் பெரியர் கீர்த்தி
வானினும் பெரியர் மேனி
மலையினும் பெரியர் மாதோ
என கம்பன் பாடினான்.

அடர்ந்த மரங்களின் நெருக்கத்தால் காடு பெரியது. நீர்ப் பெருக்கத்தால் கடல் பெரியது. எல்லை காண முடியாத விரிந்த வானம் பெரியது.

அளவற்ற உயரத்தால் மலை பெரியது. இவ்வனைத்தை யும்விட ஆன்றவிந்து அடங்கிய சான்றோர் மிகப் பெரியவர்கள் என்பது கம்பன் பாடிய பாடலின் பொருளாகும்.

அப்துல் கலாம் காடு, வான், கடல், மலை ஆகியவற்றைவிட மிகப் பெரியவர் என்பதை அவருடைய மறைவு கண்டு கண்ணீர் சிந்திய மக்களின் பெருங்கூட்டம் நிலைநிறுத்திவிட்டது.

அவர் எந்தக் கட்சியுடனோ, இயக்கத்துடனோ தன்னைப் பிணைத்துக் கொண்டது கிடையாது. அவருக்கு எந்தக் கட்சியும் பின்புலமாக இருந்ததில்லை. பின் அவருக்கு மக்கள் செல்வாக்கு எப்படி ஏற்பட்டது?

விஞ்ஞானிகள் குறித்து அறிவதற்கு மக்கள் அவ்வள வாக விரும்புவதில்லை. அப்படியே இருந்தாலும், அவர்களது சாதனைக ளைப் பற்றிய செய்திகள் ஊடகங்களில் வரும்போது மட்டுமே அறிவார்கள்.

ஆனால், கடைக்கோடியில் உள்ள ஓர் ஊரில் பிறந்து நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்தது நம்ப முடியாத ஒன்றாகும். அதைவிட முக்கியமாக, அவர் பதவியில் இருந்தபோதும், இல்லாதபோதும் மாணவர்களும், இளைஞர்களும் அவரை மிகவும் நேசித்துக் கொண்டாடினார்கள். இமயம் முதல் குமரி வரை உள்ள மாணவரகளுக்கும், இளைஞர்களுக்கும் நம்பிக்கை ஊட்டுபவராக, வழிகாட்டுபவராக உந்து சக்தியாக திகழ்ந்தார்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற பழமொழியை அவர் நன்கு அறிந்திருந்தார். எனவே தான், மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் உணர்வூட்டுவதன் மூலமே நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாகத் திகழும் என்பதை உணர்ந்திருந்தார்.

இந்தியக் குடியரசின் தலைவராகப் பதவி வகித்தவர்கள் யாருக்கும் கிடைக்காத மக்கள் செல்வாக்கு அவருக்குக் கிடைத்தது. பதவியில் இருந்தபோதைவிட பதவியை விட்டு இறங்கிய பிறகு அவர் மாபெரும் மக்கள் தலைவராகத் திகழ்ந்தார்.

இனம், மொழி, மதம், சாதி, வேறுபாடுகளையும் செல்வர் - ஏழை, படித்தவர் - பாமரர், பெரியவர்கள் - இளைஞர்கள் என்ற வேறுபாடுகளையும் மீறி அனைவராலும் மதித்துப் போற்றப்பட்ட மாமனிதர்.

இந்திய விண்வெளித் துறை, அணு ஆயுதம், அணுசக்தித் துறை ஆகியவற்றில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியதாகும். விண்வெளித் தொழில்நுட்பத்திலும் அது தொடர்பான ஆய்விலும் உலக அரங்கில் பெருமைமிக்க ஓரிடத்தை இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுத்தார். தனது அளப்பரிய சாதனைகள் மூலம் உலக நாடுகள் அனைத்தையும் இந்தியாவைத் திரும்பிப் பார்க்க வைத்தவர் அவர்.

பாதுகாப்புத் தொழில்நுட்பங்களில் இந்தியா தன்னிறைவுடன் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். அமெரிக்க செயற்கைக்கோள்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு பொக்ரான் அணு ஆயுதச் சோதனைகளை 1998 மே 11 ஆம் திகதி வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்.

இதன் விளைவாக உலக அரசியலில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. 1950 களில் தொடங்கி 2000 ஆம் ஆண்டு வரை இந்தியாவை ஒரு வல்லரசாக அமெரிக்கா கருதவில்லை.

ஆனால், அணு ஆயுத சோதனைக்குப் பிறகு அமெரிக்காவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது.

கலாம் வெடித்த அணுகுண்டு பிற நாடுகளை இந்தியாவை மதிக்க வைத்தது. நாட்டின் பாதுகாப்பு குறித்த ஆய்வுகள் எதிரிகளைக் கொல்வதற்காக மட்டுமல்ல, மக்களின் உயிர்களைக் காப்பதற்காகவும் இருக்க வேண்டும் என்று கருதினார்.

எனவேதான், இருதய நோய் நிபுணரான சோமராஜ{ என்பவரு டன் இணைந்து சுருங்கிய இரத்தக் குழாயை மீண்டும் சுருங்காமல் தடுக்கும் உலோகச் சுருளைக் கண்டுபிடித்தார்.

ஏவுகணைக்குப் பயன்படுத்தப்படும் கனம் குறைந்த உலோகத்தினால் இது ஆக்கப்பட்டதாகும். இரண் டரை இலட்ச ரூபாய்க்கு மேல் இருந்த இந்த உலோகச் சுருள் 10 ஆயிரம் ரூபாய க்கு கிடைக்க வழிவகுத்தவர் கலாம்.

கை, கால் ஊனமுற்றவர்களுக்குப் பயன்படுத்தப்படும் செயற்கைக் கருவிகள் மெல்லிய உலோகத்தினால் செய்யப்பட வேண்டும் என கருதினார். அவ்வாறே செய்து குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்தார்.

தனக்கு அனுப்பப்படும் தமிழ் நூல்களைப் படித்து தன் கருத்தைக் கடிதத்தின் வாயிலாக அந்நூல் களின் ஆசிரியர்களுக்கு தெரிவிக்க நேரத்தை அவர் ஒதுக்கியிருந்தார்.

(தொடரும்)

-பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித மட்ட வினாவிடை போட்டி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இடையில் மாகாண மட்ட கணித வினாவிடைப்போட்டி நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தின் கீழ் இயங்குகின்ற பாடசாலை மாணவர்களிடையே மாகாண மட்ட கணித வினா விடை போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும்.

இதில் கனிஷ்ட பிரிவிலுள்ள மாணவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு யா/ஹாட்லி கல்லூரி பருத்தித்துறையில் நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு யா/ஹாட்லி கல்லூரி பருத்தித்துறையில் நடைபெறும். இப்போட்டிகளில் வலய மட்ட த்தில் முதலிடம் பெற்ற மாணவர்குழுக்கள் பங்கேற்கவுள்ளனர்.

வலயக்கல்விப்பணிப்பாளர்கள், போட்டியில் பங்கேற்கவுள்ள மாணவர்கள், கல்வி பயிலும் பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாக மாணவர்கள் போட்டியில் பங்குபற்றுவதற்குரிய ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (2-15)

### கைதியின் பயணப்பொதியில் இருந்து

# கைவிலங்கை திறக்கும் சாவி கண்டெடுப்பு

(மல்லாவி)

**பாரிய கொள்ளைச் சம்பவங்களுக்குரிய வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் வவுனியா நீதிமன்றில் முற்படுத்துவதற்காக அழைத்து வரப்பட்டு விசேட பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டிருந்த இரு கைதிகளில் ஒருவரின் உடுப்புப் பொதியில் இருந்த சவக்காரப்பெட்டியினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைவிலங்கு திறக்கக்கூடிய சாவி ஒன்றை கொழும்பு சிறைச்சாலை அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா நீதிமன்றில் முற்படுத்துவதற்காக மாத்தறை சிறைச்சாலையிலிருந்து கொழும்பு சிறைச்சாலைக்கு கடந்த 29ஆம் திகதி புதன்கிழமை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கைதிகளாக இருந்த இரு சகோதரர்கள் அழைத்து வரப்பட்டு விசேட பாதுகாப்பின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை புகையிரதம் மூலம் வவுனியா நீதிமன்றிற்கு அழைத்து செல்வதற்காக இவர்கள் இருவரும் கொழும்பு சிறைச்சாலை அதிகாரிகளின் விசேட பாதுகாப்பின் கீழ் கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவ்வேளை கைதிகளின் உடைமைகளை அதிகாரிகள் சோதனை செய்தபோது கைவிலங்கினை திறக்கக்கூடிய சாவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் புகையிரதத்தில் பயணிக்கும் போது காட்டுப்பகுதியில் கைவிலங்கினைத் திறந்து தப்பிச் செல்ல திட்டமிட்டு இருந்ததாக முதற் கட்ட விசாரணையின்போது அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிராக 11பாரிய கொள்ளை சம்பவங்களுக்குரிய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எவ்வாறு கைவிலங்கினை திறக்கும் சாவி கிடைக்கப்பெற்றது என்பது தொடர்பில் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (2-15)




### விசுவமடு சந்தை வளாகத்தினுள்

# கொட்டப்படும் கழிவுப்பொருட்கள் அகற்றப்படாமையால் துர்நாற்றம்

### பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(விசுவமடு)

விசுவமடு சந்தையில் கொட்டப்படும் கழிவுப்பொருட்கள் நாளாந்தம் அகற்றப்படாமையால் அப்பகுதி துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தையில் மீன், இறைச்சி விற்பனை செய்யும் இடம், மரக்கறி விற்பனை செய்யும் இடம் என இரு பிரிவுகளாகக் காணப்படுகின்றது.

இங்கு நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுகள் சுத்திகரிப்பு தொழிலாளர்களினால் அன்றாடம் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில் தற்போது இத்தொழிலாளர்கள் மூன்று அல்லது நான்கு நாட்கள் கடந்த நிலையிலும் அப்புறப்படுத்தப்படாமல் காணப்படுவதாக அங்குள்ளவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சந்தைக்கழிவுகள் கொட்டப்படும் இடம் துர்நாற்றம் வீசுவதுடன் ஈக்களின் தொல்லையும் அதிகரித்து காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் இங்கு பெருக்கெடுக்கின்ற ஈக்கள் உணவகங்களில் காணப்படும் உணவுகளிலும் மீன்,இறைச்சி ஆகியவற்றிலும் அமர்ந்து இருப்பதால் பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

குறித்த சந்தையினுள் விசர்நாய்களின் நடமாட்டம் கூடுதலாக இருப்பதால் அவைகள் மற்றைய நாய்கள்,பூனைகள் என்பவற்றை கடித்து அவையும் இறக்க நேரிடுகின்றது.

இவ்வாறு நேற்று முன்தினம் விசர்நாயினால் கடியுண்ட நாய், பூனை மற்றும் அதன் குட்டிகள் சந்தைவளாகத்தினுள் இறந்து கிடந்தன.

தற்போது அவைகள் அப்புறப்படுத்தப்படாமையால் துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளது. இதனால் சந்தையினுள் பொருட்களை நுகர வருவோர்,வர்த்தகர்கள் ஆகியோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இச்சந்தை புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியாகையால் சம்பந்தப்பட்டவர்கள் நாளாந்தம் துப்புரவு செய்யும் சுத்திகரிப்பாளர்களை அனுப்பி மேற்பார்வை செய்து சந்தை வளாகத்தை துப்புரவு செய்ய வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2)

# பெண்ணின் கராத்தேக்கு ஈடுகொடுக்க முடியாமல் இளைஞர்கள் தப்பியோட்டம்

(மல்லாவி)

வயல் வெளியொன்றின் பாதை வழியாக துவிச்சக்கரவண்டியில் தனியாகப் பயணித்த யுவதியொருவரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த மூன்று இளைஞர்கள் சன நடமாட்டம் இல்லாத இடத்தில் வைத்து தகாத முறையில் நடக்க முயன்றனர்.

இதனையடுத்து பிரஸ்தாப பெண்ணின் அவலக்குரல் கேட்டு அவ் வீதி வழியாக சென்ற பிறிதொரு பெண் பாய்ந்து சென்று கராத்தே தாக்குதல் மூலம் அப் பெண்ணை காப்பாற்றிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் அப் பெண்ணின் கராத்தே தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தாம் பயணித்து வந்த மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு மூவரும் தப்பிச் சென்ற சம்பவம் மல்லாவி பொலிஸ் பிரிவில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பிரஸ்தாப பெண் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் மல்லாவி நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் பொருட்களை கொள்வனவு செய்து விட்டு மல்லாவி பாரதி நகர் பாலியாற்றுப்பகுதி வீதியூடாக தனது கரும்புள்ளியான் கிராமத்திற்கு பயணித்த வேளை சன நடமாட்டம் இல்லாத பாலியாற்றுப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் பிரஸ்தாப பெண்ணை பின் தொடர்ந்த மூன்று இளைஞர்கள் தகாத முறையில் நடக்க முற்பட்டனர்.

இதன்போது அப்பெண் கூக்குரலிடவே வீதியால் பயணித்த பெண்ணொருவர் பாய்ந்து கராத்தே தாக்குதல் நடத்தினார்.

இதனையடுத்து மூன்று இளைஞர்களும் தப்பிச் சென்றனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் பிரஸ்தாப பெண்ணினால் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இளைஞர்களை தேடியுள்ளனர்.

அத்துடன் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிளை மீட்டு மல்லாவி பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றதுடன் தப்பியோடிய இளைஞர்களையும் தேடி வருகின்றனர். (2-15)

# இளைஞர் விருது போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 37ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இளைஞர் விருதுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கலைத் துறையில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டில் இளைஞர் கழக அங்கத்தவராகவுள்ளவர்கள் இந்த போட்டிக்காக விண்ணப்பிக்கலாம் நாடகப் பிரிவில் பங்குபற்றுபவர்களுககான வயதெல்லை 15தொடக்கம் 35 ஆகும.

ஏனைய போட்டிகள் அனைத்திற்கும் 13 தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். இந்த வகையில் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழாங்கப்படுவதோடு முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கான தேசிய மட்டத்தில் போட்டி இடம்பெற்று வெற்றியாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

அந்தவகையில் அறிவிப்பாளர், பேச்சு, இளம பாடகர், கிராமியபாடல் (ஆண்,பெண்), கிராமிய நடனம், புத்தாக்க நடனம் ஆகிய போட்டிகளும் சாகித்திய விருதுப் போட்டிகளாக நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை, பாடலாக்கம், தொலைக்காட்சி நாடகம், சிறுவர் இலக்கிய பிரதிகள் ஆகிய போட்டிகளுக்கு விண்ணப்பத்துடன் குறித்த ஆக்கத்தின் மூன்று பிரதிகளையும் அனுப்பி வைக்க வேண்டும். மேலதிகமாக பரத நாட்டியம், கதக், மௌன நாடகம், சாஸ்திரிய இசை, மேலைத்தேய இசை, சித்திரம், புகைப்படம், சிற்பங்கள் ஆகிய போட்டிகளும் இடம் பெறுவதோடு விசேடமாக மாற்றுவலுவுடைய இளைஞர்களுக்காக புத்தாக்க நடனம், அறிவிப்பாளர், பேச்சு,இளம்பாடகர், கிராமிய பாடல், சித்திரம் ஆகிய போட்டிகளும் ஆங்கிலமொழி மூலமாக அறிவிப்பாளர், பேச்சு, இளம்பாடகர் ஆகிய போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

எனவே ஆர்வமுடையவர்கள் ஏ4 தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பெயர், விலாசம், பிறந்த திகதி, தொலை பேசி இலக்கம், பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்டம், இளைஞர் கழகத்தின் பெயர், போட்டிப் பிரிவு, ஆக்கத்தின் பெயர் ஆகியன உள்ளடக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்களை உதவிப்பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கண்டி வீதி, மாங்குளம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலகத்தோடு அல்லது 021 206 0017, 077 617 8344 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி தெரிவித்துள்ளார். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்

## சர்வதேச விசாரணை அவசியம்

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமென தமிழ்த்தேசிய கூட்டமைப்பு,தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி,ஈழமக்கள் ஜனநாயக கட்சி,தமிழர் விடுதலைக்கூட்டணி,ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன வலியுறுத்தியுள்ளன.**

**எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் யாழில் போட்டியிடும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் ஒரே மேசையில் அமர்ந்து கருத்துக்களை முன்வைக்கும் நிகழ்வு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.இதில் த.தே.கூ.சார்பில் எம்.ஏ.சுமந்திரன், த.தே.மு.சார்பில் வி.மணிவண்ணன்,ஈ.பி. டிபி.சார்பில் டக்ளஸ் தேவானந்தா, த.வி.கூ. சார்பில் த.விக்னராஜா, ஜனநாயக போராளிகள் கட்சியில் என்.வித்தியாதரன்,ஜே.வி.பி.சார் பில் எஸ்.சந்திரசேகரம், கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இதன் போதே இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்த குற்றங்கள் தொடர்பில் சர்வதேச பொறி முறை அவசியமென முதல் ஐந்து கட்சிகளினதும் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.**

### எம்.ஏ.சுமந்திரன்

தமிழ்த் தரப்பின் நிலைப்பாட்டிற்கும் சிங்களத் தரப்பின் நிலைப்பாட்டிற்குமிடையில் பாரியவித்தியாசம் காணப்படுவதனால்தான் இனப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலிலும்கூட இரு பெரும்பான்மைக் கட்சிகள் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வையும் தமிழ்த் தரப்பாகிய நாங்கள் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வையும் கோரி நிற்கின்றோம்.

இந்த நிலைப்பாட்டை நாம் எதிர்வரும் காலங்களில் சிறந்த முறையில் முன்னெடுப்பதாகவிருந்தால் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு பெருவாரியான ஆதரவினை வழங்கவேண்டும்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்குள்தான் தமிழர்களுக்கு தீர்வுத்திட்டம் என இந்தியா ஒருபோதும் கூறவில்லை. சமஷ்டி முறையிலான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என இந்தியா விரும்பியுள்ளது. அதனைத்தான் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும் இலங்கைப் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

போர்க்குற்றம் தொடர்பில் போரில் ஈடுபட்ட இரு தரப்பும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் எனக்கூறப்படுகின்றது.

இவை தொடர்பில் எந்த விசாரணையும் பக்கச்சார்பாக இடம்பெறமுடியாது. இதற்குச் சர்வதேச விசாரணையே அவசியமானது. ஏற்கனவே ஒரு விசாரணை முடிவடைந்துள்ள நிலையில் அதற்கான அறிக்கையும் வெளிவரவுள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தினால் அபகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் 19 இராணுவப் பிரிவுகள் உள்ள நிலையில் 16 பிரிவுகள் வடக்கிலும் ஒரு பிரிவு கிழக்கிலும் இருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டின் முழுப்பாகங்களிலும் இராணுவம் சரியாக பகிரப்படவேண்டும். தனியாகவடகிழக்கில்நிலைகொண்டுள்ளதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

மேலும் வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் இளைஞர்களை மையப்படுத்திய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்க வேண்டும்.

தற்போது யாழில் குடிநீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாகவுள்ளது. இரணைமடுத் தண்ணீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவருவது குறித்து கூட்டமைப்பிற்குள் ஒரு பொது முடிவொன்று எடுக்கப் பட்டிருந்தது.

எனினும் கிளிநொச்சி விவசாயிகளின் எதிர்ப்பின் அடிப்படையில் கிடப்பில் அத்திட்டம் போடப்பட்டுள்ளது. 30 அடியில் இருந்து 32 அடிக்கு இழுத்து நீரினை உயர்த்தும் போது எதிர்விளைவுகள் ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட அளவு நீர் இருந்தால்தான் யாழ். குடாநாட்டிற்கு நீர்வழங்கமுடியும் என்ற நிபந்தனை அடிப்படையில் இரணைமடு குடி நீர்த்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

இவை தொடர்பில் நிபுணத்துவ அடிப்படையில் ஆராய்ந்து யாழ்.குடாநாட்டிற்கான நீர்விநியோகம் தடைப்பட்டுவிடாமல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தவேண்டும் என்றார் அவர்.

### வி.மணிவண்ணன்

திம்பு கோட்பாடு அடிப்படையிலான தீர்வினை நோக்கியே நாம் பயணிக்கின்றோம். ஒருநாடு இருதேசம் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

தமிழ்த்தரப்பிற்கு மத்திய அரசினால் வழங்கப்படுகின்ற அதிகாரப் பகிர்வு என்பதனை நாம் ஒருபோதும் நம்பமுடியாது.

ஒரு காலத்தில் வழங்கப்படுகின்ற அதிகாரப்பகிர்வு இனிமேல் வரப்போகின்ற அல்லது வேறொரு அரசின் காலத்தில் பாதிக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

ஆகவே மத்திய அரசினால் வழங்கப்படுகின்ற அதிகாரப்பகிர்வென்பது நிலையற்றது. நம்பகரமற்றதாகும். நாங்கள் ஒரு தேசம். எங்களுக்கென்று சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற அதிகாரப் பகிர்வு தான் அர்த்தமுடையதாகவிருக்கும்.

எமது இந்த நிலைப்பாட்டிற்குச் சிங்களத் தலைவர்கள் என்றுமே எமக்கு தீர்வினைத் தரமாட்டார்கள் என்பதுதான் காரணம்.

எமது இந்த நிலைப்பாட்டினை நடைமுறைச்சாத்தியமற்றது எனப் பலர் விமர்சித்து வருகின்றனர். நடைமுறைச் சாத்தியம் இல்லை என்பதற்காக எமது உரிமைகளை விட்டுக்கொடுப்பது எந்தவகையில் நியாயம்.

வெறுமனே ஆளுநரின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் 13 ஆம் திருத்தச்சட்டத்தினை நாம் எப்போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எமது மக்களின் நிலங்கள், கடல் வளங்கள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுக்கொண்டுள்ளன. முதலில் இங்கு நிலை கொண்டுள்ள இனவழிப்பு இராணுவம்வெளியேற்றப்பட வேண்டும்.

புலம்பெயர் தமிழ்மக்களின் நிதியுதவியுடன் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித்திட்டங்களை வழங்கி வருகின்றோம்.

எமது கட்சிக்கு பாராளுமன்ற உறுப்புரிமை கிடைக்கும் பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் பரந்தளவிலான காப்பகங்களை உருவாக்கி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளை பராமரிக்கவுள்ளோம்.

மாகாணசபை எந்த அதிகாரமும் அற்றது என வடக்கு மாகாண, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்கள், முன்னாள் வடகிழக்கு முதலமைச்சர்கள் ஆகியோர் கூறியுள்ளனர்.

ஆளுநரின் ஆதிக்கத்தில் உள்ள வடமாகாணசபையினூடாக எமது இளைஞர்களுக்கு எந்த வேலையையும் முழுமையாக வழங்கமுடியாது.

எனினும் புலம்பெயர்மக்களின் பாரியளவிலான நிதிப்பங்களிப்புடன் தனியார் வேலைத்திட்டங்களை உருவாக்கி இதனூடாக இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கமுடியும்.

இரணைமடுக் குடிநீர்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியேற்படலாம். ஆகையால் ஆறுமுக திட்டத்தினை நடைமுறைப்படுத்தி மழைநீர் கடல்நீரில் கலக்காதவாறு செய்தல் வேண்டும். இத்திட்டத்தின்மூலம் வடக்கின் முழுப் பகுதிக்கும் நீரைவழங்க முடியும் எனத் தெரிவித்தார்.

### கே.என்.டக்ளஸ் தேவானந்தா

13வது திருத்தசட்டத்தினை முழுமையாக ஆதரித்து அதற்கு அப்பால் சென்று தீர்வினை பெறுவதே உசிதமாகும்.

தமிழர்களிற்கான தீர்வு திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் கடந்த காலத்திலிருந்த தமிழ்த்தலைமைகள் அவற்றை தட்டிக்கழித்தமையினால் தான் எமது மக்களுக்கு இத்தனை அழிவுகள் ஏற்பட்டன.

எனது அரசியல் அனுபவத்தின் மூலம் 13ஆவது திருத்தச்சட்டத்தினை ஆதரித்து கட்டம் கட்டமாக முன்னோக்கி செல்வதே சிறந்தது என தோன்றுகின்றது.

இங்கு நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும். 1983ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரையான காலப்பகுதி விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் தேவைக்கு அதிகமாகவுள்ள படைகள் வெளியேற்றப்படல் வேண்டும்.மக்களது காணிகளினை இராணுவம் வைத்திருக்க முடியாது.

நீண்டகாலமாக எவ்வித விசாரணைகளுமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள்பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலைசெய்யப்படவேண்டும்.

போரில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களிற்கும் உதவிகள் கிடைக்கப்படல் வேண்டும், எல்லா இயக்கங்களும் எமது மக்களின் விடுதலைக்காகவே போராடியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எமக்கும் இலக்குகளில்வேறுபாடில்லை. இரணைமடு குடிதண்ணீரை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு புலிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

மேலும் எந்த அரசானாலும் அவர்களுடன் இணங்கி எமக்கான தீர்வுகளினை பெற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### ரி.விக்னராஜா

மொழிஉரிமையைபெற்றுத் தரும் 16 ஆம் திருத்தச் சட்டத்தை செயற்படுத்துவதற்கு நாம் முயற்சித்து வருகின்றோம்.

அன்றுஅமோகஆதரவினை பெற்ற எமது கட்சி தமிழ்மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மீண்டும் ஆணையை பெறவேண்டியதேவையில்லை.

ஏனைய மாகாணங்களை விட வடக்கு , கிழக்கில் இராணுவம் அதிகரித்து நிலை கொண்டுள்ள நிலையில் இங்கு நல்லாட்சி நடைபெறுகின்றது என கூறிவிட முடியாது.

காணாமற் போனோர் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகளை தொடுத்து அர்த்தமான முறையில் எமது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

போரின் பின்பு மக்கள் மத்தியில் ஏற்பட்ட விரக்தி நிலையை தமிழ்த் தலைமைகள் களையத் தவறியுள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வடக்கு மாகாண முதலமைச்சரின் முயற்சியில் பல திட்டங்கள் தயார் நிலையில் உள்ளன.

முதலமைச்சரின் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கவுள்ளோம். ஆகையினால் முதலமைச்சர் கூறியது போல் அர்ப்பணிப்புள்ளவர்களை மக்கள் தமது பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என வழங்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்டம் உண்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்றடையவில்லை.

வடக்கு மாகாண முதலமைச்சரினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் இரணைமடு குடிநீர் திட்டம் முன்வைக்கப்பட்டபோது அதனையும் மக்கள் பிரதிநிதிகள் எதிர்த்திருந்தனர்.

குடிநீர் என்பது மக்களுக்கு இன்றியமையாததாகும். ஆகவே தூரநோக்கு கொண்ட பிரதிநிதிகளை மக்களே தெரிவு செய்ய வேண்டும் என்றார்.

### என்.வித்தியாதரன்

எம்முடைய பிரச்சினைகளுக்கு நாம் போராடியே தீர்வைப்பெற வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

காந்தீயவழியிலானபோராட்டத்தின் மூலம் ஒரு அதிர்வினை சர்வதேச ரீதியிலும் உள்ளூர் மட்டத்திலும் முன்னெடுப்பதே சிறந்தது.

எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பிலான உண்மை வெளிக் கொணரப்பட்டால் மாத்திரமே நல்லிணக்கம்ஏற்படவாய்ப்புண்டு.

போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு சர்வதேச பொறிமுறையொன்று அவசியமாகின்றது.

அவ்வாறே யுத்தக்குற்றம் எனக் கூறப்படுகின்ற போது அதனை தூண்டியவர்களும் வழிநடத்தியவர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இராணுவவசமுள்ளதமிழ் மக்களின் நிலங்களினை நீதிமன்றம் மூலமாக விடுவிப்பது என்பதில் எமக்கு எள்ளளவும் நம்பிக்கை யில்லை. இலங்கையின் நீதித்துறையில்எமக்குநம்பிக்கை என்பது இல்லை. இதற்கு ஒரு சர்வதேச பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

போரினால் அங்கவீனமடைந்த பாதிக்கப்பட்ட மக்களிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் சிறப்பான உதவிகளினையும் நடவடிக்கைகளினையும் மேற்கொண்டுவந்தனர்.ஆனால் அவர்களின் காலத்தின் பின்னர் தமிழ் தலைமைகள் அவற்றைசரியாகசெய்யவில்லை.

இங்குள்ள குடிநீர் பிரச்சினையை முகாமைத்துவ பிரச்சினையாக தான் பார்க்க வேண்டும். இதனை அத்துறை சார்ந்தவர்களும் வல்லுநர்களுமே தீர்மானிக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

### எஸ்.சந்திரசேகரம்

தேசிய பிரச்சினையாகவுள்ள ஜனநாயகம், சமத்துவம் ஆகியவற்றினை சீர்படுத்தி முன்னெடுப்பதே எமது நோக்கம். 13ஆவது திருத்தச்சட்டம் மக்கள் மீது பலவந்தமாக திணிக் கப்பட்டதாகவே பார்க்கின்றோம்.

இனங்களுக்கிடையே பொருளாதார ரீதியாக சமத்துவத்தினை ஏற்படுத்தாவிட்டால் இனப்பிரச்சினையை தீர்க்கமுடியாது என்பது எமது நிலைப்பாடு.

இந்த நாட்டில் தமிழ்மக்களுக்கு மட்டும் பிரச்சினைகள் இல்லை. சிங்கள மக்களும்பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவர்களும் கஷ்டப்படுகின்றார்கள்.

தமிழ்–சிங்கள மக்களிடையே இனவாதத்தை தூண்டி தமது இலக்கினை தமது அரசியல் இலாபங்களினை தேடிக்கொண்டு தமது இருப்பினையும் நிலைநிறுத்தி கொண்டுள்ளனர்.

தனியே ஏகாதிபத்தியங்களினால் திணிக்கப்படுகின்றதீர்வு அவர்களின் நலன் சார்ந்ததாகவே இருக்கும்.

மேலும் போர்க்குற்றம் இழைத்த அனைத்து தரப்பும் தண்டனைக்குட்படுத்த வேண்டும்.மேலும் காணாமல் போனோர் கண்டறியப்பட வேண்டும்,தமிழ் மக்களின் காணிகள் கையளிக்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(தொகுப்பு:உ.சாளின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்.
- பைபிள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நேர்மையான தலைவர்களாக உங்களை மாற்றுங்கள்

தமிழ்மக்கள்பட்ட அவலங்கள், அனுபவிக்கும் இழப்பின் துயரங்கள் கொஞ்சமல்ல. இந்த நாட்டில் இனவாதிகள் கட்டவிழ்த்துவிட்ட அத்தனை கலவரங்களின் போதும் தமிழ் மக்கள் சந்தித்த இழப்புகள் ஏராளம்.

இதன் காரணமாக தமிழ் இனம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். எங்களுக்கான உரிமைகளைப் பெற வேண்டும் என எங்கள் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆயுதப் போராட்டமும் பேரிழப்பைத் தந்து முடிந்து போனது.

இழந்தவருக்கே இழப்பு, காணாமல்போன குடும்பங்களுக்கே கவலை என்பதாக நிலைமை முடிந்துபோனது.

ஒருபெரும் மண் மீட்புப் போர் ஈற்றில் தனிபட்ட இழப்புகளைத் தந்துபோனதுதான் பெரும் கொடுமை.

இந்நிலையில் மீண்டும் அரசியலுக்கூடாக உரிமையைப் பெறுதல் என்ற விடயம் எழுகை பெற்றது.

அரசியலூடாக தமிழர்கள் தங்கள் உரிமைகளை வெல்லமுடியும். நாங்கள் இழந்த இனம். அதனால் எங்களுக்கு சர்வதேசம் உதவும் என்று நம்பினோம். நம்புகிறோம். எனினும் எங்கள் நம்பிக்கை தளர்ந்துபோகும் அளவிலேயே எங்கள் அரசியல் சூழமைவு உள்ளது.

எங்கள் அரசியல் தலைவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக தங்களைக் காட்டிக் கொள்ளாமை தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது வேறு. தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய அரசியல் தலைவர்களாக இருப்பதுவேறு.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ் அரசியல் தலைவர்கள் தவறிவிட்டனர் என்று எந்தத் தமிழ் மகனும் குற்றம் சாட்டவில்லை.

மாறாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் கூட நீங்கள் எங்களோடு நின்று சேவை புரியவில்லை. நாங்கள் உங்களை நம்பி வாக்களித்தோம். ஆனால் நீங்கள் கடந்த 5 ஆண்டுகளில் என்ன செய்தீர்கள்?

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சனசமூக நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபாயை ஒதுக்கீடு செய்வதுடன் உங்கள் பணி முடிந்து விட்டதாக நீங்கள் கருதுகிறீர்களா? என்பதே தமிழ் மக்களின் கேள்வி என்பதை தேர்தல் களத்தில் இறங்கியுள்ளவர்கள் உணரவேண்டும்.

அன்புக்குரிய வேட்பாளர்களே! உங்களில்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் யார் என்பது இன்னும் தெரியாது. ஆனால் ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன்.

அண்மையில் காலமான டாக்டர் அப்துல் கலாமின் இறுதிச் சடங்கு இராமேஸ்வரத்தில் நடைபெற்றது.

கலாமின் அண்ணன் முகமது முத்துமீரா லெப்பை மரிக்கார் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக இராமேஸ்வரத்துக்கு செல்ல ஆயத்தமானார்.

பஸ் கிடைக்காததால் லொறி ஒன்றில் ஏறி குறித்த இடத்தில் இறங்கி, பின்னர் பஸ்ஸில் பயணித்தார்.

பஸ்ஸால் இறங்கியபோது அவருக்குத் தெரிந்த ஒருவர் தனது காரில் ஏற்றிச் சென்று அப்துல் கலாமின் இறுதிச் சடங்கு நடைபெறும் இடத்தில் இறக்கிவிட்டார். நிலைமை எப்படி என்று பார்த்தீர்களா?

இந்திய தேசத்தின் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் அப்துல் கலாமின் அண்ணன், தனது தம்பி; இந்திய தேசத்தின் முன்னாள் குடியரசுத் தலைவர் ; உலகம் போற்றும் உன்னத விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாமின் இறுதிச் சடங்கிற்கு எப்படிச் சென்றார்.

லொறியில், பஸ்ஸில் தெரிந்தவரின் காரில் நினைக்கவே கண்கள் கலங்குகின்றன.

கலாமின் நேர்மையான தலைமையும்; தூய அறிவியலும்; பணத்துக்கு ஆசைப் படாத பெருந்தன்மையும் இங்கு பளிச்சிடுகிறது. கலாம் இப்படியென்றால் அவரின் அண்ணன் மரிக்கார் எப்படி? பிரதமர் மோடியிடம் அவர் என்ன கேட்டார்?

எனக்கு வாகனம் இல்லை ;என் பிள்ளை உயர் படிப்பு படிக்க வசதியில்லை என்றா கேட்டார்? இல்லவே இல்லை.

என் தம்பி கலாமின் கல்லறையில் தினமும் திருக்குர்ஆன் ஓதுவதற்கு ஆவன செய்யுங்கள் என்று மட்டுமே கேட்டார். எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? இப்படியான நேர்மையாளர்களையே தமிழ் இனம் தேடிநிற்கிறது.

## மோ.சைக்கிள் விபத்து

### ஒருவர் காயம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ரயர் கழன்றதில் மோட்டார் சைக்கிள் மதகுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் பருத்தித்துறை தம்பசிட்டியில் நேற்று சனிக்கிழமை முற்பகல்9.30 மணியளவில்இடம்பெற்றுள்ளது.

இதில் தர்மலிங்கம் கோடிதாஸ் (வயது 32) என்ற இளைஞரே இவ் வாறு விபத்துக்குள்ளாகி படுகாயங்களுக்குட்பட்டுள்ளார்.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற குறித்த இளைஞரது மோட்டார் சைக்கிள் ஒன்றே இவ் வாறு விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளுடன் தூக்கி வீசப்பட்ட இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வீதியில் கிடந்துள்ளார்.

பின்னர் அங்கு வந்த பொதுமக்களின் உதவியுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது. (செ-5,60)

## பாதுகாப்புச் சபை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பாதுகாப்புச் சபையின் ஆயுள் வேத பாதுகாப்புச் சபை விசேட பொதுக் கூட்டமானது எதிர்வரும் 7-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

எனவே நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட அனைத்து சுதேச மருத்துவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (செ-5)

## 150,000 பேர் விழிப்புலனற்றவர்கள்

இலங்கையில் சுமார் 150,000 பேர் விழிப்புனலற்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. கட்ரக் காரணமாகவே இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பார்வையியை இழக்கின்றனர். மிக எளிமையான சத்திரசிகிச்சையின் மூலம் இவர்களுக்கு பார்வையை திரும்ப வழங்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

விழிப்புலனற்றவர்களுக்கு சிகிச்சை வழங்க வருடாந்தம் சுகாதார அமைச்சு 2 மில்லியன் ரூபா செலவிட்டு வருவதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். (செ)

## துமிந்தவின் ஆதரவாளர்கள் மீது வான் மோதியதில் ஒருவர் பலி

### 5 பேர் காயம்

அநுராதபுரம் ரபேவ பகுதியில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் ஓட்டிச் சென்ற வான் ஒன்றில் மோதுண்டு ஒருவர் பலியாகியுள்ளதுடன் மேலும் 05 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் ரபேவ பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் ஆதரவாளர்கள் மீதே குறித்த வான் மோதியுள்ளது.

மதவாச்சியில் இருந்து அநுராதபுரம் நோக்கி சென்ற வான் இவர்கள் மீது மோதிக் கொண்டு சென்றதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த 04 ஆண்கள் உட்பட பெண்ணொருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் காயமடைந்தவர்களில் இருவரின் நிலமை கவலைக்கிடமாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வானை ஓட்டிச் சென்றவர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் என்பதுடன் மிஹிந்தலை பொலிஸாரினால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிசாரால் மேற்கொள்ளபட்டு வருகின்றது. (செ-11)

## "போதைப்பொருட்களில் அமிழ்ந்து பேதைகளாகாது அழியாதவாழ்வுதரும் உணவுக்காக உழைப்போம்"

## பரமபிதா காட்டிய பாதை

**ம. பிரான்சிஸ்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

இன்று நமக்கு தரப்படும் பைபிள் பகுதியை நோக்கும் போது இயேசு என்ன நோக்கத்திற்காக அந்த மக்கள் தன்னை பின் தொடர்ந்து வந்தார்கள் என்பதை அறிந்திருந்தார். இயேசு அவர்களின் நோக்கத்தை நேரடியாக அவர்களிடமே தெளிவாக எடுத்து ரைக்கிறார்: "நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால் தான் என்னைத் தேடுகிறீர்கள்". என்கிறார். மக்களுக்கு உலகம் சார்ந்த தேவைகள் முக்கியமானவையாக இருக்கின்ற போதிலும், அவற்றில் அவர்கள் உடன் நிறைவு அடையாமல் சற்று விலகிச் செல்ல அவர்களுக்கு உதவுவதற்கு இயேசு விரும்புகிறார். சாதாரணமாக நம் அன்றாடத் தேவைகளான உணவு, உடை வேலை போன்றவற்றை அன்றி வாழ்வின் நிலையான எல்லையை இயேசு நமக்குக் காட்டவிரும்புகிறார். 'அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வு ணவை மானிட மகன் உங்களுக்குக் கொடுப்பார்" என்று இயேசு கூறுகிறார்.

நாம் தேடி வரவேற்க வேண்டிய இந்த அழியாத உணவைப் பற்றி இயேசு பேசுகிறார். வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு தரும் உண்மையான உணவு இயேசுவே. இஸ்ரயேலர் உண்ட மன்னாவை விட மேலான உணவால் கிறிஸ்தவர்கள் ஊட்டம் பெறுகிறார்கள். ஏனெனில், நற்கருணை வழியாக கிறிஸ்து தன்னையே உணவாக வழங்குகிறார். 'வாழ்வுதரும்உணவு நானே. என்னிடம் வருபவருக்கு பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" என்று இயேசு கூறுகிறார். நாம் இயேசுவில் விசுவாசம்கொண்டு, அவரது வாக்குறுதிகளில் நம்பிக்கை கொள்ளும் போது நிறைவான வாழ்வைப் பெறுவோம். நாம் அறிந்த ஒரு உண்மை சம்பவத்தை இந்த இடத்தில் பகிர்ந்து கொள்ளத்தான் வேண்டும்: ஒருவர் தினமும் குடித்து வந்தார். அவரது குடிப்பழக்கம் காரணமாக அவருடைய குடும்பம் மிகுந்த பிரச்சினைக்குள் இருப்பதை அறியாமல் தொடர்ந்தும் அதே நிலை யில் வாழ்ந்துவந்தான். தான் சம்பாதித்த பணத்தையெல்லாம் குடிப்பதில் செலவிட்டு வந்தார். அவர் ஒரு நாள் கேரளத்தில் உள்ள தியான மடம் சென்று திரும்பினார். இயேசுவின் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டார். இயேசுவின்மீது கொண்ட பக்தி காரணமாக அவர் குடிப்பதை நிறுத்திவிட்டார். சில மாதங்களுக்குப் பின்னர் வீதியில் சென்று கொண்டிருந்த போது முன்னர் அவரோடு குடித்துக் கொண்டிருந்த ஒருவரை சந்தித்தார். "நண்பா நீ இப்போதெல்லாம் குடிப்பதற்கு வருவதில்லையே என்று கேட்டார்". "நான் இயேசுவைச் சந்தித்தேன். அவரை நான் நம்புகிறேன். இப்போது குடிப்பதை நிறுத்திவிட்டேன்" என்றார். "ஓ நீ இயேசுவை நம்புகிறாயா? அவர் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றியதாக சொல்லப்படுவதையெல்லாம் நம்புகிறாயா?" எனக் கேட்டார். இயேசு தண்ணீரை இரசமாக மாற்றியதை நான் பார்க்கவில்லை. ஆனால் அவர் பீரையும் விஸ்கியையும் என் குடும்பத்தில் அனைவருக்கும் உணவாகவும் உடையாகவும் மாற்றியுள்ளார் என்பதை நம்புகின்றேன். நான் இப்போது அழிந்து போகும் உணவை அல்ல அழியா வாழ்வு தரும் உணவை அன்றாடம் அருந்த ஆவலாய் இருக்கின்றேன் என்றார் அவர்

நாம் இந்த உலகில் இரு விதமான உணவுகளைக் காண்கிறோம்: "அழிந்து போகும் உணவு". "அழியாத வாழ்வு தரும் உணவு". அழிந்து போகும் உணவுக்காகத்தான் நாம் அனைவரும் ஆர்வத்துடன் உழைக்கின்றோம். இடையூறுகளைச் சகித்துக்கொள்கின்றோம்.

அழியாத வாழ்வு தரும் உணவாக இறைமகன் இயேசு இருக்கிறார். அவரது வார்த்தையும், உடலும் நிலை வாழ்வைத்தருகின்றன.



ஆனால், இவற்றின்மீது ஆர்வமற்றவர்களாக, நம்மில் பலரும் வாழ்கிறோம். இன்று படிப்படி யாக நாம் ஆன் மீகத் தின் அடிநாதத்தை இழந்து வருவதைக் காண்கிறோம். இறைவன் தரும் அமைதி, ஆற்றல், மகிழ்ச்சியை விட உலக இன்பங்கள், உணவு, உல்லாசங்கள், எமது உயரிய மதிப்பீடுகளாக மாறி வருகின்றன. போதைப் பொருட்களில் பேதைகளாகி போக்கிலிகளாக சுற்றிச்சுற்றி வந்து அற்பசுகம் அடைகின் றோம், நாம் சொற்பவாழ்வு கிடைத்தும் அற்ப வயிற்றுப் பசிக்காக அற்ப உணவிற்காக ஆண்டவரை அவமதிக்கின் றோம். எனவே, இன்று நற்செய்தியில் இயேசு நமக்கு ஓர் எச்சரிக்கை அழைப்பு விடுக்கின்றார் போலும். "அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலை வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிடமகன் எங்களுக்குத் தருவார்!" பல மைல்கள் கடந்து வாழ்வு தரும் வார்த்தைக்காக அவரிடம் தேடி ஓடி வருவோம். இயேசு, அங்கே உண்மையான வார்த்தைகளை அள்ளித் தருவார். அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். அழியாத நிலையான உணவிற்காகவே உழைப்போம். இறைவனைத் தவிர்த்த எந்த மகிழ்ச்சியும் உண்மை மகிழ்ச்சியன்று. இவை யாவும் இன்றிருந்து நாளை மறையக் கூடிய அழிந்து போகும் உணவுக்கு ஒப்பானவை. அழியும் இன்பங்களில் அமிழ்ந்து அழிந்து விடாது நாம் சாதுரியமாக வாழ்வோம். இயேசுவில் நிலைவாழ்வை, நிறை வாழ்வைப் பெறுவோம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் டெஸ்ட் ஆஷஸை வென்றது இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான ஆஷஸ் தொடரின் 3வது டெஸ்ட் போட்டி பர்மிங்காம் நகரில் கடந்த 29ம் திகதி தொடங்கியது.

இதில் முதல் இன்னிங்சில் முறையே அவுஸ்திரேலியா 136 ஓட்டங்களும், இங்கிலாந்து 281 ஓட்டங்களும் எடுத்தன.

பின்னர் 145 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் அவுஸ்திரேலியா 2வது தொடங்கியது. இதிலும் திணறிய அவுஸ்திரேலிய அணி 281 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

வோனர் (77), நெவில் (59), ஸ்டார்க் (58) ஆகியோர் அரைசதம் அடித்து அணிக்கு ஓரளவு உதவினர்.

2 ஆண்டுகள் இடைவேளைக்கு பிறகு அணிக்கு அழைக்கப்பட்ட ஸ்டீவன் பின் 6 விக்கெட்டுகள் வீழ்த்தி அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்துள்ளார்.

இதன் மூலம் இங்கிலாந்துக்கு 121 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.


இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு அணித்தலைவர் அலஸ்டயர் குக் 7 ஓட்டங்களிலும், ஆடம் லைத் 12 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

இருப்பினும் இயான் பெல்லும் (65), ஜோ ரூட்டும் (38) இணைந்து அணியை வெற்றிகரமாக கரைசேர்த்தனர்.

இதனால் இங்கிலாந்து அணி 2வது இன்னிங்சில் 32.1 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 124 ஓட்டங்கள் சேர்த்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

வெற்றியையடுத்து 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இவ்விரு அணிகள் இடையிலான 4வது டெஸ்ட் வருகிற 6ம் திகதி நாட்டிங்காமில் தொடங்குகிறது. (க)





## ஜே.பி.எல். இருபது-20 கே.சி.சி.சி.வெற்றி

சாம்பவனின் அசத்தலான பந்து வீச்சில் ஜொனியன்சை 2 விக்கெட்களால் வெற்றி பெற்றது கே.சி.சி.சி. ஜே.பி.எல். என் அழைக்கப்படும் "ஜெப்னா பிறிமியர் லீக்" இருபது-20 போட்டிகள் கடந்த வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்த முதலாவது ஆட்டத்தில் கே.சி.சி.சி. அணியும் ஜொனியன்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ்களால் கே.சி.சி.சியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியவில்லை. பல வீரர்கள் வந்த வேகத்திலேயே அரங்கு திரும்பினர். இதனால்18.3 ஓவர்களில் 93 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் அவர்கள் இழந்தனர்.

இதில் வி.காண்டீபன் 32 ஓட்டங்களையும், அன்புஜன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனையவர்கள் சொற்ப ஓட்டங்களுக்கே ஆட்டமிழந்தனர். கே.சி.சி.சியின் பந்துவீச்சில் சாம்பவன் 5 விக்கெட்களையும், பார்த்தீபன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சியும் துடுப்பாட்டத்தில் தடுமாறியது. ஆனாலும் 16.4 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்களால் வெற்றி பெற்றது. இதில் ஜனுதன் 31 ஓட்டங்களையும் சத்யன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜொனியன்ஸின் பந்துவீச்சில் அகிலன் 3, லவேந்திரா, லோகதீஸ்வர் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக கே.சி.சி.சி. அணியின் சாம்பவன் தெரிவானார். (க)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நெற்கொழுகழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அன்பாலயம் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

## புத்தூர் எவறெஸ்ட் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

### நாவாந்துறை சென்.மேரிஸ் வெற்றி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு 02ற்கான போட்டியில் சென். மேரிஸ் விளையாட்டு கழகம் வெற்றியீட்டியுள்ளது. இப்போட்டியானது கடந்த வெள்ளிக்கிழமை புத்தூர் எவறெஸ்ட் வி.க. மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் குருநகர் பாடுமீன் எதிர் நாவாந்துறை சென்.மேரிஸ் மோதிக்கொண்டது. போட்டியின் ஆரம்பத்தில் இருந்தே விறுவிறுப்பாக நடைபெற்ற போதிலும் இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் எந்த ஒரு இலக்கும் பெறப்படவில்லை. மேலும் போட்டி ஆரம்பித்து 70வது நிமிடத்தில் சென். மேரிஸ் அணி கோலினை போட்டது. பின்னர் 89வது நிமிடத்தில் பாடுமீன் அணி பதிலுக்கு ஒரு கோலினை போட ஆட்டம் சமனிலையில் வெற்றி கா[illegible] பங்கள் வழங்கப்பட்டபோதிலும் இரு அணிகளாலும் கோலினை பெறமுடியவில்லை வெற்றி நிர்ணயிப்பதற்காக பனால்டி உதை வழங்கப்பட்டது. இதில் சென். மேரிஸ் வி.க. அணி 3-0 என்ற கோல் (பனால்டி) ரீதியில் வெற்றியினைதனதாக்கிக் கொண்டது. (க)



வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## வலைப்பந்தாட்டம்

கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படுகின்ற மகளிருக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள் இன்று காலை 8.30மணிக்கு தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கம் கடத்தி...

னர்.40 வயதான அக்குரனை பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். விமானி ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரின் பயணப் பையில் இருந்து தங்க பிஸ்கட்கள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(செ)

## அமைச்சுப் பதவி...

கட்டியெழுப்ப எண்ணியதாகவும் அவர் கூறியுள்ளார். கேகாலை மாவனல்லை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் பிரதான கட்சிகளில் சார்ந்திருந்து ஆயுட்கால உயிர்களாக மாறி அரசியலில் தமது விருப்பு வாக்குகளை பயன் படுத்துவதால், வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியாமல், எதிர்கால திட்டங்கள், எண்ணங்கள் அனைத்தும் சீர்குலைந்து போகும் நிலைமை உருவாகியுள்ளது.

வாழ்க்கைக்கு தேவையான பெறுமதி கிடைக்கவும் 2 கால்களில் நிற்கவும் எவரிடமும் கையேந்தாது, எவருக்கும் அடிப்பணியாது கௌரவமாகவும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டுமாயின் நன்றாக சிந்தித்து பார்த்து முடிவு எடுக்குமாறும் சரத் பொன்சேகா பொதுமக்களிடம் கேட்டுள்ளார்.(செ)

## துப்பாக்கிச்...

வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அத்துடன், அமைச்சர் ரவி கருணாநாயக்க சம்பவம் இடம்பெறுவதற்கு சற்று முன்னர் அவ்விடத்துக்கு வந்து சென்ற போது ஊடக நிறுவனங்களினால் பெறப்பட்ட வீடியோ காட்சிகளையும் விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியவர்களில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஒருவரும் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இருப்பினும், அவ்வாறு எவரும் இருக்கவில்லையென விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் ஊடகப்பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## சிவபூமி மாணவ...

கல பதக்கம் ஆகியவற்றைப் பெற்று வெற்றிச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

சாதனை மாணவர்களான அரசகுலசூரியர் மயூரன், ஜெயச்சந்திரன் மனோஜன் மற்றும் பயிற்சியாளர் இளம்பிறையன் ஆகியோரைப் படத்தில் காணலாம். இவர்கள் 100, 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(க)


சேவை முகவர்
காணிகள், வீடுகள் விற்பனைக்கு
மணல்தறை லேன், பிறவுண் வீதி,
சட்டநாதர் வீதி, சுண்டிக்குளி, நுணாவில்
A9 வீதி 1/4 மைல் தூரம் 21 பரப்பு புதிய
தென்னந்தோட்டம் ஆகியன.
யாழ், நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: சுந்தரம் 0774819801
(1287)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம். ஆரம்பம்: 09.08.2015
வகுப்பு சனி,ஞாயிறு 2-4 pm உடன் பதியுங்கள்
021222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(சி-1718)




அக்ஷயா
அழகுக்கலை பயிற்சியகம்
- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன. சாறி பிளவுஸ் (6) பஞ்சாபி (5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட்ட கறுப்பு வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- உதட்டு கறுப்பு,கண் கருவளையம், கழுத்து கறுப்பு நீக்கும் கிறீம்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம், நாட்பட்ட பித்த வெடிப்பு, அலர்ஜிக்குடன் கூடிய பித்த வெடிப்பு நீக்கும் ஆயுர்வேத கிறீம் விற்பனைக்கு உண்டு.
- மார்பு கூட்டும், குறைக்கும், தொய்வு நீக்கும் கிறீம், குளிசை விற்பனைக்கு உண்டு.
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா,குளிசை, டொனிக் விற்பனைக்கு உண்டு.
- கருமை,கறுப்பு நீக்கும் வைத்நிங் பேசியல், அழகு மிளிர வைக்கும் கோல்ட் பேசியல் செய்து கொள்ளலாம்.

அக்ஷயா நாவலர் றோட்
தொ.பே :- 0772106155
221, பிறவுண் றோட் சந்தி (அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்ப்பாணம்
(1285)


## அரசு, வட மாகாண...

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறை குறித்து ஐ.நாவுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஆவணமொன்று கசிந்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்நிலையில், இது தொடர்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நியூயோர்க்கில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக்கிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், "இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பொறுப்புக்கூறல் செயற்பாட்டுக்கு ஐ.நா ஆதரவு வழங்குகின்றது.

இது தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குவதற்கும், வடக்கில் சமாதான செயல்முறைகளை ஊக்குவிப்பதற்குமான உதவிகளை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், மனிதவுரிமைகளை வலுப்படுத்தல் மற்றும் தண்டனைகளில் இருந்து தப்பித்தலை முடிவுக்குக் கொண்டு வருதல் போன்றவற்றின் மூலம் இலங்கையில் நல்லிணக்கச் செயல் முறைகளை முன்னேற்றுவதற்கான நிதியத்தை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

மீள்குடியேற்றம் மற்றும் வடக்குக் கிழக்கில் படையினரால் சுவீகரிக்கப்பட்டு, பின்னர் மீளக் கையளிக்கப்பட்ட நிலங்களில் மக்களை மீளக் குடியேற்றுவதற்காக ஏற்கனவே 1 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது.

ஐ.நாவின் உதவிகள் தொடர்பில் அரசாங்கம், வடமாகாண சபை மற்றும் எல்லாப் பங்காளர்களுடனும் நாம் தொடர்ந்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். ஐ.நா இலங்கையில் முன்னெடுக்கும் திட்டங்கள் வெளிப்படையானதாகவும் எல்லாத் தரப்பினருடைய ஆதரவையும் பெற்றதாக இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இலங்கை எத்தகைய விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தப் போகிறது என்பது தொடர்பிலான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளைப் பொறுத்தே முடிவுகள் எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## உள்நாட்டு விசார...

யுடன் உள்நாட்டு விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாக கசிந்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். எவ்வாறாயினும் இந்த செயற்பாடுகளுக்குள் வெளிநாட்டு உதவிகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பொறுப்புகளின் தன்மை இன்னும் தெளிவில்லை.

உள்நாட்டு விசாரணைகளுக்கு ஐ.நா தலைமை தாங்குவதுடன் நிதியுதவிகளையும் வழங்குகிறது. இதனால், உள்நாட்டு விசாரணை என்பது வெறும் பெயர் மாத்திரமே. அத்துடன் இலங்கை அரசாங்கமும், வடக்கு மாகாண சபையும் இந்த விசாரணைகளை செயற்படுத்தும் முகவர்கள் அமைப்புகள் எனவும் கசிந்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை எப்படி செயற்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்பாக இருக்க முடியும். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

இனப்படுகொலை மற்றும் போர் குற்றங்களை வடக்கு மாகாண சபை சுமத்தி வருகிறது. இந்த நிலையில், அவர்களுக்கு விசாரணைகளை செயற்படுத்துவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

போர் தொடர்பான விசாரணைகளில் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் த.தே.கூட்டமைப்பு ஆகியவற்றின் மறைக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலுடன் சர்வதேச நிறுவனங்கள் தலையீடுகளை மேற் கொள்ளும் எனவும் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.(செ)

## மினிபஸ் விபத்து...

5.30 மணியளவில் சங்கானை நகரப் பகுதிக்கு அண்மையில் இடம்பெற்றது. மாதகலில் இருந்து வேகமாக சங்கானை நகரை நோக்கி வந்த மினிபஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியோரமாக இருந்த இருவரை மோதியதில் ஆண் ஒருவரின் கால் முறிந்துள்ளதுடன் பெண் ஒருவர் முகத்தில் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இதேவேளை பாதையை விட்டு விலகிய மினி பஸ் குளத்திற்கு அருகில் உள்ள வயல் வெளியில் தடம் புரண்டதில் பஸ்ஸில் இருந்த குழந்தை உட்பட 2 ஆண்களும் ஒரு பெண்ணும் படுகாயமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். சிறு காயங்களுக்கு உள்ளாகியவர்கள் சங்கானை மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளார்கள். வட்டுக்கோட்டை பொலிஸார் விபத்து சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (செ-ரு)

## ரூ.114 மில்லி...

இது தொடர்பில் சிறிலங்கா எயார்லைன்ஸ் நிறுவன தலைவர் அஜித் டயஸ், ஜனாதிபதியின் செயலாளர் பி.அபயகோனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இதன்படி 113 மில்லியன், நானூற்றி தொன்னூற்று நான்காயிரத்து எழுநூற்று இருபத்து நான்கு ரூபாய்களை முன்னாள் ஜனாதிபதி செலுத்தவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைதவிர இதற்கான வரிகளையும் செலுத்தவேண்டும் என்று எயார்லைன்ஸ் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் மஹிந்த ராஜபக்ச, திருப்பதிக்கு கடந்த டிசம்பர் 9ஆம் 10ஆம் திகதிகளில் சென்று வந்த செலவும் செலுத்தப்பட வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (செ-11)

## அங்கும் இங்கும்...

டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட முதன்மை வேட்பாளர் வஜிர அபேவர்தனவிடம் தயாரத்ன உள்ளிட்டோர் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவ அட்டைகளை பெற்றுக் கொண்டனர்.(செ-11)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை அரசரத்தினம் (சின்னத்தம்பி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.52 கட்சன் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

கணபதிப்பிள்ளை அரசரத்தினம் (சின்னத்தம்பி)

அவர்கள் 01-08-2015 அன்று காலமானார். அன்னார் செல்லம்மாவின் அன்புக்கணவரும் பங்கயற்செல்வன் (அதிபர்), ஜீவரஞ்சினி, குணசேகர், ஞானசேகர் ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசா, விவேகானந்தராசா, மாலினி, கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாரும் பதுமிதா, நர்த்தகி, குணாளன், அபிவர்ணா, நன்னிலவன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03-08-2015 திங்கட்கிழமை வட்டக்கச்சியில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1720)

இல. 52, கட்சன் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர்.


பாராளுமன்றத் தேர்தல் - 2015
தந்தை செல்வா காட்டிய வழியில்
உதய சூரியன் சின்னத்தில் உங்கள் வீட்டுப்பிள்ளை
- வளம் கொழிக்கும் விவசாய மாவட்டமான கிளிநொச்சியில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தராக ...
- யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் புதல்வனாக ...
- விவசாய குடியேற்ற பிரதேச மைந்தனாக ...

X 3
விவசாயிகளின் நண்பன்
க.ஜனார்த்தனன்
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி, கிளிநொச்சி மாவட்டம்.
தமிழர் விடுதலைக் கூட்டணி
(C-317)



பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் - கிளிநொச்சி மாவட்ட
ஒட்டுமொத்த பெண்களின் ஒரே தெரிவாய்

8
பெண்களுக்கும்
பிள்ளைகளுக்கும்
பாராளுமன்றத்தில்
நீதி கேட்கும்
ஓர் குரலாய்...
நீதிக்கு ஏங்கும் தாய்மார்களின் ஏக்கத்திற்கு
தீர்வு கிடைக்க எங்கள் பிள்ளைகளின்
மரணங்களுக்கு நீதி கிடைக்க
திருமதி. மதினி நெல்சன்
(பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்-
நகரசபை உறுப்பினர் - பருத்தித்துறை)
இலங்கை தமிழ் அரசு கட்சி (தமிழ் தேசியக் கூட்டமைப்பு)
(049)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காணாமல் போனோர் குறித்த ஐ.நாவின் வருகை நிறுத்தம்

காணாமற் போனோர் தொடர்பான ஐ.நா செயலணிக் குழு, நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு மேற் கொள்ள விருந்த பயணம் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. காணாமற் போனோர் தொடர்பான ஐ.நா செயலணிக் குழு ஓகஸ்ட் 3-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதி வரை இலங்கையில் பயணம் மேற்கொள்ள முன்னர் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ... யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 | 02.08.2015 | தொலைபேசி : 021 222 3378

# மன்னா வேண்டாம்...

நாதம் 26






## பாராளுமன்றத் தேர்தல் – 2015



### மருத்துவ செலவுக்காக சிங்களச் சிறுமி ஒருவருக்கு நாற்பது இலட்சம் கொடுத்துதவிய பெருமகன்.

நான் கண்டி மாவட்டத்தில் பன்விலை பள்ளேகம பிரதேசத்தில் மிகவும் பின் தங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவள். என் பெயர் ஓ.ஜீ.ஸ்ரீயாணி.சிங்கள குடும்பத்தைச் சேர்ந்தவள். என் கணவர் ஒரு கூலித் தொழிலாளி. ஐந்து பிள்ளைகள் உள்ளார்கள். என்னுடைய கடைசிப் பிள்ளையின் பெயர் ரோசினி, பத்து வயது. கால் இரண்டும் சொத்தி. நடக்க முடியாது. சிறு நீர் கழிப்பது கூட சிரமம். இந்தக் காரணத்தினால் பாடசாலை அனுப்ப முடியாது என்னுடைய நண்பி ஒருவர் தெல்தெனியவிலுள்ள சிவன் வலது குறைந்தோர் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு பெரு எண்ணிக்கையிலான விசேட தேவையுடைய சிங்களம், தமிழ், முஸ்லிம் சிறார்கள் இருந்தார்கள். மகளின் சிகிச்சை தொடர்பாக அங்குள்ள வைத்திய அதிகாரி பரிசோதனை செய்தார். அந்த வைத்தியர் என் மகளின் காலை இங்கு குணப்படுத்த முடியாது. அது துருக்கி நாட்டுக்கு அழைத்துச் சென்று சத்திர சிகிச்சை மேற்கொண்டால் அது பயனளிக்கக் கூடும் எனவும் அதற்கு 40 இலட்சம் செலவாகலாம் எனவும் அவர் கூறினார். ஒரு வேளை சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருக்கும் போது இந்தப் பணத்திற்கு நான் எங்கே போவது. மனதிலுள்ள ஆறாத ரணத்திற்கு மருந்து இல்லை என்ற நிலையில் மனம் சோர்ந்து போய் நின்றேன்.

அப்போது அங்குள்ளவர்கள் இது பற்றி ஐயாவிடம் முறையிடுங்கள் என்று கூறினார்கள். கணேஷ்வரன் ஐயாவும் அங்கு இருந்தார். அவரிடம் போய் முறையிட்டேன். கவலைப்பட வேண்டாம். அதற்குரிய முழு செலவையும் அவர் ஏற்றுக் கொள்வதாகவும் அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்யுமாறு அங்குள்ள உத்தியோகஸ்தர்களிடம் உத்தரவு பிறப்பித்தார். எங்களுடைய சிங்கள சமூகத்திலோ, குடும்பத்திலோ இவ்வளவு காலமும் யாருமே உதவ முன்வரவும் இல்லை. அக்கறை காட்டவும் இல்லை. எனக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. திட்டமிட்டபடி கடந்த வருடம் செப்டெம்பர் 19 ஆம் திகதி என் மகள் ரோசினி துருக்கி நாடு சென்றார். அவருடைய அறுவை சிகிச்சை முடிவுற்று அவ்வருடம் ஒக்டோபர் 24 ஆம் திகதி நாடு திரும்பினார். அதன் பின்பு அங்கு மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சைக்கான கட்டை கண்டியிலுள்ள தனியார் சுவசெவன வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று வெட்டினார்கள். இன்னும் என் மகள் கண்டி தெல்தெனியவிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றார். ஓரளவு திருப்தியுடன் நடக்கக் கூடியதாக இருக்கிறது ஐயா கணேஷ்வரன் பணத்தைக் கொடுத்து உயிரைக் காக்கும் மனிதர். அவரை கடவுள் என்றுதான் சொல்ல வேண்டும். இன, மத, மொழி, பிரதேசம், எல்லை வேறுபாடுகளுக்கப்பால் எல்லா மனிதர்களையும் நேசிக்கத் தெரிந்த நல்ல மனிதர்.



அன்புடன் ஸ்ரீயாணி
பள்ளேகம, பன்விலை.

சுயேட்சைக்குழு - 06



X



6


சிவன் பவுண்டேசன்
## வேலாயுதம் கணேஷ்வரன்
கொடை வள்ளல், சமூக ஆர்வலர்.

(C-315)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தன்-விக்கி ஓர் ஒப்பிடுகை




மன்னன் சாலமனின் சபைக்கு ஒரு விசித்திரமான வழக்கு வருகிறது. ஒரு குழந்தை இரண்டு தாய்மார். இருவருமே குழந்தை தங்களுடையதென்கின்றனர்.

மன்னன் சாலமன் அதிர்ந்து போகிறான். ஒரு தாய்க்கு இரண்டு குழந்தைகள் இருக்கமுடியும். இரண்டு தாய்க்கு ஒரு குழந்தை எப்படியிருக்க முடியும்.

சபைக்கு வந்த இருதாய்மாரில் ஒருவரே குழந்தையின் உண்மைத்தாய் என்பதைப் புரிந்துகொண்ட மன்னன் சாலமன், உண்மைத் தாயைக் கண்டறியவேண்டும் என்று முடிவு செய்தான். அதற்காக அவன் தனது உடைவாளை எடுத்து குழந்தையை ஆளாளுக்குப் பாதியாகக் கொடுக்கலாம் எனக்கூறி வாளை ஓங்குகிறான்.

அப்போது ஒரு தாய் மன்னா வேண்டாம் என்று மன்னனை தடுக்கிறாள். மற்றவளோ குழந்தையைப் பாதியாக வெட்டித்தா என்கிறாள். இப்போது மன்னன் சாலமன் குழந்தையை வாளால் வெட்டுவதைத் தடுத்தவளே உண்மைத்தாய் என்பதை உணர்ந்துகொண்டு குழந்தையை அவளிடமே கொடுத்துவிடுகிறான்.

மன்னன் சாலமனின் இடத்தில் இப்போது தமிழ் மக்கள் இருக்கின்றனர். உண்மையான தமிழ் விசுவாசத் தலைமை எது? என்பதை இனங்காண்பதே தமிழ்மக்களின் மிகப்பெரும் சவாலாகும். தேர்தல் பிரசாரங்களைக் கேட்கும் போது ஒவ்வொருவரும் சொல்வது உண்மை போலவும் நியாயம் போலவும் இருக்கும். ஆனால் போல இருப்பதெல்லாம் உண்மையன்று.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இருபது ஆசனங்களையும் எங்களுக்குத் தாருங்கள். 2016 ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்கிறார்.


வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கர்கப் பிரசாரம் செய்யமாட்டேன். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பே என்னை முதல்வர் தேர்தலில் நிறுத்தியதாயினும் மேடையேறித் தேர்தல் பிரசாரம் செய்வது பக்கச்சார்பானது. அது எனக்கு அழகல்ல என்கிறார்.


தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் 2016 ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று சொல்ல,

மக்கள் யாரைப் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்கின்றனரோ அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்பது முதல்வர் விக்னேஸ்வரனின் அறிவிப்பு.

அதாவது இருபது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் எங்களிடம் தாருங்கள். அதை நீங்கள் தந்தால் 2016 இல் இனப் பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு காணப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூற,

வடக்கு மாகாணத்தில் 2 இலட்சத்து 35 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்ற முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மக்கள் யாரைப் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்கிறார் களோ அவர்களுடன் இணைந்து செயற்படுவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனினும் மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பணி செய்ய வேண்டும் என்று கூறுகிறார்.





20 பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளையும் எங்களுக்குத் தந்தால் 2016 இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று இரா.சம்பந்தன் கூறியது சரியானதும் உண்மையானதுமாக இருந்தால்,

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மக்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்களைத் தெரிவு செய்யட்டும். இதில் நாம் கதைப்பதற்கு என்ன இருக்கிறது? என்று கூறியிருக்கத் தேவையில்லை.

ஆக, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் படு பொய் சொல்லியுள்ளார் என்பது உறுதியாகிறது. இங்குதான் சம்பந்தன்-விக்னேஸ்வரன் என்ற ஒப்பிடுகை எழுகை பெறும்.

அதாவது இருவரும் அடிப்படையில் சட்டத்தரணிகளாக இருந்தபோதிலும் சம்பந்தன் சட்டத்தரணி என்ற தகைமையோடு அரசியலில் இறங்கி சுமார் நாற்பது ஆண்டுகளை அரசியலுக்குள் செலவிட்டவர்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் சட்டத்தரணியாக இருந்து நீதியரசர் என்ற உயர் பதவியைப் பெற்றவர். இங்குதான் ஒருவரால் துணிந்து பொய் சொல்லவும் மற்றவரால் பொய்மைக்குத் துணை போகவும் முடியாமலும் உள்ள நிலைமையைக்காண முடிகிறது.

எது எப்படியாயினும் அரசியலில் பொய் சொல்வது வழுவமைதிக்கு உட்பட்டது. நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் பொய் சொல்வதற்கு- உண்மையைப் பொய்யாக்குவதற்கு மறைமுக அனுமதியுண்டு.

இல்லையாயின் நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறெதுவுமில்லை என்று சாட்சிகள் செய்யும் சத்தியத்தை சட்டத்தரணிகளும் செய்ய வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கும்.

இந்த வழக்கில் நான் வாதிடுவதெல்லாம் உண்மை. ஒருபோதும் இந்நீதிமன்றில் உண்மையைப் பொய்யாக்கவோ அல்லது பொய்யான சம்பவங்களைப் புனையவோ மாட்டேன் என இந்நீதிமன்றில் சத்தியம் செய்கிறேன் என்று சட்டத்தரணிகளும் சத்தியம் செய்யும் நடைமுறை கொண்டுவரப்பட்டிருக்கும்.

ஆக, சட்டத்தரணிகள் நீதிமன்றில் பொய் உரைத்தாலும் அதை ஒரு குற்றமாக நீதித்துறை பார்ப்பதில்லை. எனவே , சட்டத்தரணி என்ற தகைமையோடு அரசியலுக்குள் சென்றவருக்குப் பொய் சொல்வதில் மனக்கஷ்டம் இருக்க முடியாது.

அதேநேரம் ஒரு சட்டத்தரணி சட்டத்துறை யின்; நீதித்துறையின் பல படிகளைத்தாண்டி நீதியரசர் என்ற உன்னதமான பதவியை அடையும் போது மன்னன் சாலம னின் நிலை க்குவருகிறார். உண்மையைக் கண்டறிவதே அவரின் உன்னத பணிக்கான இலட்சணமாக அமைந்து விடுகிறது.

இந்த விடயங்கள்தான் சம்பந்தன்- விக்னேஸ்வரன் ஆகியோரின் வார்த்தைகளின் வேறுபட்ட தன்மைக்குக் காரணமாகின்றது.

எதுவாயினும் 2016 இல் அரசியல் தீர்வு காணப்படும் என்பது அப்பட்டமான ஏமாற்று நாடகம் என்பதை மட்டும் இவ்விடத்தில் கூறுவதோடு,

முதல்வர் விக்னேஸ்வரனின் கருத்துக்கள் யதார்த்தமாக இருப்பதால், அவை அரசியல்வாதிகள் சிலரைச் சுடலாம். அதற்காக நீதியரசர் விக்னேஸ்வரன் எச்சந்தர்ப்பத்திலும் தளர்ந்து விடக் கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக தேர்தல் களத்தில் இறங்கிப் பிரசாரம் செய்ய மாட்டேன் என்று முதல்வர் விக்னேஸ்வரன் துணிந்து கூறியதற்குள், முதல்வர் பதவியை தூக்கி எறிவதற்கு அவர் தயாராக உள்ளார் என்பதும் அடுத்த முறையும் முதல்வராக இருக்க வேண்டும் என்ற பற்று அவரிடம் இல்லை என்பதும் வெளிப்பட்டு நிற்கின்றது.

இத்தகைய தலைவர்களே உலகிற்கும் நாட்டிற்கும் நம் தமிழ் இனத்திற்கும் தேவை.

ஆகையால்தான் முதல்வர் விக்னேஸ்வரன் மட்டுமே தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரு தலைவராக விளங்குகிறார் என்ற உண்மையை இப்போதாவது உலகம் புரிந்து கொள்ளட்டும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப்பிள்ளையார் கோயில் திருவிழா. வாத்தியார் வைத்திலிங்கத்தின் சொற்பொழிவு.

அன்புக்குரிய அடியார் பெருமக்களே! நான் இன்று உங்கள் முன் **வாக்களிப்பது எப்படி?** என்ற பொருளில் உரையாற்றவுள்ளேன். இப்படி வாத்தியார் கூறிவிட்டு சில நிமிடங்கள் அமைதியானார்.

அடியார் கூட்டத்தில் ஒரே சலசலப்பு. என்ன இது? ஆலயத்தில் தெய்வீக உரையாற்றுவதென்றால் வாக்களிப்பது எப்படி என்று உரையாற்றுவது எந்தவகையில் சரியாகும். இப்படி பலரும் பேசிக்கொண்டனர்.

அன்பர்களே! நண்பர்களே என்று வாத்தியார் விழிப்போடு அழைக்க, அடியார் கூட்டம் அமைதி கொண்டது.

வாத்தியார் உரையை ஆரம்பித்தார். வாக்களிப்பது எப்படி? என்று நான் உரையாற்றப் போவதாக அறிவித்தவுடனேயே சலசலப்பு ஏற்படுமென்று எனக்கு நன்கு தெரியும்.

ஆனாலும் ஒன்றை மட்டும் கூறவிரும்புகிறேன். வாக்களிப்பது என்பது இந்த நாட்டில் ஆட்சியை ஏற்படுத்துவதான ஒரு பெரும் பணியாகும்.

இந்தப் பணியில் எங்கள் அனைவரதும் பங்களிப்பு உண்டு. எனினும் நாம் வாக்களிக்கும்போது கணிசமான வாக்குகள் செல்லுபடியற்றதாகிப் போகிறது.

அதுமட்டுமல்ல வாக்களிப்பது எப்படி என்று அறியாததால் நாம் யாரைத் தெரிவு செய்ய விரும்புகிறோமோ அந்த இலக்கும் தோல்வியில் முடிகிறது.

எனவே வாக்களிப்பது எப்படி? என்பதும் ஒரு தெய்வீக உரை என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி வாத்தியார் கூறியதும் சபையில் கரகோசம் எழுந்தது.

அன்பர்களே! யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்று நான் கூறவில்லை. வாக்களிப்பது எப்படி என்றுதான் கூறப்போகிறேன். வாக்களிப்பது தொடர்பில் அதிக விளக்கங்களைத் தருவது உங்களைக் குழப்பும். ஆகையால் சுருக்கமாகக் கூறுகின்றேன்.

நீங்கள் எந்தக் கட்சியை அல்லது சுயேட்சைக்குழுவை விரும்புகிறீர்களோ அந்தக் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் சின்னத்திற்கு நேரே புள்ளடியிடுங்கள்.

அதன் பின்னர் அந்தக் கட்சி சார்ந்த அல்லது சுயேட்சைக்குழு சார்ந்த வேட்பாளர்களில் மூவருக்கு உங்கள் விருப்பு வாக்கை அளிக்க முடியும்.

நீங்கள் விரும்பும் வேட்பாளர் மூவரின் இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிடுவதன் மூலம் விருப்பு வாக்கை அளிக்கலாம் அல்லது ஒரு வேட்பாளர் மட்டுமே உங்களுக்கு விருப்பமாயின் அவரின் இலக்கத்திற்கு மேலே புள்ளடியிடலாம்.

தேவையாயின் நீங்கள் விரும்பும் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் சின்னத்திற்கு நேரே வாக்களிப்பதோடு மட்டுமே நிறுத்திக்கொள்ளலாம். இப்படி வாத்தியார் வைத்திலிங்கம் கூறிமுடிக்க, கதிரவனும் மேற்றிசையில் ஓய்வெடுக் கத் தலைப்பட்டான்.

வாத்தியாரின் உரை முடிந்ததும் ஆலடி மாநாடு கூடியது.

பண்டிதரின் தலைமையில் கூடிய ஆலடி மாநாட்டில் காலஞ்சென்ற இந்திய நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவரும் விஞ்ஞானியும் ஆகிய டாக்டர் அப்துல்கலாமுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த உலகிற்கு விஞ்ஞானத்தையும் மெய்ஞானத்தையும் போதித்து மனித சமூகம் மகிழ்வோடு வாழ வேண்டும் என்பதற்காக வாழ்ந்த டாக்டர் அப்துல்கலாம் ஒரு பெரும் மகான் என்று வாத்தியார் கூறி அஞ்சலி உரையை நிறைவு செய்ய , அனைவரும் ஆலடி மாநாட்டில் அமர்ந்து கொண்டனர்.

**பண்டிதர்:** வாத்தியாரின்ர உரை மிகவும் அற்புதம். காலத்தின் தேவை. ஆலயங்கள் மக்களை வழிப்படுத்தவேண்டும் இதைத்தான் வாத்தியாரின் உரை உறுதிப்படுத்தி நிற்கிறது.

**விதானையார்:** அதுசரி பண்டிதர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண்ணொருவரை கொலை செய்து பெரிய சூட்கேசுக்குள்ள வைத்த செய்தி அறிந்ததோ

**கங்காணி:** ஓமோம். நானும் அறிஞ்சனான்.

அந்தப் பிள்ளையைக் கொலை செய்துவிட்டு ஒரு பெரிய சூட்கேசுக்குள்ள ஆளை வைச்சு அதை அவன் தூக்கிக் கொண்டு போறது அந்த லொச்சில உள்ள சிசிரிவியில பதிவாகியிருக்கு. அந்தப் பதிவை இணையத்தளங்கள் வெளியிட்டுள்ளன. அதைப்பார்த்த போது எவ்வளவு பயங்கரமாக இருந்தது.

இப்ப எங்கட நாட்டில இப்படியான சம்பவங்கள் அதிகரிச்சு எங்கட சமூகத்தை உலுப்பி வருகுது.

கிளிநொச்சிப் பகுதியில உள்ள வயலுக்குள் இறந்து கிடந்த அந்தக் குழந்தையின்ர மரணத்திற்குப் பின்னால ஒரு 14 வயதுச் சிறுவன் இருந்திருக்கிறான் என்பதை நினைக்கும் போது இதயம் நொருங்கிப் போகுது.

என்ன செய்யிறது. இலவசக் கல்வி, அப்பியாசக் கொப்பி, இலவச புத்தகம், சீருடை, மதிய உணவு என்று எத்தனை வசதிவாய்ப்புக்களை அரசு வழங்கினாலும் குடும்பங்களின்ர வாழ்க்கைத் தரமும் பண்பு விருத்திகளும் உயராவிட்டால் எதுவும் பிரயோசனமின்றிப் போகும் என்பதைத்தான் இந்தச் சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

**மூப்பர்:** புங்குடுதீவில நடந்த சம்பவத்தின்ர வழக்கு நடந்து கொண்டிருக்குது. மாணவி வித்தியாவின்ர சார்பில வாதிட்ட சட்டத்தரணிகளை வித்தியாவின்ர குடும்பம் மாத்தியுள்ளதாகக் கேள்வி. என்ன? காரணம் எண்டு தெரியாது.

**வாத்தியார்:** யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள வூட்லர் மிகவும் நேர்மையானவர் எண்டு எங்கட சனம் கதைக்குது.

நேர்மையான பொலிஸ் அதிகாரிக்கு மக்கள் நல்ல ஆதரவு கொடுக்க வேணும். அவர் நடத்தின ஒரு கூட்டத்தில நானும் இருந்தனான். அவற்ற கருத்துப்படி பெற்றோர் தங்கட பிள்ளைகள் தொடர்பில கவனமாக இருக்க வேணும் எண்டு சொல்லுறார். இது நூறு வீதம் சரி.

**விதானையார்:** வூட்லர் சொல்லுறது நூறுவீதம் சரி என்பதோட வூட்லர் போன்ற நேர்மையான, கடமை உணர்வுமிக்க பொலிஸார் சேவையில இருந்தால் சமூகப் பிரச்சினைக்கு உடனடியாக முடிவுகட்டமுடியும்.

**கங்காணி:** அது சரி நடைபெறப்போகும் தேர்தலில எப்படி வாக்களிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட வாத்தியார் யாருக்கு வாக்களிக்கவேணும் என்பதைச் சொல்லாமல் விட்டுவிட்டார்.

**வாத்தியார்:** அதை நான் சொல்லக்கூடாது. நீங்களல்லோ தெரிவு செய்யவேணும்.

**கங்காணி:** எல்லாச் சனமும் விளங்கி வாக்களிக்கிறது இல்லைதானே.

**வாத்தியார்:** இதுதான் பிழை என்று சொல்லுறன். தேர்தல், வாக்களிப்பு என்றால் இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேணும். எங்கட வாக்குகளைச் சரியானவர்களுக்கு அளிக்கவேணும். அப்பதான் இலக்கை எட்ட முடியும்.

இப்படி வாத்தியார் கூற,

பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடி மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையார் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## யாழ். பொலிஸ் அதிகாரி வூட்லர் ஒரு ஜென்டில்மன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## அன்னையை வேண்டுதல்






எண்ணிய முடிதல்
வேண்டும்
நல்லவே எண்ணல்
வேண்டும்;
திண்ணிய நெஞ்சம்
வேண்டும்;
தெளிந்தநல் லறிவ
வேண்டும்;
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல,
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடம் வேண்டும் அன்னாய்!


## அழகாக வரைவோம் ஆங்கிலம் கற்போம்




E எழுத்தைப் படுக்கை வசத்தில் படத்தில் உள்ளது போல எழுதிக்கொள்ளவும்.




E எழுத்தின் மையக் கோட்டை அழித்துவிட்டு படத்தில் காட்டியவாறு A எழுத்தை மேற்பகுதியில் சற்றே உயரமாக எழுதவும்.




A எழுத்தின் கூர்மையான மேற்பகுதியை அழித்துவிட்டு மையத்திலுள்ள குறுக்குக் கோட்டுடன் இணையாக படத்தில் காட்டியவாறு வரையவும்.



அதன் மேற்பகுதியை ஒட்டியவாறு D எழுத்தைப் படுக்கை வசத்தில் எழுதி இணைக்கவும்



D எழுத்தின் மேற்பகுதியில் சிறிய O எழுத்தை எழுதவும்.



படத்தில் காட்டியவாறு V எழுத்தை வலது மற்றும் இடது பக்கங்களில் எழுதவும்.



கலங்கரை விளக்கின் சுவர்ப்பகுதியில் குறுக்குக் கோடுகள் வரையவும்.

தேவையான வண்ணங்களைத் தீட்டவும். நீல வானம், நட்சத்திரங்கள் வரைந்தால் ஒளிரும் கலங்கரை விளக்கம் தயார்!



## போதும் என்ற மனமே




முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை ஷைலேந்திரா என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனிடம் விந்தையான வழக்கம் ஒன்று இருந்தது. ஒவ்வொரு நாளும் தன்னை முதலில் சந்திப்பவருக்கு ஒரு பொற்காசு தருவான்.

சிற்றூர் ஒன்றிலிருந்த ஏழை அந்தணன் ஒருவன் இதைக் கேள்விப்பட்டான். அரசரிடம் பரிசு பெறும் எண்ணத்தில் தலைநகரம் வந்தான்.

"நாளை விடிகாலையில் அரசரை நான்தான் முதலில் சந்திக்க வேண்டும். எனக்கு முன் யாரும் சந்தித்துப் பொற்காசை வாங்கக் கூடாது. அதற்கு என்ன செய்வது?" என்று சிந்தித்தான்.

எல்லாரும் உறங்கும் நள்ளிரவு நேரத்தில் அரண்மனையை நோக்கி நடந்தான். வீதியில் யாருமே இல்லை. அவன் அரண்மனையை நெருங்கினான்.

அங்கே இரவுக் காவலுக்கு இருந்த வீரர்கள் அவனைத் திருடன் என்று நினைத்தனர். அவனைச் சிறையில் அடைத்தனர்.

மறுநாள் அவனை அரசவைக்கு இழுத்து வந்தனர்.

"அரசரே! திருடனைப் போல நேற்று நள்ளிரவில் இவன் அரண்மனை நோக்கி வந்தான். இவனைச் சிறையில் அடைத்தோம்." என்றனர் காவலர்கள்.

அவனை விசாரித்தார் அரசர்.

"அரசே! தங்களிடம் பொற்காசு பரிசு பெற வந்தேன். பொற்காசும் கிடைக்கவில்லை. சிறையிலும் துன்பப்பட்டேன்." என்று நடந்ததை எல்லாம் சொல்லி அழுதான் அவன்.

"ஏழை அந்தணன் ஒரு பொற்காசிற்காக இவ்வளவு துன்பப்பட்டு விட்டானே..." இவனுக்குப் பெரிதாக உதவி செய்ய நினைத்தார் அரசர்.

"அந்தணனே! உன்னைச் சிறையில் அடைத்ததற்கு வருந்துகிறேன். உனக்கு எவ்வளவு பொற்காசுகள் வேண்டும்? கேள். தருகிறேன்." என்றார் அரசர்.

"அரசே! எவ்வளவு பொற்காசுகள் கேட்டாலும் தருவீர்களா?" என்று வியப்புடன் கேட்டான்.

"எவ்வளவு வேண்டுமானாலும் கேள். தருகிறேன்." என்றார் அரசர்.

எவ்வளவு பொற்காசுகள் கேட்பது என்று குழம்பினான் அவன்.

"அரசே! சிந்திக்க எனக்கு ஒருநாள் அவகாசம் தாருங்கள்." என்று வேண்டினான் அவன்.

"சரி. நாளை உன் விருப்பத்தைச் சொல்." என்றார் அரசர்.

அரண்மனையை விட்டு வெளியே வந்தான் அவன். எவ்வளவு பொற்காசுகள் கேட்பது என்று சிந்தித்தபடியே நடந்தான்.

"இருபது பொற்காசுகள் கேட்போமா என்று நினைத்தான். எவ்வளவு கேட்டாலும் அரசர் தருவதாகச் சொல்லி இருக்கிறாரே. எனக்கு ஏன் இந்தப் பிச்சைக்கார புத்தி. நூறு பொற்காசுகள் கேட்போம். ஆயிரம் பொற்காசுகள் கேட்போம். பத்தாயிரம் பொற்காசுகள் கேட்போம். எந்தக் கவலையும் இன்றி மகிழ்ச்சியாக வாழலாம்!" என்று நினைத்தான்.

அப்போது யாரோ பேசும் குரல் கேட்டு அவன் சிந்தனை கலைந்தது.

"எங்கிருந்து குரல் வருகிறது" என்று பார்த்தான்.

அங்கே மேடையில் துறவி ஒருவர் மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார்.

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. ஆசையினால் துன்பம் வருகிறது. துன்பம் தராத ஆசை எதுவும் இல்லை. ஆசையை விட்டால்தான் உண்மையான மகிழ்ச்சி கிடைக்கும். ஆசைப்படுவதை விடுங்கள்." என்றார் அவர்.

அவர்பேசியது அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது.

தனக்கு நடந்ததை நினைத்தும் பார்த்தான். அவர் சொன்னது உண்மைதான். ஆசையினால் தான் துன்பம் வருகிறது.

ஒரு பொற்காசு மீது கொண்ட ஆசையால் சிறைப்பட்டேன்.

இருபது, நூறு, ஆயிரம், பத்தாயிரம் பொற்காசுகளிலும் நான் மகிழ்ச்சி அடையவில்லை. மேலும் பெற வேண்டும் என்றே விரும்புகிறேன்.

இந்தத் துன்ப நிலையிலிருந்து விடுபட நல்ல வழி காட்டினார் என்று நினைத்தான்.

மறுநாள் அரசவைக்கு வந்தான் அவன்.

அவனைப் பார்த்த அரசர், "அந்தணனே! எவ்வளவு பொற்காசுகள்என்று முடிவுசெய்து விட்டாயா? எவ்வளவு பொற்காசுகள் வேண்டும்?" என்று கேட்டார் அரசர்.


"அரசே! பொற்காசுகள் எதுவும் வேண்டாம்!"

"பொற்காசுகள் வேண்டாமா? ஒரு பொற்காசிற்காக அவ்வளவு துன்பப்பட்டாய். இன்று பொற்காசுகள் எதுவும் வேண்டாம் என்கிறாய். என்ன நடந்தது?" என்று வியப்புடன் கேட்டார் அரசர்.

நடந்ததை எல்லாம் சொன்னான் அந்தணன்.

"ஒரு பொற்காசிற்கு ஆசைப்பட்டுத் துன்பப்பட்டேன். பொருள் இல்லாததால் துன்பப்படுவதாகவும், அது இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்றும் தவறாக நினைத்தேன். அது உண்மையல்ல... என்பதைப் புரிந்து கொண்டேன்.

"நிறைய பொற்காசுகள் கிடைத்தால் என் துன்பமும் அதிகமாகிவிடும். போதும் என்ற உள்ளம் உடையவனே மகிழ்ச்சியான மனிதன். இந்த உண்மையை இப்போது புரிந்து கொண்டேன். நன்றி." என்று சொல்லிவிட்டு அங்கிருந்து பெருமிதத்துடன் புறப்பட்டான்.



அன்புச் சிறார்களே, இங்குள்ள படங்களைப் பார்த்து அவற்றின் பெயர்களை கட்டங்களில் நிரப்புங்கள்!

விடைகள்
கீழிருந்து மேல்:- விமானம், அகிம்சை
இடமிருந்து வலம்:- அம்மா, அமாவாசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# அன்பைத் தவிர அனைத்தும் அர்த்தமற்றவை

ஒரு நாள் திடீர்னு கடல் கொந்தளிக்க ஆரம்பிச்சு உலகம் எல்லாம் தண்ணில மூழ்க ஆரம்பிச்சிடுச்சு. உலகத்தில உள்ள எல்லா மக்களும் தண்ணில விழுந்து செத்துட் டாங்க.

அப்போ ஒரு மூலைல ஒரு சின்ன குட்டி பாப்பா வோட சேர்த்து கொஞ்சம் பேர் மட்டும் உயி ரோட இருந்தாங்க. அவங்க கடவுள் கிட்ட அவங்கள காப்பாத்த சொல்லி வேண்டிட்டு இருந்தாங்க.

அப்போ திடீர்னு வானத்துல இருந்து ஒரு தேவதை பறந்து வந்திச்சாம். அந்த தேவதை கீழ இருந்தவங்கள புர்த்து என்னோட சிறகுகள்ள உங்கள ஏத்திக்கறேன் . ஆனால் ஒரு நிபந்தனைன்னு சொல்லிட்டு என்னோட சிறகுகள்ள ஏதோ ஒரு பத்து பேர் மட்டும் ஏரிக்கலாம்.

அவங்க அவங்க கூட ஏதாவது அவங்களுக்கு புடிச்ச உயிரில்லாத ஒரு பொருள மட்டும் எடுத்துக்கலாம்னு சொல்லிச்சு. உடனே அவங்கவங்களுக்கு புடிச்ச ஒரு உயிரில்லாத பொருள எடுத்துக்கிட்டாங்க. ஒருத்தர் அவருக்கு புடிச்ச வால்கிங் ஸ்டிக் எடுத்துக்கிட்டாரு. ஒரு லேடிஅவங்களுக்கு புடிச்ச லிப்ஸ்டிக் எடுத்துக்கிட்டாங்க. இந்த மாதிரி எல்லாரும் ஏறினதுக்கப்புரம் ஒரு ஒருத்தருக்கு மட்டும் இடம் இருந்துச்சு. அந்த சமயத்தில ஒரு குட்டி பாப்பா மட்டும் கீழேயே நின்னுட்டு இருந்துச்சாம். அத பார்த்த தேவதை, ஏன் நீ வரலயான்னு கேட்டுச்சு. அதுக்கு அந்த பாப்பா, தன்னோட கைல இருந்த நாய் குட்டிய காட்டி எங்கிட்ட இதுதான் இருக்கு, வேற ஒண்ணு மில்லையே! இதுக்கு உயிர் இருக்கறதுனால நான் எப்படி வர்றதுன்னு கேட்டுச்சாம். அதுக்கு தேவதை இருந்துட்டு, அதனால் என்ன உன்னோட நாய் குட்டிய கீழ விட்டுட்டு நீ மட்டும் வா ன்னு சொல்லிச்சு. அதுக்கு அந்த பாப்பா இருந்திட்டு எல்லாரும் அவங்களுக்கு புடிச்ச பொருள கூடவே எடுத்துட்டாங்க.

எனக்கு புடிச்சது இந்த நாய் குட்டி தான். நான் செத்தாலும் பரவாயில்ல இந்த நாய் குட்டிய நீ கூட்டிட்டு போ , அப்படின்னுசு. இத கேட்ட அந்த தேவதை என்ன சொல்றதுன்னு தெரியாம மெய் சிலிர்த்து கூட இருந்த எல்லாத்தையும் கீழ உதறி விட்டுட்டு அந்த குட்டி பாப்பாவையும் நாய் குட்டியையும் கூட்டிட்டு பறந்து போயிடுச்சாம்.

நீதி: எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் அன்பே கடவுள், குழந்தையும் தெய்வமும் ஒன்னு. மனசு குழந்தை போல இருந்தா மீண்டும் மழலை பருவத்துக்கு போக வாய்ப்பு கிடைத்தா ...தெரியும் அன்பை தவிர மற்ற உணர்வுகள் எல் லாம் பொருள்கள் எல்லாம் அர்த்த மற்றவை

## முள்ளுக்கும் திறமையுண்டு



விவசாயி ஒருவருக்கு மலை அருகே தோட்டமிருந் தது. அதில் துளசி பயிர் செய்து இருந்தார். துளசி செடிகளுக்கு இடையே முளைக்கும் களை கள், முட்செடிகள் ஆகிய வற்றை பிடுங்கி எடுத்து துளசி செடிகளை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வளர்த்து வந்தார்.

ஒரு நாள் துளசி செடிக்கு இடையே வளர்ந்து இருந்த ஒரு முட்செடி ஒன்றை பிடுங்கி எறிந்தார். உடனே அந்த முட்செடி கண்ணீர் விட்டு அழுதது.விவசாயி அந்த முட்செடியிடம் சென்ற போது அது சொன்னது,

நான் தான் யாருக்குமே பயன்பட போவதில்லையே. எந்த திறமையும் இல்லாத என்னை ஏன் கடவுள் படைத் தார் என வருத்தப்பட்டது.

கடவுள் யாரையும் காரணம் இல்லாமல் படைப் பதில்லை. எல்லோருக்கும் திறமையும், பலத்தையும் கொடுத்து இருக்கிறார்.

அதை நாம் தான் கண்டுபிடித்து பயன் படுத்த வேண்டும் என்று விவசாயி சொல்ல..

என்ன திறமை இருக்க போகிறது எங்கிட்ட, நானோ முட்செடி. பிறரை காயப்படுத்துவேனோ தவிர, வேரு யாருக்கும் உதவியாக இருக்கமாட்டேன்என்று தன்னை இழிவாக பேசியது.

மறுநாள் விவசாயி தன் தோட்டத்திலிருந்து பிடுங்கி எறிந்த முட்செடிகளை எல்லாம் ஒன்று சேர்த்து தோட்டத்தை சுற்றி வேலி அமைத்தார்.

பின்பு அந்த முட்செடியிடம் சென்று, நீ முட்செடி தான் பிறரை காயப்படுத்துபவன் தான். ஆனால் உன்னிடமும் திறமை இருக்கிறது பலமும் இருக்கிறது. அதனால் தான் இன்று இந்த தோட்டத்தையே பாதுகாக்கும் காவல் கார வேலியாக உயர்ந்துவிட்டாய் என்று விவசாயி சொல்ல..

கடவுள் படைத்த எல்லா உயிர்களுக்குமே திறமையும் பலமும் உண்டு என்பதை உணர்ந்தது முட்செடி .

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 450

மது மதுமிதா

யார் கண்ணீரையும்
நீ துடைக்க வேண்டாம்
யார் கண்ணீருக்கும்
நீ காரணம் இல்லாமல்
இரு அது போதும்...

பாலன் குமார்




மிது மிதுர்சா




லக்ஸ்மன் லவண்




தரணி தார்மி



சுதர்சன் கெனி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## வினாக்காலம்

மாற்றங்கள் நிகழுகின்றன
மண்ணில்
ஆயினும்
மாற்றங்கள் நிகழவில்லை
மனங்களில்
கேள்விக்குறிகளால்
நிரம்பிவழியும் நிகழ்காலத்தில்
மக்கள்
நிச்சயமற்ற கனவுகளுடன்
இப்பொழுதும்
சொகுசு அரசியலின்
மேம்போக்குத்தனம்
வறிய வர்க்கத்தின்
ஆழ்மன உணர்வுகளை
புறந்தள்ளிப் புன்னகைக்கின்றன
தமக்கான இருப்புக்களை
நிலை நிறுத்த
எவ்விடத்திலும்
தலைசாய்க்க இடமில்லையிங்கு
தவிக்கின்றது நிலையற்ற வாழ்க்கை
சில இடங்களில் பலருக்கு
நிச்சயமாய்!

அலைக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

## சின்னஞ்சிறு வயது நிறைவு

சின்னஞ்சிறு வயதில்
சிறகடிக்கும் சிட்டுக்குருவி போல்
சுதந்திரமாய் திரிவோம்
வட்டமிட்டுத் திரியும் காக்கை போல
இனிப்பைச் சுற்றித் திரிவோம்
குறும்புத்தனம், குழப்படிகள், சேட்டைகள்
செய்து திரிவோம்
நாட்கள் செல்லச் செல்ல
வயதும் சென்று விடுமே
அந்த அழகிய காலம்
நிறைவடைந்து விடுமே
சென்ற காலத்தை எண்ணி
மனமகிழ்வு கொள்ளவேண்டியது
தான் நமது வழி


சி.அபிலாசினி
யா/வ.ம.ம.க

## சோராது பயணத் தொடர்

வளர்கின்ற பயிரில் ஷிளைகின்ற பயிராய்
வளமாக உன்னை நீ மாற்று
வருங்கால மொன்றைக் கருங்கல்லின் எழுத்தாய்
உருவாக்கி உன்னை நீ போற்று
நிழல் தேடி ஆறாது நேராக ஓடு
நீ கொண்ட இலட்சியந் தேடு
நீறாக்கு தடைகளை நிலவுக்குள் குறிவைத்து
நின்பாதை தனைச் சீராக்கு
தழல்கொண்டு தகிப்பர் தனங்கொண்டு தடுப்பர்
சதிசெய்தும் உன் வீச்சை முறிப்பர்
தலைமேலே யுயர்த்தி தயவாகப் பேசி
தாளாத பள்ளத்தில் வீழ்த்தி
சுழல் காற்றா யுனக்குச் சோதனைகள் தருவர்
சோராது நின்பயணந் தொடர்வாய்
சாதனைகள் மேலே சாதனைகள் ஆற்றி
சரித்திரத்தில் நிற்பாய் நிலைத்து

கலாபூஷணம் ந.இராமநாதன்

## இமயம் தொட



அன்பின் உறைவிடமாய்
அறிவின் சிகரமாய்
மதங்களை மதித்து
மனிதத்தை உயர்த்திட
இறையின் உருவாய்
உதித்த கலாமே!
உங்கள் சிந்தனைதான்
எங்களை உயர்த்தியது
உங்கள் எளிமைதான்
எங்களை மனிதராக்கியது
உங்கள் எண்ணம்தான்
எங்களை சிகரமேற்றியது
நீங்கள் இறந்ததாகக் கூறுகிறார்கள்
மனிதர்களுக்கே இறப்பு
மகான்களுக்கல்ல

மாவை. நா.கஜேந்திரன்



## பலமிழந்தாலும் சுதந்திரம் வேண்டும்

பலமிழந்த நேரத்தில்
பயணமும் முடிந்திடுமா
தனித்துவிட்ட என்
தவிப்பைத்தான் யார் அறிவர்
சொந்தமென்று யாருளரோ
சொல்லிநான் ஆறிடவே
மன உறுதி நிறைய உண்டு
மகிழ்வோடு வாழ்வதற்கு
சுமை நிறைந்து
வாழ்ந்தாலும்
சுதந்திரமாய்
வாழவேண்டும்

அணிஞ்சில்
புவபாலன்

## பணக்காரி

உறவுகளும் உன்னை
உதிர்த்துவிட்ட பின்னும்
நினைவுகளை மட்டுமே
முதலிட்டு
மௌனத்தையே சேமிக்கிறாய்
பெயரளவில் நீயும்
பணக்காரியே

பா.யுகந்தன்
நெடுந்தீவு

# மௌனத்தின் தேடல்- 259

## முடிவில் ஓர் ஆரம்பம்

தாயே! கவலைப்படாதே
உன் எண்ணம் புரிகின்றது
யாரோ ஒருவரை எதிர்பார்த்து
காத்திருப்பது போல் தெரிகிறது
ஆனால் எனக்கு புரிகின்றது
உன் ஆதங்கம்
காணாமற்போன
உன் மகனின் வரவை
எண்ணித்தானே
இனிசோகம் வேண்டாம்
நான் உன் மகனாக

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்

## மகனே

அன்னையின்
உள்ளம் கோயில்
அன்னையின்
உயிர் தெய்வம்
தன்னை வருத்தும்
பிள்ளை என்றாலும்
அவனை திருத்த
தவம் இருக்கும் ஒரு பெண்
வீதியில் அவளை
விடலாமா?

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## விதி வீதியிலா?

பற்றின் விளிம்பிலும்
பற்றறு விளிம்பிலும்
துறவின் முடிவிலும்
பிறவியின் முடிவிலும்
நிற்கும் முதியவள்
முதியோர் இல்லம்
தஞ்சம்கோரி பதிய
கொஞ்சமும் பணமில்லை
நெஞ்சம் நெகிழுகிறது
பணமில்லையெனில்
பிணமாகி விடுவேனோ
விதியாய் வீதியில்...
கவலையில் இவள்

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## பணமிருந்தென்ன...!

கரம்பிடித்த கணவனோ
காலம் வந்த
கட்டையிலே ஏறிவிட்டார்
பெற்றவர்களோ
அந்நிய தேசத்தில்
மாதம் மாதம் பல
ஆயிரங்கள் அனுப்புகின்றனர்
பணமிருந்தென்ன- பசி
போக்க என் முதுமை
எனைத் தடைபோடுகிறது
அயல் வீட்டார் உதவியினால்
முதியோர் இல்லம்
புறப்படக் காத்திருக்கின்றேன்


யே.சிவலோஜினி
வயாவிளான்

## உன் துணைவன்

உன் கணவாளன்
துணை ஒன்றாய் உனைத்
தனக்காக தேர்ந்தெடுத்து
திருமதி எனும்
திருநாமம் சூட்டியவன்
நீ இன்று பொதியோடு
தனித்திருக்கும்போது
துணையாக எதையும்
தராது போனானோ
அவர் பெயர் நிலைக்க
நீ வருந்தாதே- உன்னை
படைத்தவன் வருவான்
என்றும் துணையாக உன்னோடு

யு.சோபியா
[illegible]

# மௌனத்தின் தேடல் -260



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 05.08.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த "என்ர பிள்ளைக்கு பேய் பிடிச்சிருக்கு" என்ற விபரணத்தைத் தொடர்ந்து இவ்வாரம் பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் நேர்காணல் வெளிவருகிறது.**



கடந்த சில காலங்களாக வடக்கில் நடைபெற்று வருகின்ற பல்வேறு சமூகப்பிரச்சினைகளுக்கான ஒரு காரணமாக மது பாவனை அமைந்திருக்கின்றது. இந்நிலையை மாற்ற முடியாதா?

சமூகத்தில் நடைபெறுகின்ற கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகங்கள், வீதிச் சண்டை, வாள்வெட்டு, குழுமோதல், விபத்துக்கள், வீட்டு வன்முறைகள் என்று அனைத்துக்கும் குடி ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது. குடி ஓர் மிகப் பெரிய சமூகமட்டப் பிரச்சினை. யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை, சென்றவாரம் கூறப்பட்ட வரைபின் படி, யுத்தத்துக்குப் பின்னர் குடிப்பவர்களின் எண்ணிக்கையும், உள்ளெடுக்கப்படும் மதுவின் அளவும் அதிகரித்த வண்ணமேயுள்ளன.

இந்தப் பிரச்சினையிலிருந்து தமிழ்சமுதாயம்விடுபடுவதற்கு அனைவரும் ஒன்று திரண்டு பணியாற்ற வேண்டும். சமூக மட்டத்தில் மிகப் பெரிய விழிப்புணர்வுகள் செய்யப்பட வேண்டும்.வீதிநாடகங்கள், சுவரொட்டிகள் மூலமாக கிராமமட்டங்களில் மக்களுக்கு குடியின் தாக்கங் கள்ளைப் பற்றித் தெளிவுபடுத்த வேண்டும். பத்திரிகைகள், தொலைக் காட்சிகள் போன்றஊடகங்களுக்கூடாகமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். சிலருக்கு தாங்கள் குடிக் கின்ற அளவு மற்றும் அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் என்பவை புரிவதில்லை. அவற்றை புரிய வைக்க வேண்டும்.

அரசமட்டத்தில் மதுபானம் விற்கின்ற கடைகளின் எண்ணிக்கையை குறைத்து, மதுபானத்தின் விலையைக் கூட்டுவதன் மூலம் மாற்றத்தைக் கொண்டு வரலாம். இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் இருப்பதும், கையில் இருக்கின்ற சிறுதொகைப் பணத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையும் காணப்படுவதால், பலரும் குடிக்கு அடிமையாகின்றனர். பல்கலைக்கழகம், உயர் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றுக்கு அண்மையில் மதுபானசாலைகள் அமைக்கப்பட்டிருப்பது, இலகுவில் மதுபானசாலைகளுக்குரிய அனுமதிகள் வழங்கப்படுவது போன்ற விடயங்களும் பல குடிகாரர்களை உருவாக்கக் காரணமாகின்றது. மது விற்பனையாளர்களும் குறித்த வயதெல்லைக்குட்பட்டவர்களுக்கு (18 வயது) மதுபானத்தை விற்பனை செய்வதைத் தடுக்கலாம். இவ்வாறான விடயங்கள் நிச்சயமாகக் கருத்திலெடுக்கப்பட வேண்டும்.

முக்கியமாக, குடித்துவிட்டு வாகனங்களை செலுத்துபவர்கள் விடயத்தில் மிகக் கவனமாக இருப்பதுடன், உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதாவது, வாகனம் செல்கின்ற வேகத்தை அளவிடும் கருவிகளைப் போல குடித்துவிட்டு வாகனம் ஓட்டும் நபர்களையும் கண்டறியக் கூடிய கருவிகள் உள்ளன. வாகனச் சாரதி ஒருவரை நிறுத்தி அவரின் சுவாசத்தை அளப்பதன் மூலமாக அவர் எவ்வளவு குடித்திருக்கின்றார் என்பதை அளவிடலாம். அவ்வாறாக கட்டுப்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் வாகன விபத்துக்களையும், உயிரிழப்புக்களையும் தவிர்க்கலாம். படிப்படியாக, இவ்வாறான மாற்றங்களைச் சமூகத்தில் கொண்டு வரலாம்.

குடிபாவனைக்குரிய காரணங்களில் ஒன்றாக, மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்களும் தேக்கி வைக்கப்பட்ட நேரங்களும், ஒழுங்குபடுத்தப்பட்ட பொழுது போக்கு முறைகள் இல்லாமையும் முக்கியத்துவம் பெறுகின்றன. சிறந்த பொழுது போக்குகள் இல்லாமையால் எஞ்சியிருக்கின்ற நேரத்தில் சகபாடிகளுடன் இணைந்து குடிப்பதில் கழிக்கின்றனர். ஆரோக்கியத்தை ஏற்படுத்தக்கூடிய விளையாட்டுக்கள், விழாக்கள், சமூகச் செயற்பாடுகள் போன்றவற்றில் ஈடுபட ஊக்கப்படுத்துவதன் மூலமும் மக்களை குடியின் பிரச்சினையிலிருந்து காக்க முடியும்.

போருக்குப் பின்னர் ஏற்பட்ட மனவடு மற்றும் உளநோய்கள் சரியான முறையில் அடையாளங் காணப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டு, மக்களுக்கு வேண்டிய உளவியல் உதவிகள் கிடைத்தாலும் குடியின் தாக்கங்களிலிருந்து விடுபட வைக்கலாம்.

குறித்த சம்பவப் பின்னணியில் கூறப்பட்ட நபருக்கு எவ்[illegible] உளவியற் சிகிச்சைகளை [illegible] முடியும்.



சொல்லிச் சொல்லி அழுதல் (ஒப்பாரி வைத்தல் இழவிரக்கப் படிமுறைகளில்ஒன்று)

அவருக்குமுதலாவதாகஉளவியல் பிரச்சினை சம்பந்தமான அறிவை வழங்க வேண்டும். அவருடைய கண்ணுக்கு முன்னாலேயே ஏற்பட்ட மனைவியின் இழப்பு, இறந்த பின்னர் இடம்பெற வேண்டிய கிரியைகளை சரிவர செய்ய முடியாது போன குற்ற உணர்வு, தொடர்ந்தும் காணப்பட்ட அபாயகரமான நிலைமை என்பவற்றால் ஏற்பட்ட இழவிரக்கத்தின் காரணமாக அவர் பாரிய மனவடுவுக்கு உள்ளாகியுள்ளார். வன்னியில் யுத்தத்திற்குள் அகப்பட்டவர்களில் அநேகமானவர்களிற்கு இந் நிலைமை காணப்படுகின்றது. இத்தகைய தாக்கத்திற்கு உட்பட்டவர்களால் வழமையான வாழ்க்கைக்கு திரும்புவது கடினமானதாக இருக்கும். எந்த ஒரு விடயத்திலும் அவர்களால் முற்றுமுழுதாக ஈடுபடமுடியாதிருக்கும். நடந்து முடிந்த சம்பவங்கள் திடீரென்று நினைவுக்கு வரும்போது, மீண்டும் நடப்பது போன்ற உணர்வு ஏற்படலாம். அவர்களுடைய மனநிலையில் குற்ற உணர்வு ஏற்படலாம். குறித்த நபருக்கும் இந்நிலையே ஏற்பட்டுள்ளது. இது உண்மையிலேயே மிகவும் கொடூரமான, மறக்கமுடியாத சம்பவமாகும். ஆனாலும், இந்நிலைமையை மாற்றக்கூடிய உளவியல் சிகிச்சை முறைகள் இருக்கின்றன. உளவியல் சிகிச்சையுடன் வேண்டிய ஆதரவையும் வழங்கும்போது, அவரில் சிறிதளவு மாற்றத்தை ஏற்படுத்தும். இது ஒரு மறக்க முடியாத சம்பவமாக இருந்தாலும் அவருடைய குடும்ப நிலை, பொறுப்புக்கள், எதிர்காலம் என்பவற்றை கருத்தில் கொண்டு அவருடைய தாக்கத்திலிருந்து விடுவிப்பதற்கு வேண்டிய உளவியல் உதவிகளை செய்ய முடியும். அவ்வாறு சிகிச்சை யளிக்கும் போது அவருடைய குடிக்க வேண்டிய தேவை குறைந்து விடும். அவருக்கு பக்கவிளைவுகளை ஏற்படுத்தாத மருந்துகளை சிகிச்சையின் போது வழங்க முடியும். இவருக்கு குடியால் ஏற்படுகின்ற தாக்கங்களை போன்ற நிலை இம்மருந்துகளால் ஏற்படாது. தொடர்ச்சியான கண்காணிப்புடன் இணைந்த உளவியல் புனர்வாழ்வு அவருக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கினால், அவருக்கு மனதளவில் ஒருமாற்றமும் திருப்தியான மனநிலையும், எதிர்காலத்தின் மீது நம்பிக்கையும் ஏற்பட்டு, ஒரு நல்ல நிலை உருவாகும்.

[illegible] அகப்பட்ட ஏராளமானவர்கள் மனவடுவை சுமந்த வண்ணமே வாழ்கின்றனர். வெளிப்பார்வைக்கு குடும்பம், வீடு, பிள்ளைகள் என்று இருந்தாலும் மனதுக்குள் கவலைகளை சுமந்த வண்ணம், வெளியில் யாரிடமும் சொல்ல முடியாமல் அடக்கி வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஆண்கள் குடிக்கு அடிமையாகின்றனர். பெண்கள் பலரும் மெய்ப்பாட்டு முறைப்பாடுகள் அல்லது மனச்சோர்வுடன்அடையாளம்காணப்பட்டு, உளவியல் சிகிச்சையளிக்க வேண்டியவர்களாகின்றனர்.

# மனவெளி

### இழவிரக்கம் (Grief)

நெருங்கிய அன்புக்குரிய ஒருவரின் இறப்பைத் தொடர்ந்து உளரீதியாக ஏற்படக்கூடிய எண்ணங்களும், உணர்ச்சிகளும், நடத்தைகளும் இழவிரக்கம் என்று விபரிக்கப்படுகின்றது. நிரந்தரமாக ஒருவரைப் பிரிந்ததால் ஏற்படுகின்ற இழவிரக்கத்தின்போது ஒருவர், அதிர்ச்சி, நம்ப முடியாத தன்மை, உணர்வுகள் மரத்துப்போன நிலை போன்ற ஆரம்ப அறிகுறிகளுடனிருப்பர்.

அழுதல், வருந்துதல், நினைவுகளில் மூழ்கியிருத்தல், கனவுகள் காணுதல், குற்றவுணர்வு மற்றும் கோபவுணர்வு போன்றவற்றால் துன்புறுதல், எதிர்காலம் பற்றிப் பயப்படுதல், நித்திரைக் குழப்பத்தை அனுபவித்தல் போன்ற இடைநிலை அறிகுறிகளையும் வெளிப்படுத்துவர்.

படிப்படியாக இழப்பை ஏற்றுக்கொள்ளல், இயல்பு வாழ்க்கைக்கு வருதல் போன்ற இழவிரக்கம் முற்றுப்பெறும் அறிகுறிகளையும் கொண்டிருப்பர். பொதுவாக தமிழர் கலாசாரத்தில் இழவிரக்கப் படிமுறைகள் முற்றுப் பெறுவதற்கு ஒரு வருடகாலம் எடுக்கலாம். ஆயினும், இழப்பின் சடுதித்தன்மை, கொடூரமான சம்பவங்களால் ஏற்படும் இழப்பு, இறந்தவருடன் கொண்டிருந்த உறவுமுறை, இருப்பவருடைய ஆளுமைக்கூறுகள், அவருக்குக் கிடைக்கின்ற உளசமூக ஆதரவு போன்ற பல்வேறு காரணிகள் இழவிரக்கப் படிமுறைகளைச் சிக்கலாக்கிவிடலாம். இழவிரக்கம் ஒரு எதிர்பார்க்கக்கூடிய சாதாரணமான உளவெளிப்பாடுதான் என்பதனைப் புரிந்துகொள்வதுடன், ஒருவர் இழவிரக்கப் படிமுறைகளின் ஊடாக, ஆரோக்கியமாக பயணிப்பதனையும் ஊக்குவிக்க வேண்டும். அவரைத் தனது இழப்புப் பற்றிக் கதைக்க, அழ விரும்பினால் அழவிடலாம். செய்யப்பட வேண்டிய கிரியைகளைச் செய்யும்படி வழிகாட்டலாம். மிகவும் சிக்கலான இழவிரக்க வெளிப்பாடுகளுக்கு, உளநலத்துறையினர் மூலம் உதவிகள் பெறலாம். இறப்பு நிச்சயமற்றதாய் உள்ள போதும் (காணாமல் போதல்) அல்லது இறந்தவரின் உடலைக் காணாத பொழுதும், சடங்குகள் செய்யாத போதும் இழவிரக்கம் முற்றுப் பெறாததாகி விடுகிறது.

ஏனென்றால், அவர்களுக்கேற்பட்ட தாக்கத்தின் காரணமாக ஒதுங்கியிருத்தல், விலகியிருத்தல், தங்களுடைய வேலைகளை சரிவர செய்ய முடியாதிருத்தல்போன்ற அறிகுறிகளுடன் வெறுமனே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இவ்வாறான நிலையில் இருப்பவர்களுக்கெல்லாம் பெரியளவில், பரந்த மட்டத்தில் உளசமூக உதவி செய்யப்பட வேண்டும். விழிப்புணர்வு நிகழ்வுகளிற்கு ஊடாக அவர்களை தாமாகவே முன்வந்து பிரச்சினைகளை சொல்ல வைக்கலாம். அயலவர்களோ. நண்பர்களோ இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு, உதவிபெற அனுப்பி வைக்கலாம். அத்துடன், சமூக மட்டங்களில் பணியாற்றுகின்ற அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையை புரிந்து கொண்டு உதவிகளை செய்யலாம்.முன்னைய காலங்களில் இருந்த அரசாங்கத்தினால் பெரிதாக இவ்வாறான உள சமூக விடயங்கள் முன்னெடுக்கப்படவில்லை. வெறுமனே உடைந்த வீடுகள் திருத்திக்கொடுக்கப்பட்டு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டனவேயன்றி உடைந்த மனங்களுக்கு வேண்டிய ஆறுதல் கிடைக்க வழிவகைகள் செய்யப்படவில்லை.

ஆனாலும் புதிய அரசாங்கம் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை நினைவுகூர அனுமதித்தமை மிகப்பெரிய ஆறுதலான விடயமாகும். நினைவுகூரலின் போது, தங்களுடைய கவலைகளை சுதந்திரமாக சொல்லி அழுவது, நீண்டகால உள ஆரோக்கியத்திற்குரிய நல்ல மருந்தாக அமையும். நினைவுகூருகின்ற நேரத்தில்சற்று உணர்ச்சி மிக்க நிகழ்வாக அவை இருந்தாலும் கடந்த ஆறு வருடங்களாக அடக்கி வைக்கப்பட்டிருந்த மனச்சுமை வெளிப்படுத்தப் பட்டிருக் கின்றது (படத்தைப் பார்க்கவும்) தமிழர்களுடைய கலாசார முறைப்படி, சடங்குகளும் ஆசாரங்களும் ஒருவர் இறந்தால் அவருடைய இழப்பை படிப்படியாக ஈடு செய்யக்கூடிய வகையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன.

இறந்தவீட்டு கிரியை, ஒப்பாரி, உறவுகளின் ஆதரவு, எட்டு செலவு, அந்தியேட்டி, ஆண்டுத்திவசம் என்று ஒவ்வொரு சடங்காக செய்யும்போது இழவிரக்கம் படிப்படியாக குறையும். அவற்றை ஒழுங்காகச் செய்தாலே ஓரளவு மனம் ஆறுதலடையும். அதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படு கின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**


மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளம் தோண்டித் தப்பியவன்

## த கிரேட் எஸ்கேப்


எல் சாப்போ

300 கோடி ரூபாய் திருடப்பட்ட கதை கேட்டிருப்பீர்கள்.

300 கோடி ரூபாய் செலவு செய்து, சிறையில் இருந்து தப்பித்த கதை தெரியுமா?

மெக்ஸிக்கோவில் இருக்கும் மிக அதிக பாதுகாப்பான சிறைச்சாலை "அல்டிப்ளானோ'. அதில் இருந்து போதை மருந்து கடத்தல் மன்னன் "எல் சாப்போ' என்கிற ஜோக்கின் குஸ்மான் லோரா தப்பித்திருக்கிறான். இதற்கான பட்ஜெட் 300 கோடி ரூபாய்.

யார் இந்த எல் சாப்போ? மெக்ஸிக்கோ நாட்டைச் சேர்ந்த இவன்தான், உலகின் நம்பர் வன் போதைப்பொருள் கடத்தல்காரன். உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் 701 ஆவது இடத்தில் இருக்கும் சாப்போ, உலக அளவில் தேடப்படும் பயங்கரமான குற்றவாளிகள் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவன். அமெரிக்கப் போதைப்பொருள் சந்தையில் 60 சதவிகிதம் இவன் வசம். மெக்ஸிக்கோ, அமெரிக்கா என பல நாட்டு அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கும் சாப்போவின் போதைப் பொருள் சாம்ராஜ்யம் மிக பிரமாண்டமானது. இதுவரை இரண்டே முறைதான், இவன் கைதுசெய்யப்பட்டிருக்கிறான். முதல்முறை கைதுசெய்யப் பட்டபோது, சிறைச்சாலையின் சலவைத் தொழிலாளியின் வண்டியில் ஏறித் தப்பித்தான். கடந்த ஆண்டு பெப்ரவரியில் சாப்போ, இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டபோது, அதை தனது அரசின் சாதனையாகச் சொல்லிக் கொண்டது மெக்ஸிக்கோ. அந்தச் சாதனையை ஜேம்ஸ்பாண்டு படங்களையும் விஞ்சும் வகையில் தகர்த்துத் தப்பித்திருக்கிறான் சாப்போ.

சாப்போவின் ஆட்கள், அவன் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறையில் இருந்து, ஒரு மைல் தொலைவில் கொஞ்சம் நிலத்தை வாங்கியுள்ளனர். அங்கு ஒரு தொழிற்சாலை கட்டுவதற்கான சட்டபூர்வ அனுமதியும் பெற்றனர். பின்னர் 35 அடி ஆழ சுரங்கம் அமைத்து, அப்படியே சிறைச்சாலையை நோக்கி நகர்ந்தனர். உள்ளே தோண்டப்படும் மண்ணை வெளியேற்றுவதற்காக ரயில் தண்டவாளங்களைப் பதித்து, அதில் மோட்டார் சைக்கிள் மூலம், மண்ணை வெளியில் கொண்டு வந்தனர். மொத்தம் 3,250 தொன் மண் வெளியில் கொட்டப்பட்டது.

சாப்போ அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறையின் அறையில் 24 மணி நேரமும் சி.சி.டி.வி கண்காணிப்பு உண்டு. மற்ற கைதிகளுடன் பேசவும் முடியாது. பொலிஸார் கண்ணில் படாமல் சாப்போ போக முடிந்த ஒரே இடம், சின்னத தடுப்புச் சுவர் கொண்ட குளியல் அறை மட்டுமே. சுரங்கம், மிகத் துல்லியமாக அந்தக் குளியலறைக்கு அடியில் வந்து முடிந்தது. ஆனால், சுரங்கம் 35 அடிக்கும் நேர் கீழே இருக்கிறது. இப்போது 35 அடி மேல் நோக்கித் தோண்டி விட்டால் சாப்போவைத் தொட்டு விடலாம். ஆழத்தில் இயந்திரங்களைக் கொண்டு தோண்டினால் சத்தம் வராது. பிரச்சினை இல்லை. மேல் நோக்கி வர, வர... சத்தம் வரும். சிக்கல். இதனால் வெறும் கையாலேயே மண்ணைத் தோண்டி எடுத்துள்ளனர்.

ஜூலை 11, இரவு 8:50 சாப்போ தனது அறையில் பதற்றமாக இங்கும் அங்கும் நடக்கிறான். பின் பாத்ரூம் சென்று திரும்பி, ஷூக்களை மாட்டிக்கொண்டு மீண்டும் பாத்ரூமுக்குச் செல்கிறான். அவ்வளவுதான். சாப்போ மீண்டும் திரும்பவே இல்லை. ஏணி வழியாக இறங்கி, சுரங்கத்தில தயார் நிலையில் இருந்த மோட்டார் சைக்கிளை எடுத் துக்கொண்டு, ஒரு மைல் நீளம் பயணம் செய்து எஸ்கேப்.

சுரங்கம் அமைப்பது ஒரு வருஷ புராஜெக்ட். நீளமான சுரங்கத்தில் மூச்சுவிட சிரமம் வரக் கூடாது என்பதால், உள்ளே ஒட்சிசன் குழாய்களைப் பொருத்தியிருக்கிறார்கள். சுரங்கம் அமைக்க இன்ஜினீயர்கள் பலரை வேலைக்கு வைத்திருக்கிறார்கள். உயிர் பிழைக்கும் அளவுக்கு சுரங்கத்தில் ஒட்சிசன் இருக்கிறதா எனப் பார்க்க, தப்பிக்கும் முன்பாக ஒரு சிட்டுக்குருவியை சுரங்கம் வழியாகப் பறக்கவிட்டிருக்கிறார்கள். செவ்வாய்க் கிரகத்துக்கு ரொக்கெட் அனுப்பும் பணியைவிடவும் கவனமாக ஒவ்வொன்றையும் செய்திருக்கிறார்கள்.


சாப்போவின் தப்பித்தலும் அதற்கான திட்டமிடலும் உலகையே அதிரவைத்திருக்கிறது. "சாப்போவை மீண்டும் பிடித்துவிடுவோம்' என்கிறார் மெக்ஸிக்கோ ஜனாதிபதி என்ரிக்கோ. ஆனால் அது சாத்தியம் இல்லை என்கிறார்கள் சாப்போவை அறிந்தவர்கள். "இதோடு முடிந்தது ஆட்டம்' எனச் சொல்லப்படும்போது எல்லாம், புதிதாக ஒன்றை ஆரம்பிப்பான் சாப்போ. இந்த முறை என்ன செய்யக் காத்திருக்கிறான் என்பதுதான் மில்லியன் டொலர் கேள்வி.


**இந்திய எஸ்கேப்கள்!**

சுரங்கம் அமைத்து, சிறையில் இருந்து தப்பிப்பது இந்தியாவிலும் நடந்திருக்கிறது. 1995இல், வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டி ருந்த விடுதலைப் புலிகள் 43 பேர் இப்படி ஒரு முயற்சியை மேற்கொண்டனர். அகழிக்கு அடியில் சுமார் 47 மீற்றருக்கு சுரங்கம் தோண்டித் தப்பிக்க முயற்சித்தனர். சுரங்கம் சரிந்து சிலர் மாட்டிக்கொள்ள, 21 பேர் தப்பி விட்டார்கள். பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் பியாந்த் சிங்கைக் கொலை செய்த குற்றவாளிகள் மூவர், பஞ்சாப் மாநிலம் புரைல் சிறையில் இருந்து, 94 அடி நீள சுரங்கம் தோண்டித் தப்பினார்கள்!

**இது... எல் சாப்போ ஸ்டைல்!**

எல் சாப்போ சுரங்கம் அமைத்துத் தப்பியிருப்பதை, அமெரிக்க அரசு ஆச்சர்யமாகப் பார்க்கவில்லை. ஏனெனில், மெக்ஸிக்கோவில் இருந்து அமெரிக்காவுக்குப் போதைப்பொருள் கடத்த, எல் சாப்போ குழுவினர் அதிகம் பயன்படுத்துவது சுரங்கப் பாதைகளைத்தான். கிட்டத்தட்ட 120 சுரங்கங்கள் இரு நாட்டு எல்லைகளையும் இணைப்பதாக அமெரிக்க பொலிஸ் சொல்கிறது. அதில் 62 சுரங்கங்களை மட்டும் தான் பொலிஸ் கண்டுபிடித்திருக்கிறது!



**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை கிடைச்சாச்சு!

பள்ளிக்கூட வாழ்க்கை முடிந்து இரண்டு மூன்று வருடங்கள் முடிந்து விட்டன. எத்தனையோ வேலைகளுக்கு விண்ணப்பிச்சும் என்ன பலன்? இப்போதைய காலகட்டத்தில் யாருக்கும் பின்னால வாலைப் பிடிச்சாதான் வேலை. இல்லாட்டி மூன்று நாலு இலட்சம் இலஞ்சம் குடுத்தாதான் வேலை. என்ன செய்யிறது இதுதான் தலைவிதி. நான் தான் படிப்புக்கு ஏற்றவாறு ஒரு தொழிலை தேர்ந்தெடுக்கோனும் மனதிலே நினைத்துக் கொண்டு படுக்கை போர்வையை விலத்தினான் யாழவன்.

தம்பி யாழவா இந்த தேத்தண்ணிய குடிச்சிட்டு புதுக்குடியிருப்பு சந்தைக்கு போயிற்று வா நல்ல முளைக்கீரை வந்திருக்கும் மத்தியானம் சோத்துக்கு கடைவம் வேளைக்கு போயிற்று வா முடிஞ்சுபோம். குடிசைக்குள் இருந்த யாழவனின் தாய் பார்வதியின் குரல்.

தாய் குடுத்த ஐம்பது ரூபாய் காசை வாங்கிக் கொண்டு சாரத்தை மடித்துக் கட்டிவிட்டு சைக்கிளின் மிதி பலகையை சுழற்றுகிறான் யாழவன்.

சைக்கிளில் ஏறுகின்ற போதே மனதிலே கவலை. அவனுக்கு தனது குடும்ப வாழ்வாதாரம் விளங்கிவிட்டது. கிழமையில் பெரும்பாலான நாட்கள் பருப்பும் கீரையும் தான் மத்தியான சோற்றுக்கான கறிகளாகயிருக்கும். அவற்றைத்தான் உண்பதற்கு ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. பருப்பும் கீரைக்கறியும் தான் நெடுக சமைக்கிறியள் எண்டு அவன் தன் அம்மாவுடன் சண்டை பிடிச்சதும் இல்ல.

அவனுக்கு தன்ர குடும்ப நிலை விளங்கியிருந்தது. ஆனால் தங்கச்சியும் அக்காவும் நெடுகலும் பருப்பும் கீரையும் தான் சாப்பிட வேண்டியிருக்கு என கவலைப்பட்டான்.

யாழவனை சின்ன வயதிலிருந்தே எனக்கு நல்லாத் தெரியும். அவனும் நானும் ஒரே விளையாட்டு கழகம் தான். மாலை நேரங்களில் ஒளி அரசி விளையாட்டு மைதானத்தில கிரிக்கெட் விளையாடினாங்கள். அவன் நல்ல கெட்டிக்காரன். கிரிக்கெட் கூட நல்லா விளையாடுவான். நெடுத்த கம்பீரமானவன். மனிதளவில் மிகவும் மென்மையானவன்.

கடைசிச் சண்டையோட நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்திட்டம். யாழவன்ர குடும்பம் முல்லைத்தீவில் தான் இருந்தது. நீண்டகால இடைவெளிக்கு பின்னர் அண்டைக்குத்தான் அவனை புதுக்குடியிருப்பு சந்தையில கண்டனான். என்னை கண்டவுடன் கட்டி அணைச்சான் எப்படி இருக்கிறாய் வேலவன்? இருக்கிறன். யாழவன் நீ எப்படியடா? பரவாயில்லை இருக்கிறன். ஒருவித கவலையோடும் விரக்தியோடும் பதிலளித்தான்.

கையிலே இரண்டு முளைக்கீரைப் பிடிகள் வாங்கி வைத்திருந்தான். கிழிந்து போன சாரத்தை மடித்து கட்டியிருந்தான். கறள் கட்டிப் போன சைக்கிளை எரிந்து போன தேக்குமரத்தோட சாத்தினான்.

எதையோ கதைக்க நினைக்கிறான். ஆனால் யாழவனால் எதையும் கதைக்க முடியவில்லை. என்ன யாழவன் அம்மா அப்பா எல்லாம் சுகம் தானே... மிகவும் சோர்வடைந்தவனாய் என் முகத்தை உற்றுப்பார்த்தான். வேலவன் அம்மா சுமாயிருக்கிறா அப்பாக்கு நடந்தது உனக்குத் தெரியாதோ... நாங்கள் இடம் பெயர்ந்து புதுமாத்தளனுக்கு போகேக்க அப்பா செல்லடிபட்டு விழுந்திட்டார். நானும் அக்காவும் தூக்கிக் கொண்டு மாஞ்சோலை வைத்தியசாலைக்குக் கொண்டு போனனாங்கள். ஆனாலும் அப்பாவைக் காப்பாத்த முடியேல. அவன் சொல்லுகின்ற போது முகம் கறுத்து வியர்த்திருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. தான் போட்டிருந்த நீள சேட்டின் பின்புற முழங்கையால் கண்களை துடைத்துக் கொண்டான்.

இப்ப தூரத்தே இராணுவ கவச வாகனம் ஒன்று செல்கின்றது. வீதியோரம் சொத்தி நாய் ஒன்று ஊளையிடுகிறது. இரணைபாலை சந்தி ஊடாக ஒரு இரு இறுதி ஊர்வலம் போகிறது. நாலைந்து பேருடன்...

மிகவும் அமைதியாக இருந்தவன் மௌனத்தை கலைத்தான். அரசாங்க வேலைக்கு விண்ணப்பப்படிவம் எதுவும் வந்தா எனக்கு எடுத்துத் தா வேலவன். யாழவன் உன்ர திறமைக்கும் நல்ல குணத்துக்கும் உனக்கு நல்ல வேலை கிடைக்கும். ஒண்டுக்கும் கவலைப் படாதே. நான் யாழ்ப்பாணம் போகணும் போயிற்று வாறன். வேலவன் புறப்பட்டான்.

கீரைப் பிடிகளை வாங்கிக் கொண்டு சைக்கிளை மெல்ல சுழற்றினான் யாழவன். ஆலடி வாசிகசாலை மின்கம்பத்துடன் சைக்கிளை சாத்தி விட்டு இன்றைய பத்திரிகைகளில் ஏதாவது வேலைக்கு விண்ணப்பம் வந்திருக்கா என ஒவ்வொரு பக்கத்தையும் ஆவலோடு புரட்டிப் பார்த்தான். ஏமாற்றமே மிஞ்சியது. வீடு வந்து சேர்ந்தான். மனம் தளர விடவில்லை.

திங்கட்கிழமை முந்தி அப்பான்ர சிநேகிதம் எண்டு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு ஒருவர் வந்தார்.

தம்பி யாழவன் உனக்கு விவசாயத் திணைக்களத்தில வேலை எடுத்து தாறன். ஆனால் வேலை கிடைக்க முதல் ஒரு இலட்சம் தரவேணும். வேலை கிடைச்சாப் போல ஒன்டு தரோணும். கொஞ்சப்பேர் இப்படியும் கஷ்ரப்பட்டாக்களிட்ட வறுகி சீவிக்கிறாங்கள்.

எங்கட அம்மாவும் இந்தாள்ர கதையை நம்பி அக்கான்ர காப்பயும் தங்கச்சின்ர மோதிரத்தையும் அடகு வைச்சோ அல்லது வித்தோ இந்த விவசாயத் திணைக்கள வேலை எடு தம்பி எண்டு அம்மா சொன்னா... நான் அம்மாவ பேசிப் போட்டன். இவங்கள் ஏமாத்து பேர்வழிகள் என சில மாதங்கள் உருண்டோடின.

பத்திரிகையில் ஒரு வேலைக்கு விண்ணப்பம் கோரியிருந்தார்கள். ஆரம்பச் சம்பளம் பதின் நான்காயிரம். ரூபா பயிற்சிக் காலம் கொழும்பில இரண்டு வருடங்கள். அங்க தான் வேலை செய்யோணும். எதுக்கும் ஒருக்கா நேர்முகத்தேர்க்கு போவம் என சிந்தித்துக் கொண்டு நேர்முகத் தேர்வுக்கு தயாரானான் யாழவன்.

நேர்முகத்தேர்வுக்கு போடுறதுக்கு சப்பாத்துக்கு கூட காசில்லை. யாழன்ர அம்மா பக்கத்து வீட்டு நடா அண்ணா இட்டு [illegible] தான் யாழவனால் போட வேண்டியிருந்தது.

எப்படியும் உனக்கு வேலை கிடைச்சிடும் யாழவா... ஒண்டுக்கும் கவலைப்படாத. போற வழில முருகன் கோவில்ல இந்தத் தேங்காயை உடைச்சிட்டுப் போ.. தாய் சொன்ன வார்த்தைகள் மனதிலே உற்சாகத்தைத் தர யாழ்.தேவியின் மூன்றாம் பெட்டியின் ஜன்னல் கரையோரத்தின் இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டான்.

எப்படியும் வேலை கிடைச்சிடும். அம்மா அக்கா தங்கச்சி கவனமாப் பாக்கோணும் என்ற எண்ணங்கள் அவன் மனதிலே வலம் வந்து கொண்டிருந்தன. யாழ்தேவி மெல்ல அசையத் தொடங்கியது. அவனுக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஓடி விளையாடிய ஊர், தினமும் சோறு ஊட்டிய அம்மா, தினமும் சின்னச் சின்ன சண்டை பிடிக்கும் தங்கச்சி, பாசமுள்ள அக்கா எல்லாவற்றையும் விட்டுப்பிரிந்து கொழும்புக்கு மனதளவிலே ஆதங்கப்பட்டான் யாழவன்.

யாழ்தேவி இப்போது வவுனியா தரிப்பிடத்தை அடைந்திருந்தது. சனங்கள் இறங்கி காலை உணவை உண்கிறார்கள். சில இளைஞர்கள் யாழ்தேவியின் வாசல்கள் எட்டிப் பார்த்து இயற்கையை ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எப்படியாவது வேலை கிடைச்சிடோனும். என்னை நம்பித் தான் எங்கட குடும்பமே. கடவுளே எப்படியும் வேலை கிடைக்கச் செய். மனதளவிலே கடவுளிடம் வேண்டினான்.

யாழ்தேவி இப்போது கோட்டை புகையிர நிலையத்தை அடைந்திருந்தது. மெல்ல இறங்கினான். யாழவன் எங்கையாவது கொஞ்ச காசில அறை வாடகைக்கு இருக்குதோஎண்டு விசாரித்தான். ஒரு மாதிரி ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபா வாடகை கட்டணம் செலுத்தி அடுத்த நாள் நேர்முக த் தேர்வுக்கு தயாரானான்.



தங்கச்சி அழுத்திக் கொடுத்த ஜீன்சையும் சேட்டையும் எடுத்து கட்டிலில் வைத்தான். அம்மா பக்கத்து வீட்டில வாங்கித்தந்த சப்பாத்தை ஈரத்துணியால் துடைத்துக் கொண்டான். குளித்து விட்டு கண்ணாடியில் தனது உருவத்தை பார்த்தான். கண்ணாடியிலே அம்மா, அக்கா, தங்கையின் உருவங்களே கண்களில் தெரிந்தது.

கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு நேர்முகத் தேர்வுக்கு புறப்பட்டான். போறவழியில் சாப்பாட்டுக்கடையில் சின்னப் பாண் துண்டும் தேநீரும் சாப்பிட்டுக்கொண்டான். அந்தச் சின்ன பாண்துண்டுக்கும் தேநீருக்கும் நூறு ரூபா. கடைக்காரரிடம் ஆதங்கப்பட்டான். கொழும்பு எண்டா இப்பிடித்தான் தம்பி. ஒரு மாதிரியாக நேர்முகத்தேர்வு நடக்கும் இடத்தை விசாரித்துச் சென்றடைந்தான். நிறையப் பேர் வந்திருந்தாங்கள்.

அடுத்த பெயர் யாழவன்ர பெயர். யாழவன் யாழவன் வெளியில் நின்ற ஊழியர் கூப்பிட்டார். மிகவும் தயக்கத்துடன் தனது சுயவிபரக் கோவையுடன் உள்ளே நுழைந்தான்.

தம்பி எங்க இருந்து வாறீங்கள்? கொன்னைத் தமிழில கேட்டார் நேர்முகத் தேர்வு நடத்துனர். நான் சேர் முல் லைத்தீவு புதுக்குடியிருப்பு. கொழும்பில எங்கை வேலை எண்டாலும் வேலை செய் வியா? ஓம் சேர். தம்பி உனக்கு கட்டு பெத்த கிளையில் வேலை கிடைச்சிருக்கு அப்படியோ சேர்? மிக்க நன்றி. மிகுந்த சந்தோசத்துடன் தான் தங்கியிருக்கும் அறை நோக்கி விரைந்தான் யாழவன்.

வந்தவுடன் அவன் அம்மாவின் மிஸ் கோல் நிறைய வந்திருந்தது. ஏன் அம்மா கோல் எடுத்திருப்பா என சிந்தித்துப் பார்த்தவன். .. அம்மா நேர்முகத்தேர்வின் முடிபு அறியத் தான் எடுத்திருப்பா போல. அம்மாவுக்கு அழைப்பை எடுத்தான் யாழவன்.

## சிறுகதை

அம்மா எனக்கு வேலை கிடைச்சிட்டு. இரண்டு வருடம் கொழும்பில தான் வேலை. அக்காக்கும் தங்கச்சிக்கும் சொல்லுங்கோ என்று சொல்லி முடிக்கிறதுக்குள் எட யாழவா நீ முந்தி ஒருக்கா முகாமைத்துவ உதவியாளர் போட்டிப். பரீட்சைக்கு எழுதினியெல்லோ. அதில நீ தெரிவாகி இருக்கிறாய். இண்டையான் பேப்பர்ல உன்ர பேர் வந்திருக்கு. அப்படியோ அம்மா யாழவன் உள்ளம் இனித்தது.

மறுநாள் காலையே சொந்தக்கிராமம் புறப்பட தயாரானான். யாழ்தேவியில் ஏறி அமர்ந்தான். முருகன் என் னைக் கைவிடேல என்று பெருமூச்சு விட்டான் யாழ வன். பனை மரங்கள் எழுந்து நின்று வரவேற்றன. உப்பளக் காற்று மேனி தடவிச் செல்ல சொந்த ஊரில் கால் பதித்தான். சொந்தக் காலில் எப்போதும் நீ நிக்கோனும் என்ற தனது அப்பாவின் அறிவுரையை நினைத்த படியே.... வீடு நோக்கி நடக்கத் தொடங்கினான்.

**ஆ.முல்லைதிவ்யன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களால் அடைய முடியாத சவால்களை

## பிள்ளைகள் மீது திணிக்காதீர்கள்



மறைந்த ஏவுகணை நாயகன் பாரத ரத்னா அப்துல் கலாம் ஆக்க சக்தியும் மன ஆரோக்கியமும் உள்ள பிள்ளைகளை காணத்துடித்தவர். இவர்களே எதிர்காலத்தை புரட்டிப் போடக்கூடியவர்கள் என நிச்சயமாக நம்பியவர். இதற்காகவே இறுதி முச்சுள்ள வரை இயங்கிக் கொண்டிருந்தவர். இன்று எம்மத்தியிலும் கலாம் போன்றோரின் சேவை தேவையாகவுள்ளது. எம் இளைஞர்கள் மத்தியில் போதை, மதிப்பற்ற போக்கு, கோபத்தை ஆரோக்கியமாக வெளிப்படுத்த தெரியாமை, வன்முறைப் போக்கு, கொந்தளிப்பு நிலை என இன்னோரன்ன பிறழ்வுகளை எம் சமூகம் எதிர்நோக்கியுள்ளது. இவற்றை எவ்வறு வெற்றிகரமாக கையாண்டு ஆற்றுப்படுத்தி கடந்து சென்று நல்ல நிலையையடைவது என்பதில் குழப்பமாகவே உள்ளது. இவற்றிலிருந்து மீளும் அடிப்படை வழிமுறைகளைப் பெற்றோராகிய நாமும் தெரிந்திருத்தல் அவசியம்.

வாழ்வின் அதிசயிக்கத்தக்க ஓர் அனுபவம் பெற்றோர் நிலையாகும். இது மிகவும் பொறுப்பு மிக்கதும் சவால்கள் நிறைந்ததுமானதாகும். ஆனாலும் பிள்ளைகளின் உடல், உள, ஆத்மார்த்த நலன்கள் மேம்படும் போது மெச்சத்தக்க சந்தோசமான அனுபவமாக அது மாறிவிடுகிறது. பிள்ளைகள் யௌவன பருவத்தை அடையும் போதே பெற்றோர் மிகவும் கடினமான சவாலை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. பெற்றோருக்குரிய தேர்ச்சிகளும் பிள்ளைகளுடனான நெருக்கமும் இச் சவாலை இலகுவாக கடக்க உதவிடும். பிள்ளைகளை விளங்கிக் கொள்ளுதல், அவர்களின் நல்ல குணங்களை மெச்சுதல், அவர்கள் கூறுவதை ஆர்வத்துடன் கேட்டல், அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளித்து அவர்களுடன் கலந்துரையாடுதல், திறந்த மனத்துடன் செயற்படுதல், பிள்ளைகளுடன் சந்தோசமாக இருப்பதற்கான நேரம் ஒதுக்குதல் போன்ற இயல்புகளை நல்ல பெற்றோர்களாக இருக்க விரும்புபவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மற்றைய பிள்ளைகளுடன் ஒப்பிட்டு பார்ப்பதையோ அல்லது கதைப்பதையோ தவிர்த்தல் வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளைகளின் தனித்துவத்தையும் திறமைகளையும் ஏற்று விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களின் எண்ணங்களும் கோணங்களும் வேறுபட்டாலும் அவற்றிற்கும் மதிப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளினதும் திறமையானது அவர்களின் பரம்பரையாலும் அவர்கள் வாழும் சூழலாலும் அவர்கள் பெறும் அனுபவங்களாலும் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை நாம் உணரவேண்டும். பிள்ளைகள் தினமும் புதியனவற்றைக் கற்றுக்கொள்வதுடன் மற்றையோருடனும் நல்ல உறவு முறையை பேணுவதற்கு முற்படுவார்கள்.

இவற்றிற்கான சந்தர்ப்பங்களை நாங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எங்கள் பிள்ளைகளை நாம் மிகவும் நேசிப்போம். அந்த நேசிப்பை அவர்களிடத்தில் மறைக்காது, அவர்கள் அதை உணரக்கூடிய வகையில் அதனை காண்பிக்க வேண்டும். பிள்ளைகளை நாங்கள் மிகவும் விரும்புவதை அடிக்கடி கூறவேண்டும். அத்துடன் அவர்களுடனான நெருக்கத்தையும் வெளிக்காட்ட வேண்டும். குறிப்பாக வளரிளம் பருவத்தில் அவர்களுடனான நெருக்கத்தையும் திறந்த தொடர்பாடலையும் கட்டாயமாக வெளிப்படுத்த வேண்டும். அன்பை உண்மையாக உணரும் வகையில் இரக்கமாகவும் விசுவாசமாகவும் நடத்தல் வேண்டும். அவர்கள் விடயங்களை கற்றுக்கொள்வதற்கும் சுயமாக முடிவுகளை எடுப்பதற்குமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும்.

எங்கள் வழிகாட்டுதலின் கீழ் தமக்கு தேவையான பொருட்களை தெரிவு செய்யும் முடிவுகளை எடுப்பதற்கும் படிப்படியாக அனுமதிக்க வேண்டும். அவர்களாகவே நல்ல பழக்கங்களை கற்றுக்கொள்ள பழக்க வேண்டும். பிள்ளைகளுக்கு தினமும் தம் பெற்றோரது முகத்தை பார்ப்பதற்கும் குரலை கேட்பதற்கும் மிகவும் ஆர்வமிருக்கும். வளர்ந்த பின்னரும் அவர்கள் உங்கள் அன்பையும் அவருடன் செலவிடும் நேரத்தையுமே விரும்புவர். எவ்வளவு வேலைகள் எமக்கு இருந்தாலும் நாங்கள் யார்ராக இருந்தாலும் எங்கள் பிள்ளைகளுக்கு நாம்தான் பெற்றோர். எங்களுடன் தான் அவர்கள் மனம் திறந்து கதைக்க முடியும் என்பதால் தினமும் சிறிது நேரத்தையேனும் அவர்களுடன் சேர்ந்து கழிப்பதற்கு ஏற்ற வகையில் எம் நிகழ்ச்சி நிரலை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். இதை வேறு பொருட்களாலோ பணத்தாலோ ஈடுசெய்ய முடியாது. அது அன்பை காட்டுவதற்கான வழியுமல்ல. இவ்வாறு கொடுக்கும் போது அது தவறான வழியிலும் பயன்படுத்தப்படலாம் என்பதுடன் எவ்வித முயற்சியும் செய்யாமலே எதையும் அடைந்திடலாம் எனும் பிழையான எண்ணத்தையும் அவர்களிடம் உருவாக்கிடலாம். மற்றும் கொடுக்கப்பட்ட பணம் எவ் வாறு பயன்படுத்தப்படுகிறது என்றும் பெற்றோர் அறிந்திருத்தல் வேண்டும். இதை அவர்களுடன் கலந்து கதைத்து அறிந்து கொள்ள முடியும். நல்ல வழியில் ஆக்க பூர்வமாக செலவழிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பிழையான வழியில் செலவு செய்யப்பட்டிருந்தால் அதை அன்புடன் சுட்டிக் காட்டி ஆரோக்கியமான முறைக்கு வழிகாட்டிட வேண்டும். இங்கு அன்பைப்போல் எதுவும் உதவிடாது.

சில சமயம் நாங்களும் பிள்ளைகள் விடயத்தில் பிழைகள் விடலாம். அதற்காக நாங்கள் நல்ல பெற்றோராக நடக்கவில்லை என மனம் பதற வேண்டாம். பிள்ளைகளையும் பயப்படுத்த வேண்டாம். நடந்த தவறுகளிலிருந்து படிப்பினைகளை கற்றுக்கொண்டு எம்மை திருத்திக் கொள்ளலாம். அத் தவறினால் அவர்களின் நலனில் ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்குமாயின் அவர்களிடம் மன்னிப்பு கேட்பதற்கும் தயங்க வேண்டாம். இது எங்கள் மீதுள்ள மதிப்பை அதிகரிப்பதுடன் அவர்களும் தப்பு செய்யும் போது உங்களிடம் மன்னிப்பு கேட்கும் பக்குவத்தை அவர்களிடமும் ஏற்படுத்தும்.

தம்முடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் நம்பிக்கைக்கும் தொடர்ச்சியான ஒரு பாதுகாவலர் அவர்களுக்கு தேவை. அதை நாங்கள் எப்போதும் அவர்களுக்கு வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும். இது பிள்ளைகள் எதிர்காலத்தில் மற்றவர்களுடன் நல்ல உறவு முறையை பேணுவதற்கு உதவுகிறது. சம வயதினருடன் சேர்ந்து விளையாடும் போது வெட்கம் அகன்று விட்டுக்கொடுத்து மற்றவர்களுடன் பழகும் தன்மைக்கும். உதவிடும். அடுத்து அவர்களின் நண்பர்களை நாங்கள் தெரிந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்களின் நண்பர்களை வீட்டிற்கு கூட்டி வருவதையும் ஊக்குவித்தல் வேண்டும். இது அவர்களின் நண்பர் வட்டத்தின் தன்மையை நாம் அறிந்து கொள்ள உதவிடும்.

உடற்பயிற்சியிலும் வெளி விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதை ஊக்குவித்தல் நன்று. இது மன அமைதியையும் சந்தோசத்தையும் அதிகரிக்கும். சாப்பிடும் நேரத்தை சந்தோசமான குடும்ப இணைப்பு நேரமாக்கி முழுக் குடும்பமும் ஒன்றாக சாப்பிடும் போது அவர்கள் தடையின்றி மனதிலுள்ளதை சுதந்திரமாக கதைக்கக் கூடியதாக இருக்கும். அல்லாது விடின் அவர்கள் உணர்வுபூர்வமான விடயங்களை நண்பர்களுடன் கதைத்து பிழையான கருத்துக்களையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்களால் அடைய முடியாத எதிர்பார்ப்புக்களை உங்கள் பிள்ளைகளின் மீது சுமத்தக் கூடாது. இது அவர்களுக்கு தேவையற்ற அழுத்தத்தையும் உளநெருக்கீட்டையும் ஏற்படுத்தும். பிள்ளைகளை அடிப்பதோ ஏசுவதோ ஒழுங்கு முறையை கற்பிக்கும் முறையல்ல. இவை வன்முறை. கோபம் என்பவற்றை தூண்டும். அவர்களை ஏன் நல்லவரல்ல என நினைக்கின்றோம் என்பதை அவர்களுக்கு சொல்ல வேண்டும். ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குமுறைகளை பின்பற்றிட தூண்டிட வேண்டும். கூடாத பழக்கங்களை செய்யும் போது அப்பழக்கங்களை விமர்சிக்கலாம். ஆனால் பிள்ளையை விமர்சிப்பதை தவிர்த்தல் வேண்டும். கூடாத பழக்கத்தினை மாற்றுவதற்காக பொது இடத்தில் கடும் வார்த்தைகளால் சிறுமைப்படுத்தி திட்டாதீர்கள். இது நிரந்தர வடுவை ஏற்படுத்தி தன்மான பிரச்சினைகளை ஏற்படுத்திடலாம். இது எங்களுக்கும் அவர்களுக்குமான மனதளவான தூரத்தை அதிகரித்துவிடும்.


அவர்கள் மிகவும் கூர்மையானவர்கள். உத்தரவுகளால் அல்ல. உதாரணங்களால் மூலமே கற்கிறார்கள். பிரச்சினைகளுக்கு நாங்கள் முகம் கொடுக்கும் முறை. அணுகும் முறைகளை பார்த்தே அவர்களும் பிரச்சினைகளிலிருந்து மீளப்பழகுகின்றார்கள். நாங்களே எங்கள் பிள்ளைகளின் முன்மாதிரிகள் (roll model). பிள்ளைகளிடம் எதிர்பார்க்கும் பழக்கங்களுக்கு ஏற்ப நாங்களும் நடந்து கொள்ள வேண்டும்.

குடும்ப சூழலை வன்முறையற்ற, எதிர்வாதமற்ற, உதவும் மனப்பான்மையுள்ள, மதுபான, புகை நாற்ற மற்ற இடமாகவும் சந்தோசமும் அமைதியும் பொங்கும் இடமாகவும் மாற்றிவிடுவோம். பின்பு எங்கள் வீடே ஒரு பல்கலைக்கழகமாகி விடும்.

Dr. பொ. ஜெசிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இலங்கையில் இந்திய- அமெரிக்க ஆதிக்கப் போட்டியா?





உலக நாடுகளில் சுயநலமிக்க நாடுகளில் முதன்மை நாடு அமெரிக்கா. அடுத்து முதன்மை பெறுவது இந்தியா என்பது நம்மில் பலருக்கும் நன்கு தெரியும்.

இந்திய தேசம் அண்டை தேசம் என்பதுடன், இலங்கை தேசத்தின் தாய்த்தேசம் என்று சொன்னால் மிகைப்படுத்தலன்று.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பூர்வீக பந்தங்கள் நிறையவே உண்டு, மொழி, பண்பாடு, கலாச்சாரம், மதங்கள் என்று எடுத்து நோக்கின் அத்துணையும் இரு நாட்டையும் இணைக்கும் பாலங்கள் எனலாம்.

இந்தியாவில் ஏற்படுகின்ற அத்துணை மாற்றங்களும் இலங்கையிலும் காலா காலமாக ஏற்படுவது வழமை. பாக்குநீரிணை ஒன்றே இரு நாட்டையும் பிரித்து நிற்கின்றது. தவிர, வேறேதும் இங்கு தடையல்ல. அதனாலேயே இந்தியாவில் உள்ள தமிழ் உறவுகளை நாம் இன்றுவரை தொப்புல் கொடி உறவுகள் என்றழைக்கின்றோம்.

ஆக தாய் தேசம் என்று இன்று நாம் சொல்லும் இந்தியா அதாவது இந்திய மத்திய தேசம் இலங்கை விடையத்தில் அன்றிலிருந்து இன்றுவரை தனது சுயநல அரசியலையே நடத்தி வருகின்றது.

இலங்கை இந்தியாவின் தெற்குக் கரையில் தமிழ்நாட்டுக்கு கீழ் அமைந்துள்ளமையினால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அது மிகவும் பயனுள்ளதாகவே அமைந்துள்ளது.

ஐரோப்பியர்கள் முதலில் இந்தியாவை கைப்பற்றியிருந்தாலும், அவர்கள் இலங்கையையும் கைப்பற்றி தமது ஆளுகைக்குள்ளேயே வைத்திருந்தார்கள்.

இந்தியாவை கண்காணிப்பதற்கு ஏற்றவளமான இடம் இதுவென்பது ஐரோப்பியர்களுக்கு நன்கு தெரியும். அதன் பிரதிபலிப்பே இலங்கை மீதான தாக்கம்.

இந்திய நாடு தனது வெளிநாட்டுக் கொளகைகளில் இலங்கை மீதான அதனது கொள்கை என்பது மிகவும் தவறான ஒரு கண்ணோட்டத்தில் அமைந்திருப்பதை அண்மைக்காலமான செயற்பாடுகள் மூலமாக உணர முடிகின்றது.

எழுபதாம் ஆண்டு காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் எழுச்சியின் போது இலங்கையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் ஆசியாவின் மிகச்சிறிய நாடான இலங்கை மீது பரவத் தொடங்கியிருந்தது.

அதிலும் இலங்கையின் புத்தளத்தில் "வாய்ஸ ஆவ் அமெரிக்கா" என்கின்ற தொலைத் தொடர்பு கோபுரம் அமைத்து தெற்காசியாவை அமெரிக்கா தனது கண்காணிப்பில் வைத்திருந்தமையானது இந்தியாவிற்கு மிகப்பெரியதொரு சவாலாகவே இருந்தது.

இந்த நெருக்கடி நிலையினை 1950 ஆண்டு காலப்பகுதியோடு வரலாற்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவார்கள். 1950 களில் பிரித்தானியர்களது திருகோணமலை கடற்படைத் தளம் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக மட்டுமன்றி இலங்கைக்கும் அது மிகப்பெரிய சவாலாகதான் இருந்தது. எனினும் அது 1950களின் இறுதிப்பகுதியில் வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

இந்நிலையில் எழுபதுகளில் விடுதலைப் போராட்ட இயக்கங்கள் எழுச்சி பெறவும், புலிகளின் வளர்ச்சியும் அமெரிக்காவிற்கு தலையிடியாகவே அது மெல்ல மாறத்தொடங்கியது.

மறுபுறத்தில் தனது தேசிய பாதுகாப்பிற்கு இலங்கை மீது அமெரிக்காவின் நகர்வை பிடுங்க இந்திய அரசாங்கம் திட்டம் வகுத்துக் கொண்டது. தமிழ்ப் போராளிக் குழுக்களை அழைத்து இந்தியாவில் பயிற்சி வழங்குவதற்கு இந்திராகாந்தி அம்மையார் இணக்கம் தெரிவித்ததோடு அதற்கு ஏற்றால் போல போராட்டாக் குழுக்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டன.

ஆனால் தவிர்க்க முடியாதவொரு சவாலை இந்திய மத்திய அரசாங்கம் எதிர்கொண்டது. தமது சுயநலத்திற்காக போராளிக் குழுக்களை ஆதரித்த இந்தியாவிற்கு புலிகளும், பிரபாகரனும் தலையிடியாக மாறியதே அது.

இலங்கையில் தோன்றிய 32 இற்கும் அதிகமான போராட்ட குழுக்களில் விடுதலைப் புலிகள் மட்டும் இந்தியாவின் சொற்களுக்குள் கட்டுப்பட மறுத்தனர். விடுதலைப் புலிகள் தனி ஈழத்தில் அக்கறையாக இருந்ததோடு, அதில் உறுதியாகவும் இருந்தனர்.

இதன் அடுத்த நகர்வாகவே விடுதலைப் புலிகளை தேடியழிக்கும் நகர்வை இந்தியா கையிலெடுத்தது. போராளிக் குழுக்களுக்கிடையில் பிரச்சினையை மூட்டிவிட்டு அதனூடாக பிரபாகரனையும், விடுதலைப் புலிகளையும் அன்றே அழிக்க முயன்றனர். ஆனால் இது பிரபாகரனை ஏனோ அசுர வளர்ச்சியடைய வைத்ததை இந்தியா சற்றும் அன்று எதிர்பார்த்திருக்கவில்லை.

எனினும் இந்தியாவின் இந்நகர்வுகள் தவிடுபொடியாக இந்திரா காந்திக்குப் பின்னர் ராஜீவ்காந்தி அரசியல் களத்திற்கு புகுந்து அவரும் இலங்கை மீதான இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கையை தவறாகவே பின்பற்றியிருந்தார்.

முதலில் புலிகளுக்கு சார்பாகவும், இலங்கை தமிழ் இனத்திற்கு காவலனாகவும் செயற்படுவதாக காட்டிக் கொண்டவர், பினனர் இலங்கை அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்தார். அமைதிப்படையை அனுப்பினார்.

ஆனால் அந்த 13 ஆவது திருத்த ஒப்பந்தத்தை கிடப்பில் போடவேண்டிய தேவை ஜே.ஆர்க்கு ஏற்படவும், இந்திய இராணுவத்தை வெளியேற்றவும் காரணம் தேவைப்பட, தமிழர்களை காக்க வந்ததாக சொல்லப்பட்ட இந்திய அமைதிப்படையை அவர் தமிழர்களுக்கு எதிராக திருப்பிவிட்டார்.

சிங்கள இராணுவத்திடம் வேண்டிக் கொண்டது போதாது என்று அண்டை நாட்டு இராணுவத்திடமும் ஈழத்தமிழினம் நொந்து கெட்டுப்போனது.

க்டைசியாக ராஜீவ்காந்தியின் இந்தியப் படை பிரபாகரனிடமும், புலிகளிடமும் வாங்கிக்கட்டிக்கொண்டு திரும்ப, ஜே.ஆரின் இலக்கும் வெற்றி பெற்றது. அதிலும் இந்தியா தோற்றுப்போயிற்று.

தனது தேசிய பாதுகாப்பு என்பதுதான் குறிக்கோள் என்பதில் குறியாக இருந்த இந்தியா விடுதலைப் புலிகளை அழித்தாக வேண்டுமென்பதில் கங்கணம் கட்டிக் கொண்டு நின்றது. அதற்கான வேலைகள் சரியாக நடக்க நோர்வே தலைமையிலான சமாதான ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட சம நேரத்தில் இலங்கை இராணுவத்தின் படைப்பலமும் சகல வழிகளிலும் பெருக்கப்பட்டது.

ஆனால் இந்தியாவில் ஆட்சி மாற்றம் பெற்றதும் சோனியா காந்தி பிரபாகரனை அழிக்கும் செயற்றிட்டத்தில் தீவிரமாகவே இருந்தார். அது மகிந்தவிற்கு வாய்ப்பாகவும் இருந்தது.

விடுதலைப் புலிகளை அழித்தால், அவர்களை அழிக்க சகல வழிகளிலும் மகிந்த தரப்பிற்கு உதவினால் தம் சொல்லை இலங்கை தட்டாது என்பதே சோனியா, மன்மோகன் அரசின் திடமான நம்பிக்கை. ஆனால் சற்றும் எதிர்பாராத விதமாக மகிந்தர் சீனாவின் பக்கம் சாய்ந்தார்.

இது இந்தியாவிற்கு மட்டுமல்ல, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் மிகப்பெரிய தலையிடியாக மாறிப்போயிருந்தது. ஏற்கனவே பாகிஸ்தானை தனது கைக்குள் கொண்டுள்ள சீனா, இப்பொழுது இலங்கையையும், தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால் வல்லரசான அமெரிக்காவிற்கும், வல்லரசுகனவோடு நடைபோடும் இந்தியாவிற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தல் காத்திருந்தது.

மகிந்தவோடு நிகழ்ந்த பல சுற்றுப் பேச்சுக்கள் சாதகமாக காணப்பட்டாலும், அவர் பேசுவது ஒன்றும் செயற்பாடு இன்னொன்றுமாக இருக்க, இந்தியாவும், அமெரிக்காவும் கரம் கோர்த்தது. அதன் தாக்கமே யுத்த நாயகனின் வீழ்ச்சி.

இந்நிலையில் புலிகளை அழித்து வெற்றி கொண்டதாக இந்தியா பெருமிதம் கொண்டாலும் அது தனது தலையில் தானே மண்ணை அள்ளிப்போட்டது என்பதை உணர்ந்தது.

இப்பொழுது சீனாவை அகற்ற அமெரிக்காவோடு கரம் கோர்த்து வீழ்த்தியாயிற்று. ஆனால் சீனாவின் இடத்தில் இப்பொழுது அமெரிக்கா!

1970 ஆண்டு காலப்பகுதியை மீண்டும் உணர முடிகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே ரணில் அமெரிக்காவில் தங்கியிருந்து ஒரு மாதகால அரசியல் பயிற்சியை முடித்துவிட்டு வந்திருக்கின்றார். பின்னர், ஆட்சி மாற்றம், இப்பொழுது இந்தியாவிற்கு கலக்கம்.

ஆனால் திரும்பவும் தனது வரலாற்று தவறை இந்தியா கையிலெடுத்திருக்கின்றது போல உணர முடிகின்றது. அண்மைய நாட்களாக மகிந்த ராஜபக்சவின் வெற்றிக்கு இந்தியாவின் புலனாய்வுப்பிரிவான றோ வேலை செய்வதாகவே செய்திகள் உலா வருகின்றன.

அதை மெய்ப்பிக்கும் வகையில், தமிழகத்தின் பல இடங்களிலும், விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகள் சைனட், குப்பிகளோடு கைது செய்யப்பட்டதாக அறிவித்ததோடு, பிரபாகரனோடு இருந்த முக்கிய நபரும் கைது செய்யப்பட்டார் என்றும் இந்திய பாதுகாப்புத் துறை சொல்லியிருக்கின்றது.

வடக்கில் மக்கள் விடுதலைப் புலிகளை தேடுகின்றார்கள் என்று கூறிப் பிரச்சாரம் செய்த மகிந்தவிற்கு இதுவொரு மிகப்பெரிய வாய்ப்பாக இருக்கவே செய்கின்றன.

இந்நிலையில் இவ்வாரம் வெளிவந்த மகிந்த ராஜபக்ச அணியினரின் தேர்தல் விஞ்ஞாபனமும் ஒரு உண்மையை சுட்டி நிற்கின்றது. அதாவது ஆசிய நாடுகளுக்கே இலங்கையில் முன்னுரிமையென்று.

அதாவது அமெரிக்கா மேற்குலம் பற்றி அவர் வாய் திறக்கவில்லை. எனில் அவர் இந்தியாவிற்கே தனது ஆதரவு என்று சொல்லாமல் சொல்லியிருக்கின்றார். அப்படியென்றால் இந்தியா மீண்டும் மகிந்தரை கொண்டுவர முழுமூச்சோடு செயற்படுகின்றதா?

அப்படியெனில் அது மீண்டுமொரு முறை வரலாற்று தவறை செய்யவே ஆரம்பித்திருக்கின்றது. தனது பிராந்திய பாதுகாப்பிற்காக அது தவறுமேல் தவறு செய்கின்றது. இல்லாத புலிகளை உருவாக்கவும் முயற்சிக்கின்றது.

அமெரிக்க இந்திய ஆதிக்கப்போட்டி இலங்கையில் மீண்டும் உச்சம் பெற்றுள்ளமையானது தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கு மிகப்பெரிய கேடாகவே கருதவேண்டியிருக்கின்றது.

இதை தமிழர் அறிவுஜீவிகள், சிவில் சமூகத்தினர், புலம்பெயர் தமிழர்கள், மற்றும் அரசியல் தலைமைகள் எவ்விதம் கையாளப்போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். பொதுத் தேர்தல் அதற்கான பல விடைகளை, கதவுகளை திறந்து விடும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல் : பரமசிவன் கழுத்தில்? இருந்து பாம்பு
படம் : சூர்யகாந்தி
இசை : M.S. விஸ்வநாதன்
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன்




பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா (2)
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது
அதில் அர்த்தமும் உள்ளது

உயர்ந்த இடத்தில் இருக்கும் பொது உலகம்
உன்னை மதிக்கும்
உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழலும் கூட மிதிக்கும்
உயர்ந்த இடத்தில் இருக்கும் பொது உலகம்
உன்னை மதிக்கும்
உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழலும் கூட மிதிக்கும்
மதியாதார் தலைவாசல் மிதிக்காதே என்று
மானமுள்ள மனிதருக்கு ஔவை சொன்னது
அது ஔவை சொன்னது அதில் அர்த்தம் உள்ளது

பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது
அதில் அர்த்தமும் உள்ளது

வண்டி ஓட சக்கரங்கள் இரண்டு மட்டும்
வேண்டும்
அந்த இரண்டில் ஒன்று சிறியதென்றால் எந்த
வண்டி ஓடும்
உனைப்போலே அளவோடு உறவாட வேண்டும்
உயர்ந்தோரும் தாழ்ந்தோறும் உறவு கொள்வது
அது சிறுமை என்பது அதில் அர்த்தம் உள்ளது

பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது
அதில் அர்த்தமும் உள்ளது
நீயும் நானும் சேர்ந்திருந்தோம் நிலவும்
வானும் போலே
நான்நிலவுபோலதேய்ந்து வந்தேன்நீவளர்ந்ததாலே
நீயும் நானும் சேர்ந்திருந்தோம் நிலவும்
வானும் போலே
நான் நிலவு போல தேய்ந்து வந்தேன் நீ
வளர்ந்ததாலே
என்னுள்ளம் எனைப்பாந்த்து கேலி செய்யும் போது
இல்லாதான் இல்வாழ்வில் நிம்மதி ஏது
இது கணவன் சொன்னது இதில் அர்த்தம் உள்ளது

பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா
யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது
அதில் அர்த்தமும் உள்ளது

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
**விமலா குடும்பம், சதா, விஜி, கிருபா, தபா, காசப்பன், ரஜனி, அக்ராஜனா, தீபா, கலா, குகன், ஆர். ராஜேஸ்வரி, சந்திரமோகன், பரதம்- கொக்குவில்**

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## தனிகை
## குறும்பட விமர்சனம்




மிக எளிமையான திரைக்கதையுடன் சமீபத்தில் வந்த குறும்திரைப்படம் தனிகை. இணையச் செய்தித் தளங்கள் வாசகர்களின் பார்வை எண்ணிக்கையை அதிகரிக்கவைக்கும் முகமாகத் தமது தளங்களில் பெண்கள் தொடர்பாகத் தவறான செய்திகளைச் சித்திரித்துத் திரிபடையவைக்கிறது.

இவ்வாறான செய்திகள் இணையப் பார்வையாளர்களைக் கவர்ந்திழுத்துப் பரவசமாகப் பார்வையிடவைக்கின்றது. இவ்வாறான அபத்த வினோத செய்திகள் பாரியளவிலான பாதிப்பை சமூகமத்தியில் பெருவாரியாக ஏற்படுத்துகின்றவை தெரிந்தவையே.

இவ்வாறான செய்திகள் எப்படி உருவாகப்படுகின்றன? சம்பவங்கள் எப்படித் தமது கற்பனைக்கு ஏற்ப இணையச் செய்தித் தளங்களினால் விசித்திரமாக மாற்றப்படுகிறன என்பதனை மிக எளிமையான திரைக்கதியில் சில சம்பவங்களின் கோர்ப்புக்களின் வெளிப்பாடுகள் ஊடாக இயக்குநர் சசீகரன் தனது தனிகை குறும்படம் மூலம் விபரித்துத் தந்துள்ளார்.

ஒருபெண் தனது நண்பிவீட்டுக்கு முதன்முறையாகச் செல்கின்றாள், புதிய இடம், ஒரு கட்டத்தில் வழி தெரியாமல் தவிக்க நண்பியின் சகோதரன் அழைத்துச் செல்கின்றார்.

நண்பியின் சகோதரன் சிநேகமாக உரை யாடி அழைத்துச்செல்லும் காட்சியினைச் செல்லிடை தொலைபேசியில் படம்பிடிக்கும் நபர் யாழில் விபச்சாரம் என்ற ரீதியில் இணையத்தில் புகைப்படங்களுடன் பதிவேற்றம் செய்துவிடுகின்றார். இதனால் பெண்ணுக்கு ஏற்படும் பாதிப்புகளை அதிகம் மிகைப்படுத்தாமல் காட்சிப்படிமமாக்க முயற்சித்துள்ளார் இயக்குநர்.

தோராயமாக ஆறு நிமிடத்தில் ஒளிப்படம் பிடிக்கப்பட்டு வேகமாகக் கடந்துவிடும் சிறிய கதையமைப்பைக்கொண்ட குறும்படமாகவிருந்தாலும் திரைக்கதையை அமைத்த உத்தி புத்திசாலித்தனமானது. பின்னோக்கி நகரும் கதையமைப்பு பரபரப்பை இன்னும் பரவசமாக அதிகரிக்க வைக்கின்றது. முதல் காட்சியில் இருந்து இறுதிக்காட்சிவரை பரபரப்பை வற்றாமல் தக்கவைத்திருந்தாலும் வடிவமைப்பு சார்ந்த தொழில்நுட்ப விடயங்கள் கவனம் இல்லாமல் பரிதவிக்கின்றது. முக்கியமாக ஒளிப்பதிவில் கமரா நடுங்குவதினை குறும்படம் முழுவதும் அபத்தமாக உணர முடிகின்றது. தொலைபேசி அழைப்புக்களில் உரையாடும் நபர்களின் உரையாடல்களைப் போதிய ஒளிச்செறிவுகளுடன் தெளிவாகக் கேட்க முடியவில்லை. ஒலியமைப்பு இன்னும் மேம்படுத்த வேண்டிய தேவையில் உள்ளது.

நடிப்பு ரீதியில் யதார்த்தமான நடிப்புப் பலமாக இருந்தாலும் சைக்கிள் கடையில் உள்ளவர்களின் நடிப்பு மிகமோசமான உடல்மொழியுடன் கூடிய மிகச் செயற்கையான நடிப்பாகவிருந்து முழுக்காட்சியின் வீரியத்துக்கு அபத்தத்துடன் கூடிய அயர்ச்சியை மிதமிச்சி உருவாக்குகின்றது. ஏனைய மற்றைய பாத்திரங்களில் நடித்துள்ளவர்கள் யதார்த்தத்துடன் முடிந்தளவு தம்மைப் பொருத்தி இணைத்துள்ளனர். முக்கியமாக நண்பியின் சகோதரனாக நடித்துள்ளவரின் இயல்பான சொற்பிரயோகம் கலந்த நடிப்பு. எடிட்டிங்கில் இன்னும் கொஞ்சம் கூடிய கவனத்துடன் சிரத்தையாக இருந்திருக்கலாம்.

வசன உரையாடல்கள் சில இடங்களில் யாழ் வட்டார வழக்கை சிறிதளவு விலத்தியிருந்தாலும் உறுத்தவில்லை. மிக முக்கியமான செய்தியினை அதிக செயற்கைத்தனங்கள் இன்றி இயல்பான குறைந்தநேர குறும்படத்தில் இயக்குநர் புகுத்தி கையாண்டுள்ளது வரவேற்கத்தக்கது.

சசீகரனின் குறும்படங்களை உன்னிப்பாகப் பார்க்கும்போது குறும்படத்துக்கான இலக்கணத்தைக் கச்சிதமாக உள் வேண்டி சுவாரசியமான திரைக்கதையுடன் குறும்படங்களை உருவாக்கும் இயல்பினை கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது.

தொழில்நுட்ப விடயங்களல் இன்னும ஆழமான கவனத்தினைச் செலுத்துவது இனி வரும் படைப்புகளுக்கு ஆரோக்கியமான ஒன்றாக இருக்கும்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# ஈழத்துக் கவிதைகள்

## சொந்தம் பற்றிய கவிதை

இன்னா செய்தவர்க்கு ஒருபொழுதும்
இறப் பெண்ணா என் உம்மா!
கண்ணீர்க் கனவெடுத்து
ஒரு முலைப்பாலை ஓரவஞ்சனையறியா நீ
ஸ்நேகிதனுக்குமீந்தாயும்மா!
பாடுபட்ட நிலவிடுக்கில்
பனையோலைப் பாய்விரித்து
வெறுந்தரைமண்ணில் முந்தானையுதறி
ஒரு நிம்மதிச் சயனம் செய்தது
நேற்றுப்போலுள்ளது.
வணக்கத்துக்குரியது உன்பூமி,உன்னுரிமை
உன்னது எல்லாம் உனக்கானதுதானும்மா.
ஒரே பகலில் ஒரே இரவில் எப்படியும்மா
உதறிடமுடியும்?
நீர் தெளித்து பசுமுலைபிதுக்கி
கறந்தபால் நுரை தெளிய முன்னம்
ஊரறுந்து போனாயே தாயே!
வழமை மாறாக் காதல் கொண்ட
ஒருதாய் மக்கள்.
ஒன்றாய் உண்டு ஒன்றாய் உறங்கி
ஒன்றாய் ஒருதேசம் மீட்க ஆனோமே!
ஆனாலும் உம்மா
உயிர்த்தெழுந்த போதே தானோ
சிறகு பறித்து ஏகினோம்
பத்துவருடங்கள் அந்நியரானோம்.
கனவென்றறியா பத்து வருடங்கள்.
“மனிசருடைய தப்பிதங்களை நீங்கள்
அவர்களுக்கு மன்னித்தால் உங்கள்
பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்”
ஓங்கியுயர்ந்த உன் பனைமரம்
ஓரவழிந்த உன் கிராமம்
அந்தராட்டண இரண்டடுக்கு உன்வீடு
எல்லாம் இழந்தாயினும்
சாபமிட்டறியா உன் சாந்தம் மேலானதும்மா!
“மண்ணிலுள்ளவர்மீது இரக்கங்காட்டுங்கள்
விண்ணிலுள்ளவன் உம்மீது இரக்கங்காட்டுவான்”
உம்மா
உன் “கபுறு” கூட உன்மண்ணில்லையென்றிடினும்
இப்போதைக்குன் சாபமிடா உன்
“சபுறு”பெரிதானதும்மா.
ஒரு முறைதானும்மா ஒரு சுவர் வீழ்ந்தது.
சுவருடைக்க ஒரு மலக்கேனும் வரவில்லை ஏன்?
மக்கத்துக் கதையாய் ஏவிவிரட்டியபோதும்
மற்றொரு மதீனாவாய்
கடல்சூழ் புத்தளத்துக் கரையோரம்
ஒதுங்கி ஓய்ந்தோம்.
ஓலை,ஓட்டைகள் எல்லாம் பழகி
வழுக்கி,வாழ்விடம் என்றெதனைச் சொல்லி ஆற?
பத்துஃச்சம் பழமுண்டு பகல் முழுக்கப்
போர் செய்த நபியினரோடெம்மை
ஒப்பிட்டுக் கூப்பிடவா முடியும்?
தோல் சுருங்கி மனம் வெந்து
எப்போதெம்மை அழைப்ப ரென்று
அன்னக்காவடி சுமந்து சுமந்து
மீண்டும் மீண்டும் வருவோர் வந்தவழிபோவோர்
பலர் பலர்
“பேராசை கொள்வதிலிருந்து உங்களைப்
பாதுகாத்திடுங்கள் ஏனெனில் பேராசை உங்களுக்கு
முன்தோன்றிய மக்களை நாசமாக்கியிருக்கிறது”
முடிவிலியாய் நீளுமெம் பத்து வருடம்
எத்தனை இன்னும்?

**இளைய அப்துல்லாஹ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்யாவால் ரஜினியிடம் வசமாக மாட்டிய சந்தானம்



ஆர்யா, சந்தானம், தமன்னா நடித்துள்ள படம் 'வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க'. ராஜேஷ் இயக்கும் இப்படத்தில் [illegible]மான் இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஆர்யா, சந்தானம், இயக்குநர் ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதில் சந்தானம் பேசும் போது, "ராஜேஷ் முதலில் என்னிடம் படத்தின் தலைப்பு 'வி.எஸ்.ஓ.பி' என்று சொன்னார். சொன்னவுடனே இந்த படம் வெற்றி அடையும் என்று சொன்னேன்.

நானும் ஆர்யாவும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். நான் சும்மா என்னுடைய ரசிகைகளிடம் தென்னிந்தியா காமெடி சுப்பர் ஸ்டார் என்று கூறினேன்.

அதை கேட்ட ஆர்யா, சேட்டை படத்தில் காமெடி சுப்பர் ஸ்டார் என்று பட்டம் கொடுத்துவிட்டார். அதன்பின்னர் ரஜினியுடன் நான் நடிக்கும் போது, அவர் என்னிடம், 'என்ன காமெடி சுப்பர் ஸ்டார் பட்டம் போட்டுட்ட?' என்று கேட்டார்.

நான் உடனே, 'சார் நான் காரணம் இல்ல, ஆர்யாதான் காரணம்' என்று கூறினேன். அப்போது ஆர்யா-சந்தானம் கூட்டணி நல்லா இருக்கு என்று அவர் பாராட்டினார். இந்த படம் நல்லா இருக்கும். எல்லோருக்கும் பிடிக்கும்.

## கார்த்தியை அடுத்து விஷாலை தேர்வு செய்த இயக்குநர்

நடிகர் கார்த்தியை வைத்து கொம்பன் என்ற வெற்றி படத்தை கொடுத்த முத்தையா தற்போது விஷாலை வைத்து ஒரு புதிய படம் இயக்க இருக்கிறார். மருது என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை விநியோகஸ்தர் மதுரை அன்பு கோபுரம் பிலிம்ஸ் என்ற பேனரில் தயாரிக்கிறார்.

இப்படத்திற்கான படப்பிடிப்பு அக்டோபர் மாதம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுசீந்திரன் இயக்கத்தில் விஷால் நடித்திருக்கும் பாயும் புலி படம் செப்டம்பர் 4-ம் திகதி வெளியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கண்ணீர் விட்ட சிவகார்த்திகேயன்



சிவகார்த்திகேயன் வளர்ந்து வரும் நடிகர்களில் முன்னணியில் இருப்பவர். சமீபத்தில் காலமான அப்துல் கலாம் அவர்களின் இறுதி அஞ்சலியில் இவர் கலந்து கொண்டார்.

தமிழ் சினிமா முன்னணி நடிகர்கள் பலரும் வராத நிலையில் சிவகார்த்திகேயன் சென்றது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதில் சிவகார்த்திகேயன் பேசுகையில் மிகவும் மனமுடைந்து கண்ணீருடன் பேசினார்.

ஒரு சில நடிகர்கள் தன் வருத்தங்களை கூட பதியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜீவாவுக்கும் ராஜேசுக்கும் பிரச்சினையா?



ஜீவா திரைப்பயணத்தில் மறக்க முடியாத படம் சிவா மனசுல சக்தி. இப்படத்தை ராஜேஸ் இயக்கியிருந்தார், இப்படத்தை தொடர்ந்து இவர் இயக்கிய பாஸ் என்கின்ற பாஸ்கரன், ஒரு கல் ஒரு கண்ணாடி ஆகிய படங்கள் சுப்பர் ஹிட் ஆனது.

இதனால் கார்த்தியுடன் அழகுராஜா படம் இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. இப்படம் முடிந்தவுடன் மீண்டும் ஜீவாவுடன் ஒரு படம் பணிபுரிவதாக இருந்தார்.

ஆனால், அந்த படம் தள்ளிப் போனது, இதற்கு பலரும் அப்படத்தின் தோல்வி அறிந்து தான் ஜீவா நடிக்கவில்லை என்று கூறினர். உண்மை தகவல் என்னவென்றால், யான்படம் முடிக்கும் வரை வேறு எந்த படங்களிலும் கமிட் ஆக கூடாது என்பதால் தான் ஜீவா நடிக்கவில்லையாம்.

மற்றப்படி இவர்களுக்குள் வேறு எந்த பிரச்சினையும் இல்லை, எல்லாம் வதந்தி மட்டும் தானாம்.

# வளரும் இளைஞர்களுக்கு கைகொடுக்கும் சூர்யா



சூர்யா பல நலத்திட்ட உதவிகளை செய்து வருவது அனைவரும் அறிந்ததே. ஆனால், சினிமாவில் வளரும் இளைஞர்களுக்கும் தன்னால் முடிந்த உதவியை தற்போது செய்துள்ளார்.

இந்நிலையில் அதர்வா நடித்து விரைவில் வெளிவரவிருக்கும் படம் சண்டிவீரன். அதர்வாவின் மார்க்கெட் தற்போது கொஞ்சம் டல்.

இதனால், இப்படத்தில் பாடலை சூர்யா தன் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இது படத்திற்கு ஒரு நல்ல விளம்பரத்தை ஏற்படுத்தி தரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

# தன் பெயரைக் காப்பாற்றவா தனுஷ் இப்படி செய்தார்?



தனுஷ், உயர்திரு அப்துல் கலாம் அவர்கள் இறந்த நாளன்று தன் பிறந்தநாளை கொண்டாடியது அனைவரும் அறிந்ததே. இதனால் சமூகவலைத்தளங்களில்இவரைபற்றி தவறான தகவல்கள் வெளிவந்தது.

உடனே பரவை முனியம்மாவிற்கு தனுஷ் ரூ. 5 லட்சம் பண உதவி செய்ததாக ஒரு செய்தி உலா வர அனைவரும் தனுஷை புகழ ஆரம்பித்து விட்டனர்.

தனுஷ் தன்பெயர் கெடாமல் இருக்கத்தான் செய்தார் என மீண்டும் ஒரு கும்பல் திட்ட ஆரம்பித்து விட்டது. நாட்டில் நல்லதுக்கே காலம் இல்லை போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனல்-4 இன் சந்தேகம் தமிழருக்கும் உள்ளது

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளிவருவதற்கு முன்னர் போரில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என்று இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கையில்லை என்பதை தெட்டத்தெளிவாக தமிழர் தரப்பு எடுத்துக்கூறியுள்ள நிலையில் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் உள்ளக விசாரணையே முன்னெடுக்கப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில் உள்ளக விசாரணையையும் முன்னெடுப்பதில் காலதாமதம் ஏற்படும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் அரசின் இந்த அறிவிப்பு அமைந்துள்ளது.

உள்ளகப் பொறி முறை என்பது இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணைகள் போன்று அமையும் என்பதால் அதனைத் தமிழர் தரப்பு முற்றாக நிராகரித்த அதேவேளை சர்வதேச ரீதியில் பக்கச்சார்பற்ற விசாரணையே முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினையும் வலுவாக முன்வைத்திருந்த நிலையில் உள்ளக விசாரணைதான் முன்னெடுக்கப்படும் என்பதில் அரசு உறுதியாகவுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற்போனவர்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் நடவடிக்கையினால் தமிழருக்கு ஏற்பட்ட அதிருப்தியே உள்ளக விசாரணையை நிராகரிக்கவும் குற்றம் செய்தவர்களே விசாரணையை முன்னெடுப்பதாகயிருந்தால் நீதியை நிலைநாட்டுவதில் நம்பிக்கை கொள்ள முடியாது என்பதனால் உள்ளக விசாரணையை நிராகரிக்க வேண்டி ஏற்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டதற்கான போதிய ஆதாரங்களை சனல் - 4 போன்ற சர்வதேச ஊடகங்கள் வெளிப்படுத்திய அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அரசிற்கு எதிராக பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னரும் கூட உள்ளகப் பொறிமுறை விசாரணையில் மாற்றம் ஏற்படுத்த அரசு விரும்பவில்லை.

இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் ஊடாக உண்மையான நீதி கிடைக்குமா? என்ற கேள்வியையும் சந்தேகத்தையும் பிரித்தானியாவின் சனல் - 4 ஊடகம் வெளிப்படுத்தியுள்ளது.





இலங்கையில் இடம்பெற்ற போரின் போது பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை ஐ.நா. ஆணையாளரே முன்வைத்திருந்த நிலையில் சனல் - 4 ஊடகம் இந்தச் சந்தேகத்தை வெளியிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தையும் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு போதுமானவற்றையும் ஐக்கிய நாடுகள் சபை செய்யத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு பலமாக [illegible]கப்பட்டுள்ள நிலையில் [illegible] பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா. நீதி வழங்கும் என்ற எதிர்பார்ப்பிலும் சந்தேகம் எழுந்துள்ளது தமிழரை வெகுவாக பாதித்துள்ளது.

மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு நடவடிக்கைகள், காணாமற்போனவர்களை மீட்டுக் கொடுத்தல், சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நிரந்தர அரசியல் தீர்வை பெற்று தமிழர்களும் சுதந்திரமாக சிங்களவர்களுக்கு இணையான அதிகாரங்களுடன் வாழ வேண்டும் என்பதையும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலும் உள்ள நிலையில் ஏமாற்றங்கள் மட்டும் தான் தமிழனுக்குச் சொந்தம் என்பதை ஐ.நாவும் உறுதிப்படுத்தும் வகை[illegible] அமைந்துள்ளன.

எனவே ஐக்கிய நாடுகள் சபையின் செப்டெம்பர் மாத அமர்வின் போது போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தும் கடப்பாடு சர்வதேச நாடுகளுக்கு உள்ளது. இது சர்வதேச நாடுகளின் முன்னால் உள்ள மிகப்பெரும் சவாலாகவும் கொள்ளமுடியும்.

ஈழத்தில் இனப்படுகொலை நடந்ததை மூடிமறைக்க முயற்சிக்காமல். தமிழினம் இன அழிப்பை சந்தித்தது உண்மையே என்பதை நிரூபிக்கும் வகையில் ஐ.நாவினதும் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளினதும் செயற்பாடுகள் அமைதல் அவசியம்.

நீதியைப் பெற்றுக்கொடுக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபையையும் அமெரிக்கா போன்ற நாடுகளையுமே ஈழத்தமிழர்கள் மலை போன்று நம்பியுள்ளனர். ஆனால் ஐ.நாவின் அண்மைய நடவடிக்கைகள் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதோடு காலங் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பானது என்பதை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை சுமத்திய ஆணையாளர், கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைப் புரியவும் இனிமேலாவது முன்வருதல் வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்தின் மீதும், ஐ.நா. ஆணையாளர் ஐக்கிய நாடுகள் சபை மீதும், அமெரிக்கா மீது இந்தியாவும், இந்தியா மீது பிரிட்டனும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதால் ஆகப் போவது ஒன்றுமில்லை.

போரில் கொல்லப்பட்ட அப்பாவி தமிழ் மக்களின் உயிர்களை மீட்டுக்கொடுக்க இனி எவராலும் முடியாது. ஆனால் நீதியைப் பெற்றுக் கொடுக்கவும் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்ற நியாயமான எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யுமிடத்தே இனப் படுகொலைகள் இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்த முடியும்.

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை குறித்து சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதோடு தமிழின அழிப்பு தொடர்வதை தடுத்து நிறுத்தி தமிழரின் இருப்பை நிலைநாட்ட சர்வதேசம் முன்வருவதோடு சனல் - 4 ஊடகம் வெளிப்படுத்தியுள்ள சந்தேகத்தை இல்லாமல் செய்து தமிழர் மத்தியிலும் அச் சந்தேகம் நிலைத்திருக்க செய்யாமல் நம்பிக்கையை ஏற்படுத்த காலதாமதமற்ற நடவடிக்கையினை ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாடுகள் எடுக்க வேண்டும்.

நீதி நிலை நாட்டப்படுமாகயிருந்தால் தான் ஐக்கிய நாடுகள் சபை மீது உலக மக்கள் நம்பிக்கை கொள்வார்கள். இல்லையேல் சட்ட மீறல்களும், மனித உரிமை மீறல்களும் அதிகரித்து இலங்கையில் இடம் பெற்றதைப் போன்று இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடும் அவலநிலை ஏற்படும்.

**காண்டீபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



**வெளிநாட்டு சுற்றுலா சென்ற அனுபவம் வியாசருக்கு உண்டோ?**

**ஒருவன் காதலிக்க அல்லது திருமணம் செய்ய பணமா, குணமா அவசியம்?**

**அப்துல் கலாமிடமிருந்து படிக்க வேணடிய படிப்பினை என்ன?**

யாழவன் — யாழ்ப்பாணம்

**தேர்தல் பிரசாரங்கள் எப்படி இருக்கின்றன?**

ஓ... அதை ஏன் கேட்கிறீர்கள். வீதியில் வந்து கொண்டிருந்தேன் ஒரு பெயர்ப்பலகையில் "நாடு 80 ரூபாய்" என எழுதியிருந்தது. நான் அதிர்ந்து போனேன். ஏதோ அரசியல் கட்சி அலுவலகம் என எண்ணி அண்ணார்ந்து பார்த்தேன் அது அரிசிக்கடை.

மதன் — நாவாந்துறை

**இறைவன் எங்கு இருக்கிறான்? தூணலா, துரும்பிலா?**

இறைவன் தூணிலும் இருக்கிறான் துரும்பிலும் இருக்கிறான் என்கிறார்களே. ஏன் அவர் மனித மனங்களில் கொஞ்சமேனும் இருப்பதில்லை என்பது தான் எமது கவலை.

டிலர்சனா — தோணிக்கல்

**அப்துல் கலாமிடமிருந்து படிக்க வேண்டிய படிப்பினை என்ன?**

அப்துல் கலாமிடமிருந்து என்பது தவறு. அப்துல் கலாமையே படிக்க வேண்டும் என திருத்திக் கொள்ளவும்.

அரவிந் — மல்லாகம்

**ஆண்களைவிட பெண்கள்தான் ரீ.வி. பார்ப்பது அதிகமாமே?**

நம் வீட்டில் ஒரு நாள் முழுவதும் ரீ.வி. ஓடிட்டே இருக்கும். அதை கண்டுக்காம நம்ம வேலையைப் பார்க்கிற நாமதான் சலூன் கடையில் ரீ.வியைப் வாயைப் பிளந்து பார்த்திட்டே இருப்பம்.

கௌரிகாந்தன் — கரணவாய்

**பொய்ப் பிரசாரம் செய்யும் அரசியல்வாதிகள் பற்றி?**

அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா...

அம்மு — யாழ்ப்பாணம்

**வெளிநாட்டு சுற்றுலா சென்ற அனுபவம் வியாசருக்கு உண்டோ?**

ம்ம்ம்... சுற்றுலாவுக்காக ஜப்பான் சென்றிருந்தோம். ஓர் ஹோட்டலில் சாப்பிட்டோம். சிக்கனில் புழு, புழு இருக்கிறது என கடைக்காரனுக்கு காட்டினோம். பாவிகள் புழுவுக்கும் சேர்த்து பில் போட்டு விட்டாங்கள்.



அபிநயா — கிளிநொச்சி

**தேவையில்லாமல் சந்தேகப்படுபவர்களைப் பற்றி?**

சந்தேகம் அன்பின் அதி உச்சம் என்கிறார்கள். அதிகம் அன்பானவர்களை நாம் சந்தேகப்படும் போது அன்பு கொண்ட அவரின் மனம் படும்பாட்டை அறிந்தால் ஒருவர் மற்றவரில் சந்தேகம் கொள்வதை நிறுத்திவிடுவார்.

பிரபு — தெல்லிப்பழை

**சின்னதா ஒரு தத்துவம் பிளீஸ்?**

ஐந்து வயதில மதர் சொல்லுறதையும் 25 வயதில் பிகர் சொல்லுறதையும் 50 வயதில் சுகர் சொல்லுறதையும் கேட்டே ஆகணும்.

கிருஷா

**காதலன் நம்மை அதிகம் நேசிக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

நிறையச் செய்யலாம். ஆனால் நினைவிழந்து எதையும் செய்து விடாமல் இருந்தால் சரி.




கருணா — கட்டுடை

**இப்போதைய அரசியல்வாதிகள் பற்றி?**

ஆட்சியைப் பிடிப்பதற்காய் மக்களுக்கு நல்லது கூடச் செய்யத் துணிவார்கள் இந்த அரசியல் வாதிகள்.

கலா — உடுவில்

**குடும்ப உறவுகளில் சில மாதங்களில் விரிசல் நிலை ஏற்படுகின்றதே?**

தண்டவாளங்கள் கூட சில நேரங்களில் விரிசல் அடைகின்றன. ஆனால் அதை சரிசெய்து விடும் மனிதன் குடும்ப உறவில் ஏற்பட்ட விரிசலை சரி செய்ய முடியாமல் கோர்ட் வரை செல்கிறான் என்பதுதான் கொடுமையிலும் கொடுமை.

கேதீஸ் — கல்வியங்காடு

**தகுதியை மீறி செயற்படுபவர்களை என்ன செய்யலாம்?**

தகுதிக்கு மீறி கடன் வாங்கினால் வட்டியாக மானத்தையும் சேர்த்து கட்டவேண்டி வரும்.

விது — வரணி

**நமக்கு தேவையான பொருள் எது? தேவையில்லாத பொருள் எது?**

பின்பு தேவைப்படும் பொருள் என நினைத்து பாதுகாப்பாக வைக்கப்படும் பொருள் தேவை ஏற்படும் போது மாங்கு மாங்கென்று தேடப்படும் பொருள் ஆகிவிடுகிறது.

வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி

**பயம் யாரைத் துரத்துகிறது?**

தற்போது தேர்தல் களத்தில் நிற்கும் அரசியல் வாதிகளை.

சேகர் — பண்டத்தரிப்பு

**ஒருவன் காதலிக்க அல்லது திருமணம் செய்ய பணமா, குணமா அவசியம்?**

அவற்றை விட முக்கியமானதும் சில இருக்கின்றது முதலில் அதைக் கண்டுபிடியுங்களேன்.

திவாகரன் — கட்டுடை

**கடை உணவுகளால் நோய்கள் ஏற்படுகிறதே. நிறுத்திவைக்க வழி உண்டா?**

வீட்டில் கோப்பையால் எறி வாங்குவதை விட இது ஒன்றும் பெரிய விடயமில்லையே. இதே கேள்வியை கேட்ட எனக்கு நண்பன் சொன்ன பதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org